
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 பெப்ரவரி 16 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 89 இல. 40 | February 16,Tuesday, 2021 | 20பக்கங்கள் | 30/-




## ஐ.தே.கவின் தேசிய பட்டியலுக்கு ரணில்?

### மார்ச் முதல் வாரம் பதவியேற்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமைக்காக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் பதவியேற்கவுள்ளதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமைக்காக அவரை பெயரிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

எனினும், ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானம் கிடைக்கும் வரையில் அந்த நடவடிக்கை தாமதமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த மாத இறுதிக்குள் குறித்த தீர்மானம் கட்சிக்கு அறியப்படுத்தப்படும் என்றும் 06

## லொகுபண்டார மறைவு ஜனாதிபதி, பிரதமர் அனுதாபம்

### சுகாதார வழிமுறைபடி நேற்று உடல் தகனம்



முன்னாள் சபாநாயகரும், அமைச்சரும், ஆளுநருமான வி.ஜ.மு.லொகுபண்டாரவின் இறுதிக் கிரியை நேற்று கொடிகாவத்தை பொதுமயானத்தில் இடம்பெற்றது.

கொரோனா தொற்றுக்காக சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

அவரின் உடல் நேற்று சுகாதார வழிமுறைகளை பின்பற்றி தகனம் செய்யப்பட்டது.

அவரின் திடீர் மறைவு தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பலரும் அனுதாபம் தெரிவித்துள்ளனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அனுதாபச் செய்தியில்,

வி.ஜ.மு.லொகுபண்டார அவர்கள் ஒரு அரசியல்வாதியாக தனது தாய்நாட்டின் அபிலாஷைகளை நிறைவேற்ற விலைமதிப்பற்ற சேவையாற்றியவராவார்.

பொது சேவையை மிகவும் உன்னதமாகக் கருதிய அவர், இந்நாட்டின் பல அரசியல் யுகங்களின் அழியாத நினைவாக திகழ்வார். நாட்டையும் தேசத்தையும் உன்னதமாக மதிப்பளித்து செயற்பட்ட வி.ஜ.மு.லொகுபண்டாரவின் அரசியல் நோக்குநிலையும் அதே போன்று உன்னதமானதாகும். ஒரு அரசியல்வாதியாக மாத்திரமன்றி, ஒரு நெருங்கிய 06



"கேகுலு துரு உதானய" சிறுவர் மரம் நடுகை தேசிய திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் கம்பொல அட்டபாகே விமலதர்ம தேசிய பாடசாலை வளாகத்தில் நேற்று நடைபெற்றது. ஜனாதிபதி, சிறுவர்களுடன் இணைந்து மரம் நடுவதை காணலாம்.

### இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி;

# பொது மக்களுக்கு வழங்க ஜனாதிபதி விசேட பணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

### இரண்டரை இலட்சம் தடுப்பூசிகளை வழங்கும் திட்டம் ஆரம்பம்
### இராணுவத்தளபதி சவேந்திர சில்வா நேற்று தெரிவிப்பு



இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை சாதாரண மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விஷேட பணிப்புரை விடுத்துள்ளதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க அவசியத் தேவையுடையோருக்கு நேற்று முதல் மேல் மாகாணத்திலிருந்து அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட தடுப்பூசிகளில் இரண்டரை இலட்சம் தடுப்பூசிகளை சாதாரண மக்களுக்கு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக குறிப்பிட்ட அவர், அது தொடர்பில் விசேட மருத்துவ நிபுணர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி தடுப்பூசிகளில் இரண்டரை இலட்சம் தடுப்பூசிகள் முன்னணி சுகாதாரத்துறை ஊழியர்கள், டாக்டர்கள் மற்றும் முப்படையை சேர்ந்தவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்ட இராணுவத்தளபதி, அவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி 12 வாரங்களுக்குள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முதற் கட்டமாக நாட்டில் 9 மில்லியன் மக்களுக்கு 06

## காணாமல் போனோர் அலுவலகம் தொடர்ந்தும் இயங்குவது அவசியம்



**எஸ். நிசாந்தன்**

நாட்டில் இடம்பெற்ற போரின் பின்னர் அக்காலப்பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள், இழப்புக்கள் தொடர்பில் ஆராய்வதற்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பல்வேறு ஆணைக்குழுக்களும் காரியாலயங்களும் உருவாக்கப்பட்டன. காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பன உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறுவதுடன் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் 06

## எம்.பிகளுக்கு இன்று கொரோனா தடுப்பூசி



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று கொவிட் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் வைத்து எக்ஸ்ரா செனெகா தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இன்று முதல் நான்கு தினங்கள் 225 எம்.பிகளுக்கும் இந்த தடுப்பூசி வழங்க இருப்பதாக படைக்கள சேவிதர் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தினால் ஒரு தொகை கொரோனா தடுப்பூசி இலங்கைக்கு வழங்கப்பட்டதோடு சுகாதார தரப்பு, பாதுகாப்பு தரப்பு என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் தேவையுள்ளவர்களுக்கும் 06

### அமைதிக்கான நோபல் பரிசு;

## ரஞ்சித் ஆண்டகையின் பெயர் பரிந்துரைப்பு



கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த ஆண்டு இரண்டாவது முறையாக அமைதிக்கான நோபல் பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

நோர்வேயில் வசிக்கும் இலங்கைப் பிரஜையும், பெற்றோலிய புவியியலாளருமான டாக்டர் அமர ரணவீர என்பவரே மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை இவ்வாறு 06

## ஜப்பானில் 3,60,000 பேருக்கு தொழில் வழங்க தூதரகம் ஊடாக நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்தன



**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

ஜப்பான் நாட்டு தூதரகத்தின் ஒழுங்கமைப்பில் 3,60,000 நபர்களுக்கான தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு அமைச்சின் ஊடான நடவடிக்கைகள் இவ் வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும். இதற்கு இணைவாக கனடா நாட்டு தூதரகத்தின் மூலமாக தொழில்வாய்ப்பு பெற்றுக்கொள்வதற்கான 06

### மக்கள் எழுச்சி பேரணி;


## யாழ். மேயருக்கு எதிராகவும் வழக்கு



பொத்துவில் முதல் பொலிகண்டி வரை இடம்பெற்ற மக்கள் எழுச்சிப் பேரணியில், நீதிமன்ற கட்டளையை மீறி யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கலந்துகொண்டமையினால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் நீதிமன்றில், யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கு பதில் நீதவான் முன்னிலையில் நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு 06

## ஆளுநர் முஸம்மிலின் புதல்வி இங்கிலாந்து தேர்தலில் போட்டி



இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஷஸ்னா முஸம்மில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள மில்டன் கெய்ன்ஸ் கவுன்சில் (Milton Keynes Council) 06

## எவரும் வரலாம் எவரும் போகலாம்

### எமது பயணம் தொடரும்



எவரும் வரலாம், எவரும் போகலாம். எங்கள் முற்போக்குப் பயணம் தொடருமென்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரது முகநூல் பதிவு வருமாறு: 06

## வெட்டுப்புள்ளி சிக்கல் அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில் கையளிப்பு

### பேராசிரியர் கபில பெரேரா தெரிவிப்பு



2020 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தி பெற்ற மாணவர்களைப் பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்காக வெளியிடப்பட்டுள்ள வெட்டுப்புள்ளி வழங்குவது தொடர்பிலான சிக்கல் குறித்து கல்வி அமைச்சினால் தயாரித்த அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

வெட்டுப்புள்ளி அளவைக் 06

## மாவீரர் நாளில் முகநூலில் பதிவிட்டோர் இன்னும் சிறையில்!

### உசுப்பேற்றியோர் அரச பாதுகாப்புடன் சொகுசு வாழ்வு



மாவீர நாளில் முகப் புத்தகங்களின் பதிவிட்டவர்கள் சிறையில் உள்ளார்கள். இவர்களை உசுப்பேத்தியவர்கள் இன்று அரசாங்க பாதுகாப்புடன் திரிகின்றார்கள். ஆனால் இவர்களின் பெற்றோர்கள் கண்ணீருடன் சிறைச்சாலை சென்று வருகின்றார்கள்.

இப்போது இருக்கும் தலைமுறையாவது நிம்மதியாக சந்தோசமாகஇழப்புக்களைசந்திக்காமல் வாழ வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார். வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 06

## பாரதிய ஜனதா கட்சி கிளை இலங்கையில்

### இந்திய அமைச்சர் அமித்ஷா அறிவிப்பு



இலங்கையிலும் பாரதிய ஜனதா கட்சியை அமைக்க திட்டமிட்டுள்ளதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இடம் பெற்ற மக்கள் 06

## பாடசாலை சென்ற முதல் நாள் பலியான மாணவன்

### பதுளையில் நேற்று சோகச் சம்பவம்



பதுளையில் நேற்று (15) காலை இடம்பெற்ற விபத்தில் 6 வயது பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதுளை, அசேலபுர பகுதியை சேர்ந்த சிவனேசன் வருன் பிரதீப் எனும் 6 வயதுடைய குறித்த மாணவன் பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தில் முதலாம் தரத்தில் இணைவதற்காக அவருடைய பாட்டி மற்றும் இரட்டை சகோதரருடன் சென்று 06

### தூக்கத்தில் இறந்த 26வயது இளைஞனின் வழக்கு;

## கொரோனாவினால் இறந்தவரை தகனம் செய்ய இடைக்கால தடை

### இரண்டாவது பி.சி.ஆர் சோதனை அனுமதி குறித்து மேல்முறையீட்டு நீதிமன்று கவனம்



கொரோனா தொற்றால் உயிரிழக்கும் ஒருவரின் உடலில் இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனையை நடத்துவதற்கு அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று பரிசீலிக்கப்பட்டது. சடலத்தை தகனம் செய்வதை நிறுத்துமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவிட்டது.

தூக்கத்தில் உயிரிழந்த கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த 26 வயது பிசியோதெரபிஸ்ட் ஆன இர்சாத் சார்பில் இந்த 06

## பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புக்கள் வடக்கில் கிழக்கில்

### மீண்டும் தலைதூக்க இடமளியோம் என்கிறார் கெஹலிய



**அமீனுல்லா**

வடக்கு, கிழக்கில் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புக்கள் பல உருவாகியுள்ளன என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, “தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை 06

### விக்கல் வீராச்சாமி



யாழ்ப்பாணத்தில 10 தமிழ் கட்சிகள் கூடி 3 முக்கிய முடிவுகளை எடுத்திருக்காம், கேட்கவே பயமா இருக்கு.....

நீங்க வேற, ஏதாவது பிரச்சினை வரும் போது கூடுவதும், கோஷம் இடுவதும், பிறகு ஒண்டும் இல்லாத மாதிரி கலைந்து தங்களுக்குள் சண்டை பிடிப்பதுதான் இவர்களது வேலை...!!!

# புதிய கொரோனா தொற்றாளர் உள்ள பகுதிக்கு பயணக் கட்டுப்பாடுகள்

## விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் இனங்காணப்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் வசிக்கும் பகுதிகளில் பயணங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இப் பகுதிகளுக்கு வெளியே வைரஸ் பரவுவதை குறைப்பதற்காக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். புதிய வகை கொரோனா வைரஸ் வேகமாக பரவுகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்புடன் நடந்து கொள்வது அவசியமாகும் என்றார்.

இதேவேளை பிரித்தானியாவில் வேகமாக பரவிவரும் புதிய வகை கொரோனா வைரஸ், கொழும்பு, அவிசாவளை, வவுனியா மற்றும் பியகம ஆகிய பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்தியர் சந்திம ஜீவந்தர கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் தொடர்பாக தகவல் தருபவர்களுக்கு சன்மானம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

லோரன்ஸ் செல்வநாயகம்

பொலிசார் தொடர்ந்தும் போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கமைய, 118 , 119 மற்றும் 1997 என்ற இலக்கங்களை தொடர்பு கொண்டு பொதுமக்கள் போதைப் பொருள் கடத்தல் செயற்பாடுகள் தொடர்பில் தகவல்களை வழங்க முடியும். அவ்வாறு தகவல்களை வழங்கும் நபர்களுக்கு சன்மானம் வழங்கவும் பொலிசார் எதிர்பார்த்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். மேலும் கூறுகையில்,

கஹதுட்டுவ பகுதியில் திட்டமிட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, 222 கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொட்டுபொல மற்றும் கஹதுட்டுவ பகுதியைச் சேர்ந்த 26,46 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, பிளியந்தலை பகுதியில் பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 2 கிராம் 560 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

புலத்சிங்கள பகுதியில் பொலிசாரின் சோதனை நடவடிக்கைகளின் போது 7 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கந்தவாடி மற்றும் புலத்சிங்கள ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 36, 43 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 5,000 கோடி பெறுமதியான வெளிநாட்டு இனிப்பு பண்டங்கள் நாட்டுக்கு இறக்குமதி

நாட்டு மக்கள் ஒரு வருடத்தில் சுமார் 5,000 கோடி ரூபா பெறுமதியான வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி மற்றும் இனிப்பு பண்டங்களை பயன்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள 2020 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பெரும்பாலான பொருட்களுக்கான இறக்குமதி செலவு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது.

இருப்பினும், சீனி மற்றும் இனிப்பு பண்டங்களுக்கான இறக்குமதி செலவு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. இதற்காக 75.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து சீனி மற்றும் இனிப்பு பண்டங்களை நாட்டுக்கு கொண்டு வருவதற்காக 2019 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 201.2 அமெரிக்க மில்லியன் டொலர்களாகும். இருப்பினும் இத்தொகை கடந்த வருடத்தில் 277.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருப்பதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இலங்கை நாணயத்தில் சுமார் 50 ஆயிரம் மில்லியன் என்று கணிப்பிடப்படுகின்றது. இது 37.7 % அதிகரிப்பாகும்.

இதேவேளை எரிபொருளுக்கான இறக்குமதி செலவு 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் மசகு எண்ணெய் ,சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகியவற்றை நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்காக 3891.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தில் 2541.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளது. அதாவது 34.7 மில்லியனாக குறைவடைந்துள்ளது.

தனியார் வாகன இறக்குமதி 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் 65% குறைவடைந்துள்ளமை விசேட அம்சமாகும். 2019 ஆம் ஆண்டில் தனியார் வாகன இறக்குமதிக்காக 815.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் இத்தொகை 282.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளதாக இலங்கை வங்கியின் புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட தனியார் வாகன இறக்குமதிக்கான செலவு 0.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்

# இலங்கைக்கு கடத்தவிருந்த மூக்குப் பொடிகள் மீட்பு

மாங்குளம் குறூப் நிருபர்



இராமேஸ்வரம் மண்டபம் அருகே உள்ள வேதாளை கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கள்ளத்தோணியில் கடத்த இருந்த 30 கிலோ மூக்குப் பொடி பண்டல்கள் மண்டபம்; சுங்கத்துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் தொடர்புடையவர்களை கடலோர காவல் குழும பொலிசார் தேடி வருகின்றனர். நான்கு வருடத்திற்கு பின் மீண்டும் இராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் இருந்து மூக்கு பொடிகள் இலங்கைக்கு கடத்த இருந்த சம்பவம் உளவுத்துறை மற்றும் கடலோர பாதுகாப்பு குழும அதிகாரிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே உள்ள வேதாளை குயவன் தோப்பு பகுதியில் இருந்து இலங்கைக்கு மூக்கு பொடி பண்டல்கள் கடத்த இருப்பதாக இராமேஸ்வரம் சுங்கத்துறை கண்காணிப்பாளர் சுரேஷ்க்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுங்கத் துறை அதிகாரிகள் குழுக்களாக பிரிந்து வேதாளை கடற்பகுதியில் ரோந்து மேற்கொண்டனர்.

அப்போது வேதாளை குயவன் தோப்பு கடற்கரையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த நாட்டுப்படகு ஒன்றை சோதனை செய்ய முற்பட்டபோது சுங்கத்துறை அதிகாரிகள் வருவதை கண்ட கடத்தல் காரர்கள் இரண்டு பண்டல்களை கடற்கரையில் தூக்கி வீசி விட்டு தப்பி சென்றனர்.

இதனை கண்ட சுங்கத்துறை அதிகாரிகள் அந்த பெரிய பண்டல்களை கை பற்றாமல் கடத்தல்காரார்கள் மீண்டும் அந்த பண்டல்களை எடுக்க வந்தால் அவர்களை பிடிக்க கடற்கரையில் சுங்கத்துறை அதிகாரிகள் இரவு முழுவதும் மறைந்திருந்தனர். அதிகாலை வரை பண்டல்களை எடுக்க யாரும் வராததால் கடற்கரையில் கிடந்த 2 பெரிய பண்டல்களை கைப்பற்றிய மண்டபம் சுங்கத்துறை அதிகாரிகள் மண்டபத்தில் உள்ள சுங்கத்துறை அலுவலகத்துக்கு எடுத்து வந்தனர். கைப்பற்றப்பட்ட 2 பண்டல்களில் 100 அட்டைபெட்டிகளில் சுமார் 30 கிலோ மூக்கு பொடிகள் இருந்துள்ளன. மேலும் சுங்கத்துறை அதிகாரிகளை கண்டதும் தப்பிச் சென்ற இச்சம்பவத்தில் தொடர்புடையவர்களை மண்டபம் கடலோர காவல் குழுமம் மற்றம் உளவுத்துறை அதிகதாரிகள் கடற்கரை ஓர கிராமங்களில் தேடி வருகின்றனர்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

மீகஹாதென்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஹட்டகல்ல போதலாவ பகுதியில் நேற்று முன்தினம் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவத்தில் மீகஹாதென்ன போதலாவ பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளதாக பொலிசார் அடையாளம் கண்டுள்ளனர். உயிரிழந்த நபருக்கும் , பிறிதொரு நபர்களுக்குமிடையில் நீண்ட நாட்களாக காணப்பட்ட தனிப்பட்ட முரண்பாட்டின் காரணமாகவே இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வரை அடையாளம் கண்டுள்ள பொலிசார் , அவர்களுள் ஒருவரை கைது செய்துள்ளனர். ஏனையவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான முன்னாள் உயர் ஸ்தானிகர் செய்யித் ராத் அல் ஹுசேனின் இலங்கை விஜயத்தின் போது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டம் நடத்தியமை தொடர்பில் அமைச்சர் விமல் வீரவங்ச உள்ளிட்ட 07 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 21ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நீதவான் புத்திக ஸ்ரீ ராகலவினால் நேற்று இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்படி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு பெப்ரவரி 06ஆம் திகதி ஹவ்லொக் வீதியை மறித்து நடத்தப்பட்ட போராட்டத்தின் காரணமாக இவர்களுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் கடத்தல் கொழும்பில் உதவியாளர் கைது

சுரேஸ்

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வரும் அசங்க என்பவரின் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கூறுகையில், கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் நேற்று முன்தினம் மத்திய ஊழல் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது 25 கிராம் 5 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 6,15, 000 ரூபா பணத்துடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் துபாயிலிருந்து போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் 'அசங்க' என்ற நபரின் உதவியாளராக செயற்பட்டு வருபவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

# ஒரே நேரத்தில் இரு தோட்டா; துப்பாகியுடன் ஒருவர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்



ஒரே நேரத்தில் இரண்டு தோட்டாக்களை வெளியேற்றக் கூடிய துப்பாக்கியை உருவாக்கிய ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மொனராகலை பகுதியில் நேற்று முன்தினம் பாணந்துறை மத்திய ஊழல் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது உள்நாட்டு துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ரி 56 ரக துப்பாக்கி தோட்டாக்களை பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த துப்பாக்கியில், ஒரே நேரத்தில் இரு தோட்டாக்களை வெளியேற்றக் கூடிய வசதியும் காணப்படுகின்றதெனவும், வெல்லவாய பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளாரெனவும் தெரியவந்துள்ளது.

# பாவனைக்கு உதவாத குடிபானம் மீட்பு

மனித பாவனைக்கு உதவாத வகையில் குறைந்த தரத்தில் தயாரித்து விற்பனை செய்யப்பட்ட 1,146 குடிபான போத்தல்களை மட்டக்களப்பில் சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது கைப்பற்றியுள்ளதாக கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

குடிபானம் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றினால் தயாரிக்கப்பட்ட இப்பானங்களில் சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட அளவிலான நிறமூட்டிகள் சேர்க்கப்படாமையே இதற்கான காரணமாகும்.

கைப்பற்றப்பட்ட பான போத்தல்கள் இன்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொது சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# ஐ.நா அமைதிகாக்கும் பணிகளுக்கான தயார்படுத்தல் பயிற்சிகள் ஆரம்பம்

பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் அறிவுறுத்தலுக்கமைய முன்னெடுக்கப்படும் ஐ.நா அமைதிகாக்கும் பணிகளுக்கான தயார்படுத்தல் பயிற்சியான'ஹர்மடான் 3' கள பயிற்சிகள்,12 ஆம் திகதி யாழ்ப்பாணம் மயிலடி பகுதியில் ஆரம்பமானது.





இந்த ஐந்துநாள் பயிற்சிகள் யாழ்ப்பாணத்திலிருந்து மின்னேரியா வரையிலான 457.2 கிலோமீற்றர் தூரத்துக்கு முன்னெடுக்கப்பட உள்ள நிலையில் இரண்டாவது நாளான ஞாயிற்றுக்கிழமை 158 கிலோ மீட்டர் தூரம் பயணித்து நாயாறு பகுதியை அமைதிகாக்கும் படையினர் சென்றடைந்தனர்.

ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் பணிகளின்போது மாலி மற்றும் காவோ பிரதேசங்களில் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படையினரால் முன்னெடுக்கப்படவுள்ள பணிகள் தொடர்பான முன்பயிற்சிகளை வழங்கும் நோக்கிலேயே இந்த பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப கள பயிற்சியில் கஜபா படையணி, இலங்கை படைக்கலச் சிறப்பணி, சமிக்ஞை படையணி, இயந்திரவியல் படையணி, பொறியியல் சேவை படையணி, இலங்கை இராணுவ சேவை படையணி, இராணுவ வைத்தியப்படையணி, இலங்கை உபகரணப் படையணி, இலங்கை மின்னியல் மற்றும் பொறியியல் படையணி, இலங்கை இராணுவ பொலிஸ் படையணி, இராணுவ பொதுச் சேவைப் படையணியை பிரதிநிதித்துவப்படுத்தி 20 அதிகாரிகள் மற்றும் ஏனைய இராணுவச் சிப்பாய்கள் 223 பேரும் கலந்து கொண்டனர்.

கவச வாகனங்கள் 06, யுனி பபல் ரக வாகனங்கள் 06, பொருள்கள் விநியோகத்துக்கான 19 வாகனங்கள் உள்ளடங்களாக 47 இராணுவ வாகனங்கள் இந்த களப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதன்படி ஹர்மடான்3 களப் பயிற்சிக்கான வாகனங்கள், மயிலடி, பருத்தித்துறை, நகர்கோவில்,வெத்தலகேணி, பரந்தன் விஸ்வமடு, புதுகுடியிருப்பு, முல்லைத்தீவு, நாயாறு, வெலிஓயா,பதவிய, புல்மோட்டை, தாவல் குளம்,கோமரங்கடவல, திருகோணமலை, கிண்ணியா, மூதூர் சேறுநுவர, கந்தகாடு, புலத்சிகம, பொலன்னறுவை,கிரிதளை ஊடாக இன்று மின்னேரியா காலாட் படை பயிற்சிப் மையத்தை சென்றயும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாவுடன் இருவர் கைது

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு வவுனியா இறம்பைக்குளம் மற்றும் ஆச்சிபுரம் பகுதிகளில் பொலிசாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே ஒரு கிலோ 300 கிராம் கேரளகஞ்சாவுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 பெப்ரவரி 16 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

இன்றைய சுபதினம்
சார்வரி வருடம் புரட்டாதி 27
ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: மரணசித்த யோகம்
நட்சத்திரம்: ரேவதி காலை 9.34
திதி: துவிதியை

தொழுகை நேரம்
07 முதல் 08 வரை

| | |
|---|---|
| சுபஹ் | - 04.43 |
| லுஹர் | - 12.01 |
| அஸர் | - 03.16 |
| மஃரிப் | - 06.01 |
| இஷா | - 07.11 |



# நீர் வழங்கல் திட்டங்களை துரிதப்படுத்தி 2024 இல் நிறைவு செய்ய பணிப்புரை

வடமேல், மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கான நீர் வழங்கல் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (15) கேட்டறிந்து கொண்டார்.

இம்மாகாணங்களுக்கான நீர் வழங்கல் திட்டங்களின் முன்னேற்றம், அவற்றை துரிதமாக செயற்படுத்த வேண்டிய முறை மற்றும் 2024ஆம் ஆண்டளவில் அவ்வனைத்து திட்டங்களையும் நிறைவு செய்தல் தொடர்பில் அலரி மாளிகையில் கலந்துரையாடலொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் நீர்ப்பாசனத்துறை அமைச்சினால் ஓராண்டில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் புதிய நீர் இணைப்புகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. எனினும் புதிய அரசாங்கத்தின் கீழ் ஓராண்டில் 4 இலட்சம் புதிய நீர் இணைப்புகள் வரை வழங்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரியத் பந்து விக்ரம இதன்போது சுட்டிக்காட்டினார்.

2021ஆம் ஆண்டு முதல் 5 இலட்சம் புதிய நீர் இணைப்புகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.அத்துடன், எதிர்காலத்தில் புதிய நீர் இணைப்புகளை வழங்குவதை நெறிப்படுத்தி, வீதிகளை உடைத்து தண்ணீர் குழாய்கள் பொறுத்தப்படாது, அதற்கு பதிலாக, சுரங்கப்பாதை வழியாக குழாய்களை பொறுத்துவதன் மூலம் நீர் இணைப்புகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் கலாநிதி பிரியத் பந்து விக்ரம தெரிவித்தார்.

வீதிகளை உடைத்து குழாய் அமைப்புகளை இடும்போது புதிய நீர் இணைப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் சுமார் நாற்பது சதவீதம் இழப்பீட்டுக்காக செலவிடப்படுவதாகவும், சுரங்க முறையை கையாள்வதன் மூலம் அப்பணத்தை சேமிக்க முடியும் என்றும் செயலாளர் கூறினார்.



இதுவரை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மாதாந்த வருவாய் 28 மில்லியனாக காணப்படுவதுடன், எதிர்காலத்தில் அதனை 40 மில்லியன் வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாக இச்சந்திப்பில் கலந்துகொண்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்க அவர்கள் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கு புதிய அரசாங்கத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது குறிப்பிட்டார்.


குறித்த சந்திப்பில், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆட்டிகல, நீர்ப்பாசனத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரியத் பந்து விக்ரம, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்க உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## குடிநீர் வசதியற்ற பாடசாலைகளுக்கு துரிதமாக குடிநீர் வழங்க பணிப்புரை

குடிநீர் வசதியில்லாத பாடசாலைகளுக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போது இலங்கையில் பல பிரதேசங்களில் இந்நிலைமை காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும் இது தொடர்பாக முக்கியத்துவம் வழங்கி விரைவாக தீர்வினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

நீர் வழங்கல் அமைச்சில் நடைபெற்ற முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு கூட்டத்தில் இது தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்பட்டது. ஏற்கனவே மாகாண கல்விப் பணிப்பாளர்களிடம் குடிநீர் வசதிகளற்ற பாடசாலைகளை கண்டறிந்து அறியத்தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி வேலைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.



இந்த நீர் விநியோகத்துக்கு தேவையான உபகரணங்களை நீர் வழங்கல் சபை மற்றும் நீர் வழங்கல் திணைக்களம் மூலம் பெற்றுக் கொடுக்கவும் பாடசாலை அபிவிருத்தி சபையால் தொழிலாளர்களின் பங்களிப்பை பெற்றுக்கொடுப்பதன் மூலம் விரைவாக நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக கல்வியமைச்சின் செயலாளரினது ஒப்புதலும் ஒத்துழைப்பும் கிடைக்குமென நீர் வழங்கல் அமைச்சரின் செயலாளரும் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருட்களுக்கு உத்தரவாத விலை

## சதொச வருமானத்தில் பாரிய அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



அத்தியாவசிய பொருட்கள் 27 இற்கான நிர்ணய விலை பிரகடனப்படுத்தியுள்ள நிலையில் சதொச விற்கான வருமானம் 102 வீதத்தால் அதிகரித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி நிர்ணய விலை நடைமுறைப்படுத்தப்பட்ட முந்தைய தினத்தில் 82 மில்லியனாக இருந்த தின வருமானம் நிர்ணய விலை நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்று நாட்களில் 166 மில்லியன் ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நாட்டின் தேசிய உற்பத்தியாளர்கள் மற்றும் நேரடி அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்களுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டார். மூன்று மாத காலங்களுக்கு நிர்ணய விலையில் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொடுப்பதே அதன் நோக்கமாகும். அதன் மூலம் நுகர்வோரின் உரிமை மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விநியோகத்தர்களையும் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

06

## குவைத்திலிருந்து புதிய விமான சேவை ஆரம்பம்

குவைத் பட்ஜெட் கேரியர் ஜசீரா ஏயர்வேஸ் நிறுவனம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு புதிய விமான சேவையை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

அதன்படி மத்திய கிழக்கில் விமான சேவை வழங்கும் இடங்களுக்கான இணைப்புகளுடன் குவைட் மற்றும் கொழும்பு இடையே வாரத்திற்கு இரண்டு முறை நேரடி விமான சேவையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பயணிகள் பாதுகாப்பாக பயணிப்பதை உறுதி செய்வதற்காக ஜசீரா ஏயர்வேஸ் தனது விமானத்திலும் குவைட்டில் உள்ள ஜசீரா டெர்மினல் டி 5 யிலும் ஒவ்வொரு பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

குறித்த விமான அட்டவணையின்படி, செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் குவைட் சர்வதேச

06

## தேங்காய் தலையில் விழுந்து 15 வயது சிறுமி மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

தேங்காயொன்று தலையில் விழுந்து படுகாயமடைந்த 15 வயதான சிறுமி ஸ்தலத்திலேயே மரணமான சம்பவம் ஒன்று கொடக்கவெல வெல்பொனியாய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இச் சிறுமி தனது தாயுடன் முற்றத்தில் நடந்து செல்கையில் அருகில் இருந்த தேங்காய் மரத்திலிருந்து சிறுமியின் தலையில் ஒரு தேங்காய் விழுந்ததால் நேற்று முன்தினம் இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அஹிம்சா தெவ்மினி என்ற 15 வயதுடைய பாடசாலை சிறுமியே இவ்வாறு மரணமடைந்துள்ளார். படுகாயமடைந்த சிறுமி வைத்தியசாலைக்கு எடுத்து சென்ற போதிலும் அவர் மரணமடைந்திருந்தார் என வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

## திண்மக் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி மின் உற்பத்தி

உத்தியோகபூர்வமாக நாளை திறப்பு

(மர்லின் மரிக்கார்)

திண்மக் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யப்படும் இலங்கையின் முதலாவது மின் உற்பத்தி நிலையம் நாளை 17 ஆம் திகதி ஹெந்தல, கெரவலப்பிட்டியவில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட உள்ளது.

மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் அழைப்பின்பேரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இம் மின்னுற்பத்தி நிலையத்தைத் திறந்து வைக்கின்றார்.

இம்மின்னுற்பத்தி நிலையத்தின் ஊடாக தினமும் 700 தொன் திண்மக் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி நாளாந்தம் 10 மெகாவார்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சின் அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய வேலைத்திட்டத்தில் உள்நாட்டு மின் தேவையை நிறைவேற்றுவதற்கு புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பயன்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அந்தடிப்படையில் திண்மக் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யும் முதலாவது நிலையம் நாளை திறக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

06

## முஸ்லிம் சேவை "பாரம்பரியத்தில்" "மலாய் மஞ்சரி"

இன்று (செவ்வாய்) இரவு 8.15 மணியளவில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் "மலாய் மஞ்சரி" நிகழ்ச்சியின் பாரம்பரியம் நினைவுகூரப்படும்.



2006 இல் இருந்து இன்றுவரை மலாய்மஞ்சரி நடாத்திவருபவரும், ஸஹர் நிகழ்ச்சியில் மலாய் மொழி மூலம் சன்மார்க்க உரை நிகழ்த்துபவருமான அல்ஹாஜ் மௌலவி அஸ்லம் அன்ஸாரீன் அவர்களும், 1989இல் இருந்து அண்மை காலம் வரை மலாய் மஞ்சரி நடாத்தியவருபவரும், கலைஞருமான கலாபூஷணம் எம்.எச்.என். இம்ரான்தீன் அவர்களும் மலாய் சமூகத்திலிருந்து அதிதிகளாக கலந்து கொண்டு மலாய் மஞ்சரியின் நினைவுகளை பரிமாறிக்கொள்கிறார்கள். நிகழ்ச்சியினை கலாபூஷணம் எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவைப்பணிப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினோஸியா தயாரித்தளிக்கிறார்.



## மாணவருக்கான புலமைக் கதிர்

எதிர்வரும் 19ஆம் திகதி முதல் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் தினகரனுடன் வெளிவருகின்றது 'புலமைக் கதிர்'. தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு பயன் தரும் வகையில் மாதிரி வினாக்களின் இலவச இணைப்பு.

(ஆசிரியர்: எஸ்.ஏ.சந்திரபவன் – கொழும்பு இந்துக் கல்லூரி)

## பதவியை விட்டுக்கொடுத்தார் இம்தியாஸ் பாக்கிர்மாக்கார்

### இணைத் தலைவர்களாக பிமல், அதாவுட தெரிவு

பலஸ்தீனத்துடனான ஒருமைப்பாட்டுக்கான இலங்கைக் குழுவின் கூட்டம் கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. இதில் சமூக, அரசியல் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். இலங்கைக்கான பலஸ்தீன நாட்டு தூதுவரும் இதில் பங்கேற்றார்.

06



## வெளிநாட்டு முகவர்களாக செயற்படும் வடக்கு தமிழ் அரசியல்வாதிகள்

லோரன்ஸ் செல்வநாயகம்

வடக்கின் தமிழ் அரசியல்வாதிகள் சில வெளிநாட்டு முகவர்களாக செயல்படுவதாக யாழ்.சிவில் அமைப்புகள் கேந்திர நிலையம் குற்றம் சாட்டுகிறது. அவ்வாறு செயற்படும் தமிழ் அரசியல்வாதிகள் நாட்டில் இனவாதம் மற்றும் மதவாதத்திற்கு தூபமிட்டு வருவதாகவும் அந்த அமைப்பு குற்றம் சாட்டுகிறது.

மேற்படி அமைப்பின் இணைப் புச் செயலாளரான அருண் சித்தார்த்தன் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பொன்றில் அது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின்போது குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கூறி தற்போது ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவுக்கு செல்வது விந்தையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுமக்களின் காணிகளை தொல்பொருள் இடங்களாக தெரிவித்து அவற்றை அபகரிப்பதாகவும் தமிழ் அரசியல்வாதிகள் கூறி வருகின்றனர். அதன் மூலம் மக்களுக்கு அவர்கள் தவறான செய்தியையே வழங்குகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து

06

## நாணய மாற்று


| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு

தன்னோடு நெருக்கமானவர்களின் குற்றத்தையும் அவர் இல்லாத நேரம் பேசும் இயல்புடையவர்கள், அயலார் காரியத்தில் என்னதான் பேசமாட்டார்கள்!.

## கொவிட் 19 தொற்றினால் உயிரிழந்த இலங்கையின் முதல் அரசியல்வாதி

கொவிட்19 தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் முன்னாள் சபாநாயகரும், இலங்கையின் சிரேஷ்ட அரசியல்வாதியுமான டப்ளியூ.ஜே.எம். லொக்கு பண்டார நேற்றுமுன்தினம் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொட்டிகாவத்தை பொதுமயானத்தில் நேற்று இடம்பெற்றன.

கொவிட்19 தொற்று காரணமாக இலங்கையில் உயிரிழந்த முதலாவது சிரேஷ்ட அரசியல் தலைவராக விளங்குகின்றார் இவர். இவரது மரணம் பல்வேறு மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.

1941 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி ஹப்புத்தளையில் பிறந்த டப்ளியூ.ஜே.எம். லொக்கு பண்டார பேராதனை பல்கலைக்கழகப் பட்டதாரி என்பதோடு, ஒரு சட்டத்தரணியுமாவார். இவர் சட்ட வரைஞர் திணைக்களத்தில் உதவி சட்ட வரைஞராகக் கடமையாற்றியுள்ளார்.

1977 இல் அரசியலில் பிரவேசித்த இவர், பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தின் ஹப்புத்தளை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன் ஊடாக அமைச்சரவை அந்தஸ்து அற்ற உள்நாட்டு வைத்தியத்துறை அமைச்சராக நியமனம் பெற்றார். அதனைத் தொடர்ந்து மூன்று தசாப்தங்களுக்கும் மேல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ள இவர் கல்வி, கலாசாரம், வெகுஜன ஊடகம், நீதி, சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருங்கிணைப்பு, புத்த சாசனம் ஆகிய அமைச்சு பதவிகளையும் வகித்துள்ளார். அத்தோடு எதிர்க் கட்சி பிரதம கொரடாவாகவும் பணியாற்றி இருக்கும் இவர், 2004 ஏப்ரல் முதல் சபாநாயகராகப் பதவி வகித்தார். அதன் பின்னர் சப்ரகமுவ ஆளுனராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

இவ்வாறு பல பதவிகளையும் வகித்துள்ள இவர், நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். அரசியலில் நீண்ட காலம் அனுபவம் பெற்றுள்ள அரசியல்வாதியான இவர், சிறந்த எழுத்தாளருமாவார். இவர் பல புத்தகங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு பன்முக ஆளுமையும் ஆற்றலும் கொண்டிருந்த இவர், கொவிட்19 தொற்றுக்கு அண்மையில் உள்ளானார். அவர் தொற்று நோய்கள் வைத்தியசாலையில் (ஐ.டி.எச்.) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்திருக்கின்றார்.

இந்நாட்டில் கொவிட்19 தொற்று பதிவாகத் தொடங்கி இற்றை வரையும் 75,654 பேர் இத்தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 397 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஒரு வருட காலப் பகுதியில் இத்தொற்றினால் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவரின் மரணம் இப்போதுதான் முதற் தடவையாகப் பதிவாகி இருக்கின்றது.

ஆனால் உலகின் பல நாடுகளிலும் இத்தொற்று பதிவாகத் தொடங்கிய சொற்ப காலப் பகுதிக்குள் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இத்தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ஒரு சிலர் உயிரிழந்துமுள்ளனர். அவ்வாறான நிலைமை இந்நாட்டில் ஏற்படவில்லை.

ஏனெனில், இந்நாட்டில் கொவிட் 19 தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் வேலைத் திட்டங்களும் மிகச் சிறப்பான வினைதிறனுடன் முன்னெடுக்கப்படுவதன் பிரதிபலனே அதுவாகும். இத்தொற்றின் முதலாம் அலை சுமார் ஆறு மாத காலம் நீடித்த போதிலும் நாலாயிரம் பேரளவில் அதற்கு உள்ளாகினர். அவர்களில் 14 பேர் மாத்திரமே உயிரிழந்தனர். இத்தொற்றின் முதலாம் அலையின் போது இந்நாட்டில் ஒரு அரசியல்வாதி கூட இத்தொற்றுக்கு உள்ளாகவில்லை. ஆனால் இரண்டாம் அலையின் போதுதான் சுகாதார அமைச்சர் உட்பட சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இத்தொற்றுக்கு உள்ளாகி குணமடைந்திருக்கின்றனர்.

இந்நாட்டில் கொவிட்19 தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு மிகச் சிறந்த முறைமைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதன் வெளிப்பாடே அதுவாகும். அதன் பயனாகவே இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கையால் பத்தாவது இடத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கின்றது.

கொவிட்19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பரந்த அடிப்படையிலும் விரிவான முறையிலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கொவிட்19 தவிர்ப்புக்கான தடுப்பூசி முன்னுரிமை அடிப்படையில் தற்போது வழங்கப்படுகின்றது.

கொவிட்19 ஒரு தொற்று நோய். இதேவேளை பிரித்தானியாவில் பரவும் இத்தொற்றின் திரிபடைந்த வைரஸும் இந்நாட்டின் சில பிரதேசங்களில் பதிவாகி உள்ளது.

ஆகவே கொவிட்19 தொற்றின் பரவுதல் தொடரைத் துண்டிப்பதில் ஒருவொருவரும் அதிக கவனம் செலுத்தி செயற்படுவதோடு பங்களிப்பும் செய்ய வேண்டும். அதற்கு கைகழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் அணிதல் போன்ற சுகாதார துறையினர் வழங்கியுள்ள சுகாதார வழிகாட்டல்களை உச்சளவில் கடைபிடித்தொழுகுவது சிறந்த தீர்வாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# தண்ணீருக்காக ஏங்கும் வீரச்சோலை மக்கள்

அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாமல் பெரும் அவலங்களுடன் பல கிராமங்கள் இருக்கின்றன. அங்கு வாழ்கின்ற மக்களின் அவலங்கள் முடிவின்றித் தொடர்கின்றன.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேசத்தின் தெற்கே சொறிக்கல்முனை வீரமுனை பிரதான வீதியின் மேற்கே சில கிலோ மீற்றர் தொலைவில் அழகான இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது வீரச்சோலை எனும் பழந்தமிழ் விவசாயக் கிராமம்.

வீர மரங்கள் அதிகமாகக் காணப்பட்டதால் இக்கிராமத்திற்கு வீரச்சோலை எனும் பெயர் உருவானதாகக் கூறப்படுகின்றது. தற்போது சுமார் இருநூறு குடும்பங்கள் வசித்து வரும் இக்கிராமத்தில் தரம்1 தொடக்கம் தரம்11 வரை வகுப்புகளை உடைய அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை உள்ளது. ஒரு விநாயகர் ஆலயமும் அங்கு உள்ளது.

பார்ப்பதற்கு அழகிய கிராமமாக காட்சியளிக்கும் வீரச்சோலை தன்னுள்ளே சுமந்து கொண்டிருக்கும் வேதனைகள் அதிகம். அவை தீர்க்கப்படவில்லை.

அங்குள்ள பிரதான பிரச்சினை நீர்ப் பற்றாக்குறை ஆகும். நீர் இல்லாததால் காலத்திற்குக் காலம் மக்கள் ஊரை விட்டு வெளியேறி செல்வதுண்டு. வருடத்தில் மாரி காலங்களில் மட்டும் சுமார் மூன்று மாதங்களே குடிப்பதற்கும் குளிப்பதற்குமான நீர் அக்கிராமத்தில் கிடைக்கின்றது. இந்தக் காலமே இம்மக்களின் குதூகலமான காலம்.

ஏனைய காலங்களில் இம்மக்கள் குளிப்பதற்காக பல மைல் தூரம் ஆறுகளுக்குச் செல்கின்றனர். அங்கு யானைகளின் அச்சத்தின் மத்தியில் நீராடுகின்றனர். இக்கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர்த் தாங்கியில் இருந்து வழங்கப்படும் நீர் இங்கு வசிக்கும் மக்களுக்கு குடிப்பதற்கே போதாமலுள்ளது. "மூன்று நாட்களுக்கு நான்கு அல்லது ஐந்து குடங்களில் நீர் கிடைக்கும். இது குடிப்பதற்கே போதாது. எங்கள் கிராமத்தின் நீர்ப் பிரச்சினை எப்போது தீரும்?" என கிராம மக்கள் கண்ணீருடன் கவலைகளை வெளிப்படுத்தினர்.



### நான்கு குடம் நீருடன் மூன்று நாட்களுக்கு வாழ வேண்டிய அவலம்



வீரச்சோலை விவசாயக் கிராமமாக இருந்தாலும், இங்கு வசிக்கும் அநேகமான குடும்பங்களுக்கு விவசாயக் காணிகள் சொந்தமாக இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அங்கு பெரும்பாலும் கூலித்தொழில் செய்பவர்களே உள்ளனர்.


கடந்த கால அசாதாரண சூழ்நிலையில் பல இன்னல்களைச் சந்தித்த இக்கிராம மக்களுக்கு நீர்ப் பிரச்சினை மாத்திரமல்ல, யானைகளின் தொல்லையும் காணப்படுகின்றது. இக்கிராமத்துக்கு சீரான போக்குவரத்து வசதி இல்லை. அத்தி பூத்தாற் போல் இ.போ.ச பேருந்து ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் மட்டும் வந்து செல்கின்றன. அதுவும் தினமும் இல்லை. "எங்கள் கிராமம் பெயரளவில் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும், இங்கு வசிக்கும் நாங்கள் சொல்லொணா துன்ப துயரங்களுடன், அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றோம்" என மன உளைச்சலுடன் இம்மக்கள் தங்கள் நிலையை விபரித்தனர். "நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண தேசிய நீர் வழங்கல் அதிகார சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இக்கிராமத்துக்கு நீர் இணைப்பை ஏற்படுத்தித் தர உரிய அதிகாரிகள், அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்பதே வீரச்சோலை மக்களின் வேண்டுகோள் ஆகும்.

— வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு குறூப் நிருபர்)

# உலகமே கொரோனாவுடன் போராடுகையில் மீண்டும் உருவெடுத்துள்ள எபோலா வைரஸ்!

உலகமே கொவிட்19 வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் போது, முன்பு உலகையே உலுக்கிய எபோலா உலகின் சில பகுதிகளில் மீண்டும் தோன்றியுள்ளது. காங்கோ ஜனநாயகக் குடியரசில் எபோலா வைரஸ் நோய்த் தொற்றுக்கான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். தற்போது கினியாவில் 7 பேர் எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளதாக கூறப்படுகிறது. 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு கினியாவில் எபோலா வைரஸ் பாதிப்புகள் பதிவாகியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

பொதுவாக எபோலா வைரஸ் பல தசாப்தங்களாக இருந்து வருகிறது மற்றும் இது கடுமையான நோயை உண்டாக்கி, மரணத்திற்கும் வழிவகுக்கும். விழிப்புணர்வும், தடுப்பு முறைகளும் தான் பெரும்பாலான நோய்கள் மற்றும் தொற்றுநோய்களுக்கான திறவுகோலாகும். இது எபோலா வைரஸுக்கும் பொருந்தும். கீழே எபோலா வைரஸ் குறித்து கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் கொடுக்கப்பட்டுள்ளன.



**உலகையே உலுக்கிய எபோலா உலகின் சில பகுதிகளில் மீண்டும் தோன்றியுள்ளது. காங்கோ ஜனநாயகக் குடியரசில் எபோலா வைரஸ் நோய்த் தொற்றுக்கான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.**

**தொற்று ஏற்பட்டவர்களின் உடல் திரவங்கள் மூலமாக மட்டுமே பரவும். எச்சில், இரத்தம், மலம், பிறப்புறுப்பு திரவங்கள் போன்றவை வைரஸ் பரவுவதற்கு வழிவகுக்கும்**

எபோலா ஒரு வைரஸ் தொற்று. இது எபோலா வைரஸ் என்னும் வைரஸால் ஏற்படுகிறது. இது அதிகாரப்பூர்வமாக ஜைர் எபோலா வைரஸ் என்று அழைக்கப்படுகிறது.

பொதுவாக சில வைரஸ்கள் விலங்குகளை மட்டுமே பாதிக்கும், சில மனிதர்களை மட்டுமே பாதிக்கும். இருப்பினும், வேறுபட்ட வகுப்பைச் சேர்ந்த வைரஸ்கள் விலங்குகளிடமிருந்து மனிதர்களிடம் செல்லக் கூடும். எபோலா வைரஸ் மனிதர்களையும், விலங்குகளையும் பாதிக்கும். மேலும் ஆபத்தான நோய்களையும் கூட ஏற்படுத்தும்.

எபோலா வைரஸ் கடுமையான நோய்களையும் ஏற்படுத்தும். அறிக்கைகளின் படி, இந்த கொடிய வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்களால் உயிர் வாழ முடியவில்லை.

பெரும்பாலான வைரஸ் தொற்றுகள் குளிர் மற்றும் காய்ச்சல் போன்ற பொதுவான அறிகுறிகளைக் கொண்டுள்ளன. எபோலா வைரஸ் மட்டும் விதிவிலக்கல்ல. இந்த நோய்த் தொற்று ஏற்பட்ட ஒரு வாரத்திற்குள் முதல் அறிகுறிகள் வெளிப்படுகின்றன.

எபோலா நோய்த் தொற்று ஏற்பட்டால் தொண்டைப் புண், வயிற்றுப் போக்கு, தசைவலி மற்றும் தலைவலி போன்றவை அறிகுறிகளாக தென்படும்.

எபோலா வைரஸ் மனிதனிடமிருந்து மனிதனுக்கு நெருங்கிய தொடர்பு கொள்வதன் மூலம் பரவாது. ஆனால் தொற்று ஏற்பட்டவர்களின் உடல் திரவங்கள் மூலமாக மட்டுமே பரவும். எச்சில், இரத்தம், மலம், பிறப்புறுப்பு திரவங்கள் போன்றவை வைரஸ் பரவுவதற்கு வழிவகுக்கும். இவற்றுடன் ஆரோக்கியமானவர்கள் தொடர்பு கொண்டால் அவர்களுக்கும் இந்த தொற்று பாதிப்பு ஏற்படும். கொரோனா தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு உலகமே போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மற்றொரு ஆபத்தான வைரஸ் பரவுவதையிட்டு உலகம் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டுமென மருத்துவ விஞ்ஞானிகள் அறிவுறுத்தியுள்ளனர்.



**எபோலா ஒரு வைரஸ் தொற்று. இது எபோலா வைரஸ் என்னும் வைரஸால் ஏற்படுகிறது. இது அதிகாரப்பூர்வமாக ஜைர் எபோலா வைரஸ் என்று அழைக்கப்படுகிறது.**

# டெல்லியில் விவசாயிகள் போராட்டத்துக்கு மகாத்மா காந்தியின் பேத்தி நேரில் ஆதரவு

டெல்லியில் நடைபெறுகின்ற விவசாயிகள் போராட்டத்துக்கு மகாத்மா காந்தியின் பேத்தியும் ஆதரவு தெரிவித்துள்ளார். மத்திய அரசின் 3 புதிய விவசாய சட்டங்களுக்கு எதிராக டெல்லி எல்லையான காஜிபூர், சிங்கு, திக்ரியில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். பஞ்சாப், அரியானா, உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் அங்கு திரண்டு, விவசாய சட்டங்களை வாபஸ் பெறக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுடன் மத்திய அரசு பலமுறை நடத்திய பேச்சுவார்த்தையில் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்து விவசாயிகளின் போராட்டம் கடந்த 2 மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகிறது. குடியரசு தினத்தன்று விவசாயிகள் நடத்திய டிராக்டர் பேரணியில் வன்முறை ஏற்பட்டது. இந்த நிலையில் விவசாயிகளின் போராட்டத்திற்கு மகாத்மா காந்தியின் பேத்தி தாராகாந்தி ஆதரவு தெரிவித்துள்ளார். 84 வயதான அவர் டெல்லி உத்தர பிரதேச எல்லையில் உள்ள காஜி பூருக்கு நேரில் சென்று விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். அவர் தேசிய காந்தி அருங்காட்சியகத்தின் தலைவர் பொறுப்பிலும் இருக்கிறார்.



தாரா காந்தியுடன் ஸ்மார்க் நிதி தலைவர் ராமச்சந்திரா ராகி, அகில இந்திய சர்வ சேவா சங்க நிர்வாகி அசோக் சரண், காந்தி ஸ்மார்க்நிதி இயக்குனர் சஞ்சய் சிங்கா, தேசிய காந்தி அருங்காட்சியகத்தின் இயக்குனர் அண்ணாமலை ஆகியோரும் உடன் வந்து விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர். அரசியல் காரணத்துக்காக நாங்கள் இங்கு வரவில்லை. நம் வாழ்நாள் முழுவதும் உணவளித்த விவசாயிகளுக்காக வந்திருக்கிறோம். என்ன நடந்தாலும் விவசாயிகள் பயனடைய வேண்டும். விவசாயிகளின் கடின உழைப்பு பற்றி யாருக்கும் விழிப்புணர்வு இல்லை. விவசாயிகளின் நலனே நாட்டின் நலம். விவசாயிகள் அமைதி வழியில் போராட்டம் நடத்த வேண்டும். விவசாயிகளின் பிரச்சினையை அரசு தீர்க்க வேண்டும் என்று அவர் பேசினார்.

# மானுடக் கொடுமைகளால் தோற்கடிக்கப்பட முடியாமல் போன இலக்கிய பிதாமகன்

**டொமினிக் ஜீவா (1927– 2021)**
**ஒரு சகாப்தத்தின் நிறைவு**



தனது 94 ஆம் வயதில் மறைந்த எழுத்தாளர் டொமினிக் ஜீவா அவர்களின் மரணத்தோடு ஈழத் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு சகாப்தம் நிறைவுறுகிறது எனலாம்.

மற்றைய எழுத்தாளர்களின் பங்களிப்பிற்கும் ஜீவாவின் பங்களிப்பிற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. அவர் படைப்பாளியாக மட்டுமன்றி, தன்னுடைய படைப்புகளை வெளியிடுவது, அவற்றைச் சமகால சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வது என்பதற்கு உரிய முக்கியத்துவம் அளித்தார். படைப்பிலக்கியம் என்கின்ற வகையில் அவர் 1950 60களில்தான் தீவிரமாகச் செயல்பட்டார். பின்னாளில் சுமார் நாற்பத்தேழு ஆண்டு காலம் அவர் அனைத்து அம்சங்களிலும், தனது சக்திக்கு மீறிய முயற்சிகளின் ஊடாக, அவரது கால கட்டத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்த இலக்கிய வெளிப்பாடுகளுக்குக் களம் அமைத்துத் தருவதற்கே முக்கியத்துவம் அளித்தார்.

அவரது முக்கியமான சாதனையாக நினைவு கூரப்படுவது தனது ‘மல்லிகை’ சஞ்சிகை மூலமும், ’மல்லிகைப் பந்தல்’ பதிப்பகம் மூலமும் தன் சக்திக்கு மீறி அவர் ஒரு காலகட்ட ஈழத் தமிழ் இலக்கியத்திற்கும், அதனூடாக ஒட்டுமொத்தத் தமிழ் இலக்கியத்திற்கும் அவர் ஆற்றியுள்ள பணியாகும்.


ஈழத் தமிழ்ச் சமூகம், இந்தியச் சமூகங்களைப் போலவே ஒரு சாதீயச் சமூகம். சகமனிதரில் ஒரு சாரரைத் தீண்டாமை எனும் பெருங் கொடுமை மூலம் ஒதுக்கி வைக்கும் ஒரு சமூகம். அப்படியான ஒரு சமூகத்தில் பிறந்ததோடு மட்டுமின்றி, அவ்வாறு தீண்டாமைக்குக் காரணமாக ஒதுக்கி வைக்கப்பட்ட தொழிலை ஒரு குறிப்பிட்ட காலம் வரை தன் வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தவர் ஜீவா. எழுத்துப் பணியைத் தொடர்ந்து அவர் ’மல்லிகை’ இதழ் வெளியீட்டை மேற்கொள்ளத் தொடங்கிய பின்னும் கூட சில காலம் வரை அவர் தன் தொழிலை விடவில்லை.

’மல்லிகை’ ஒரு தனிமனித சாதனை ஆகும்.

இந்த வகையில் ஈழத் தலித் இலக்கியத்தின் இன்னொரு முக்கிய பங்களிப்பாளரான டானியல் அவர்களிலிருந்தும் ஜீவா வேறுபட்டு நிற்கிறார். டானியல் சொந்தமாக ஒரு தொழிற்பட்டறை வைத்திருந்ததோடு தனது நூல்களைப் பெரிய சிரமங்களின்றி நூலாக வெளியிடும் வாய்ப்புகளும் பெற்றிருந்தார். ஆனால் அவரும் கூடத் தன் எழுத்துகளையும் பிற ஈழ எழுத்தாளர்களின் எழுத்துகளையும் வெளியிடுவதற்கென இதழ் ஒன்றைத் தொடங்க முயன்றாரில்லை. அவரது கவனம் வேறு திசையில் இருந்தது. ’தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்’ ஒன்றின் ஊடாக நேரடியாகக் களத்தில் இறங்கி ஆதிக்க சக்திகளுடன் போராடியவராகவே அவர் வெளிப்பட்டார்.

ஜீவா, டானியல் இருவருக்கும் இடையேயான சில நுணுக்கமான வேறுபாடுகள் இங்கே நினைவு கூரத் தக்கன. இருவருமே இடதுசாரிக் கட்சிகளுடன் தொடர்புடையவர்களாக இருந்தனர் என்றபோதும் அவர்களின் காலத்தில் கம்யூனிச அகிலம் சோவியத் மற்றும் சீனம் எனும் இரு எதிரெதிர்க் கூறுகளாகக் கடும் பகையுடன் வேறுபட்டிருந்தது. அந்நிலையில் ஜீவா ரஷ்ய கம்யூனிச ஆதரவு நிலைபாடு கொண்டவராகவும், டானியல் அக்காலகட்டத்தின் புகழ் பெற்ற மார்க்சிஸ்டான ஷண்முகதாசனுடன் நின்று சீன ஆதரவை மேற்கொண்டவராகவும் இருந்தார்.

கட்சிப் பங்களிப்புகள் என்பதிலும் கூட நானறிந்த வரை இந்த இருவரது செயல்பாடுகளும் இருவேறு மட்டங்களில் இருந்தன. டானியல் தீவிரமான கட்சிப் பணி என்பதைக் காட்டிலும், தீவிரமான தீண்டாமை ஒழிப்புச் செயல்பாடுகளில் இருந்தார். அவருடைய ‘பஞ்சமர்’ வரிசை நூல்கள் அந்த வகையில் ஒரு வரலாற்றுப் பெட்டகம். ஆனால் இன்னொரு பக்கம் 1971இல் ஜே.வி.பி அமைப்பின் முதல் ஆயுத கிளர்ச்சியின் போது டானியல் கைது செய்யப்பட்டு சுமார் ஓராண்டு காலம் சிறைப்பட்டிருக்க நேரிட்டது.



–சென்னையில் இருந்து
**பேராசிரியர் அ.மார்க்ஸ்**

ஜீவாவின் கட்சிப்பணி என்பது மிகவும் வெளிப்படையாக இருந்தது. அன்று அவர் சார்ந்திருந்த ரஷ்ய சார்பு கம்யூனிஸ்ட் கட்சி அந்த அளவிற்குத் தீவிரமாகக் கருதப்பட்டதில்லை. இந்தியாவில் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டுத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட வரலாறெல்லாம் உண்டு. அந்த வகையில் ஜீவாவிற்கு அப்படியான பிரச்சினைகள் ஏதுமில்லை. அது மட்டுமல்ல. அவரது கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான ‘தேசாபிமானி’ இதழை சக தோழர்களுடன் தூக்கிச் சென்று மக்கள் மத்தியில் கூவி விற்கிற அளவிற்கு ருஷ்ய சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிப்படையான தீவிர உறுப்பினராகவும் ஜீவா இருந்தார்.

பின்னாளில் ரஷ்யாவிற்கு அவர் அழைக்கப்பட்டு சுற்றுப் பயணங்கள் மேற்கொண்ட வரலாறை எல்லாம் அவரது சுய வரலாறு சார்ந்த கட்டுரைகளில் பார்க்கலாம்.

## 'மல்லிகை' என்பது ஜீவாவின் தனிமனித சாதனை

டானியலின் எழுத்திற்கும் ஜீவாவுடையதற்கும் இன்னொரு வேறுபாடும் உண்டு. முன்னவரின் எழுத்துக்கள், அது உரையாடலாக இருந்தாலும் சரி, விவரணமாக இருந்தாலும் சரி சுமாராக அவை யாழ்ப்பாணத் தமிழிலேயே இருக்கும். டானியலின் எழுத்துக்களை வாசிக்கத் தொடங்கிய காலத்தில் நாங்கள் அவரிடம் ஒரு வேண்டுகோள் வைத்தோம். அப்போது அவர் தன் ‘பஞ்சமர்’ நாவலைத் தஞ்சையில் அச்சிடக் கொடுத்துக் காத்திருந்தார். இங்கு வழக்கத்தில் இல்லாத முக்கிய இலங்கைத் தமிழ் வழக்குகளுக்குப் பொருள் எழுதி நூலில் இணைத்தால் தமிழ் நாட்டு வாசகர்களுக்குப் பயனுடையதாக இருக்கும் என்பதே அந்த வேண்டுகோள். அவரும் அதை ஏற்றுக் கொண்டு அவ்வாறே செய்தார்.

ஆனால் ஜீவாவின் எழுத்துகளில் அப்படியான சிக்கலை இங்கு யாரும் எதிர்கொண்டதில்லை. மிகச் சில யாழ்ப்பாண வழக்குகள் தவிர மற்றபடி எந்தச் சிரமமும் இன்றி வாசிக்கத் தக்க உரைநடையாக அவை அமைந்தன.

ஜீவாவுக்கும் டானியலுக்கும் இருந்த இன்னொரு வேறுபாடு டானியலின் எழுத்துக்கள் பஞ்சமர்கள் மீதான ஒடுக்குமுறை மற்றும் அதற்கெதிரான அவர்களின் எழுச்சி ஆகியவை குறித்தவையாகவே இருக்கும். ஜீவாவின் எழுத்துகளை அப்படிச் சொல்லிவிட இயலாது. ஆனாலும் பெரும்பாலும் அப்படியானவையாக இருக்கும். தவிரவும் தான் அப்படியான ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து மேலெழுந்து வந்தவன் என்பதை ஜீவா ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தீவிரமாக வெளிப்படுத்திக் கொள்பவராகவே இருந்தார். அவர் எங்கும், எப்போதும், யாழ் சமூகத் தீண்டாமைக் கொடுமைகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டும், கண்டித்துக் கொண்டும் இருந்தார். எள்ளல்கள், எதிர்ப்புகள் ஆகிய எல்லாவற்றையும் எதிர்கொண்டு அவர் எழுந்து நின்றார்.

கைலாசபதி, சிவத்தம்பி, ஏ.ஜெ.கனகரட்னா முதலான நாடறிந்த அறிஞர் பெருமக்களின் ஆதரவும் அவருக்கு இருந்தது. ஜீவாவுக்கும் கைலாசபதிக்கும் நல்ல உறவு இருந்தது. அப்படியான ஒரு நல்லுறவு கைலாசபதியுடன் டானியலுக்கு இருந்ததில்லை. “நாங்கள் நினைப்பதை விடவும் மிக மிக பிரமாண்டமான இலக்கியப் பேராசான் கைலாசபதி. அவர் காலத்தில் நாமெல்லாம் வாழ்ந்தோம் என்பதே நமக்கெல்லாம் தனிப் பெருமையாகும். அவருடன் சமகாலத்தில் இலக்கிய சர்ச்சை செய்து களித்திருந்தோம் என்பதே சொல்லில் வடிக்க முடியாத தனிப்பெரும் பேறு” என அவர் மறைவின் போது ஜீவா பதிந்தது குறிப்பிடத்தக்கது.

‘சாகித்ய மண்டலம்’, ‘தேசநேத்ரு’, ’சாகித்ய ரத்னா’ முதலான விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டன. தனது எழுத்து மற்றும் ’மல்லிகை’ உள்ளிட்ட வெளியீடுகள் ஆகியவை குறித்து நியாயமான பெருமையும் கர்வமும் ஜீவாவுக்கு இருந்தன. தனது எழுத்துகளின் ஊடாக வெளிப்படும் வீணான கற்பனைகள் அற்ற நம்பகத்தன்மை, எழுத்து ஜாலமின்மை, கடந்து வந்த பாதையின் அவலங்களின் ஊடாகப் பெற்ற ஆரோக்கியமான வழிகாட்டல்கள், அர்ப்பணிப்பு, உழைப்பு ஆகியனவே தன் வெற்றிக்குக் காரணம் என ஜீவா நம்பினார். வரலாறு என்னைத் தோற்கடித்து விடவில்லை என ஆறுதல் கொண்டார். மானுடக் கொடுமைகளையும், புறக்கணிப்புகளையும் மீறி இத்தனை காலம் ஒரு இலக்கிய சஞ்சிகையை கொண்டு வந்தமைக்காகப் பெருமைப்பட்டார்.

டொமினிக் ஜீவா சுமார் அறுபது சிறுகதைகள் வரை எழுதியிருப்பார் என நினைக்கிறேன். 1996 இல் வெளிவந்த ‘டொமினிக் ஜீவா சிறுகதைகள்’ எனும் தொகுப்பில் 50 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. முன்னதாக தண்ணீரும் கண்ணீரும், பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனங்கள் முதலானவை வெளிவந்தன. ஒரு சிறுகதை எழுத்தாளராகத்தான் அவர் தன் எழுத்துப் பணியைத் தொடங்கினார். முக்கிய சிங்கள எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு ஒன்றையும் அவர் கொண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் அப்போதைய இலக்கிய இதழ்களான விஜயபாஸ்கரனின் ‘சரஸ்வதி’, ரகுநாதனின் ‘சாந்தி’ முதலானவற்றிலும் அவரது சிறுகதைகள் வெளியிடப்பட்டன.

‘அச்சுத்தாளின் ஊடாக ஒரு அனுபவப் பயணம்’ என்பது அவரது சிறு பத்திரிகை அனுபவங்களைச் சொல்லும் நூல். ‘எழுதப்படாத கதைக்கு வரையப்படாத சித்திரம்’ என்பது அவரது சுயசரிதை நூல். மல்லிகையில் வெளிவந்த தலையங்கங்கள், கேள்வி பதில்கள், நேர்காணல்கள், அட்டைப்படக் கட்டுரைகள் என்றெல்லாம் மொத்தத்தில் சுமார் 18 நூல்கள் வெளிவந்துள்ளன.

எந்தவிதப் பொருளாதாரப் பலமோ, சமூகப் பின்னணியோ, கல்விப் பின்புலமோ, இதழ் வெளியீட்டு அனுபவமோ, மூலதன வலிமையோ இல்லாமல், தான் சுமார் 47 ஆண்டு காலம் நடத்திய பத்திரிகை அனுபவங்களை இப்படியான நூல்களில் மட்டுமல்லாமல் வாய்ப்பு வந்தபோதெல்லாம் பேச்சுக்களிலும் பதிவுகளிலும் சொல்வதற்கு ஜீவா தயங்கியதில்லை.

மல்லிகை எக்காரணம் கொண்டும் நின்று விடக் கூடாது என்பதில் அவர் தீவிரமாக இருந்தார்.

ஒன்றைச் சொல்வது அவசியம். ஜீவா பல நேரங்களில் யாழ்ப்பாண சாதீய வெறுப்பு குறித்துக் கடுமையாகப் பேசி இருந்த போதும் அதை ஒரு கண்மூடித்தனமான உயர்சாதி வெறுப்பாக ஆக்கிக் கொள்ளவில்லை. ”என்னை உருவாக்கியவர்கள் கூட தலித்கள் அல்ல. எங்களிடம் சிந்தனை தந்ததும் பின்னணியாக நின்றதும் தலித் அல்லாதவர்களே. பச்சையாகச் சொல்லப் போனால் இலங்கையில் இருக்கிற மிக உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த இடதுசாரிகள்தான் எம்மை இப்படி சிந்திக்கக் கற்றுக் கொடுத்தவர்கள்” என்றதுடன், அவர் அப்படியானவர்களைச் சுட்டிக் காட்டத் தயங்கவுமில்லை.

கடும் சாதீய வெறுப்புகளுக்கு அப்பால் ஜீவாவுக்குப் பலரும் உதவியுள்ளனர். அவர்களில் உயர் சாதியினரும் இருந்தனர். ஜீவா இதைக் குறிப்பிடத் தவறுவதும் இல்லை. “எந்த அளவிற்கு இப்படியான எதிர்ப்புகள் இருந்ததோ அந்த அளவிற்கு உதவியும் வந்தது” என ஓரிடத்தில் அவர் குறிப்பிடுகிறார். சில எடுத்துக்காட்டுகளையும் ஆங்காங்கு சொல்லிச் செல்கிறார்.

கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக அவர் தன் உயிரிலும் மேலாக நேசித்த ‘மல்லிகை’யை நிறுத்த நேரிட்ட போது, அவரைச் சந்தித்த நண்பர் கனக செந்திநாதன் கொழும்பில் இருந்த அலுமினிய நிறுவன முதலாளி திருநாவுக்கரசைச் சந்திக்க அவரிடம் சொல்கிறார். அப்படிச் சந்தித்த போது மிக்க மரியாதையுடன் வரவேற்ற அவர் ஜீவாவையும், அவரது பங்களிப்புகளையும் அறிந்துள்ளதாகச் சொல்கிறார். அத்தோடு அவர் நிறுத்தவில்லை. ஒரு அச்சகம் நிறுவுவதற்குத் தேவையான அத்தனை கருவிகளையும் ஒரு நல்ல நிறுவனத்தில் ‘ஓர்டர்’ கொடுத்து விட்டு வந்து சொல்லும்படி கூறுகிறார். அவ்வாறே ஜீவா வந்து சொன்னவுடன் அந்த முழுத் தொகையையும் செலுத்தி அவற்றை ஒரு வாகனத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த ‘மல்லிகை’ அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கவும் செய்கிறார். அந்தப் பேருதவியின் ஊடாகவே மீண்டும் ‘மல்லிகை’ மலரத் தொடங்கியது. அதேபோல ஒட்டப்பிடாரம் குருசாமி அண்ணாச்சி முதலான பலரும் ஜீவாவுடன் நட்புடன் இருந்துள்ளனர்.

‘மல்லிகை’ முகப்பில் ஆசிரியராகத் தன் பெயரே தொடர்ந்து வந்த போதும் பலரும் அதற்குப் பங்களித்துள்ளனர் என்பதையும் ஜீவா குறிப்பிடத் தவறுவதில்லை. அதேபோல ”கருத்தாலும், தத்துவார்த்த நோக்கிலும் மாறுபட்டிருந்த பல தோழர்களை நான் அண்டி அணைத்துச் சென்று கொண்டிருந்தேன்” என்பதையும் பதிவு செய்கிறார். ஒவ்வொரு மல்லிகை இதழ் அட்டையிலும் ஒரு ஆளுமையின் படம் பிரசுரிக்கப்பட்டு அவர் குறித்த மதிப்புரை ஒன்றும் எழுதப்படும். கருத்து மாறுபடுகின்ற அப்படியானவர்களுக்கும் அதில் இடமிருந்தது.

ஒரு கட்டத்தில் சோவியத் இதழ்களில் வரும் நல்ல கட்டுரைகளின் மொழியாக்கங்கள் ’மல்லிகை’யில் இடம்பெற்றன. தரமான கட்டுரைகள் தேவையான அளவிற்கு வராததால் அப்படி மொழியாக்கங்களை வெளியிடலாயிற்று என ஜீவா அதற்கு விளக்கமளித்த போதும், ஜீவாவைப் பிடிக்காதவர்கள் சோவியத்திலிருந்து அவருக்கு நிதி உதவி செய்யப்படுகிறது எனக் கதை கதைகட்டி விட்டனர்.

கடைசி ஐந்தாண்டுகள் அவர் அதிகம் பொது நிகழ்ச்சிகளில் பங்கு பெறாமல் வீட்டோடு அடங்கி இருந்தார். அப்படியான நிலையில் அவரை நான் மூன்றாண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் இருந்த அவர் வீட்டில் சென்று பார்த்து வந்தேன். அதிகம் பேசும் நிலையில் அவர் அப்போது இல்லை. தஞ்சையில் நான் இருந்த போது ஒரு முறை அவர் என் வீட்டிற்கு வந்துள்ளார். அப்போது நான் ஊரில் இல்லை. என் மனைவி அவரை வரவேற்று மரியாதை செய்துள்ளார். டானியலின் கல்லறையைப் பார்க்க அவர் விருப்பம் தெரிவித்த போது, ஒருவரை அந்த நினைவுச் சின்னத்தை அடையாளம் காட்ட அவருடன் அனுப்பி வைத்துள்ளார். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவரோடு விரிவாக உரையாட இயலாமற் போன வருத்தம் எனக்கு எப்போதும் உண்டு.



# அ.தி.மு.கவுக்கு சசிகலா கொடுத்துள்ள அதிர்ச்சி!

தமிழக சட்டசபைத் தேர்தலில் சசிகலா தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக டெல்லியில் பா.ஜ.க தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அ.ம.மு.க குழு ஒன்று டெல்லி செல்ல திட்டமிட்டுள்ளது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கில் 4 ஆண்டு சிறைதண்டனை அனுபவித்துள்ளார் சசிகலா. இதனால் சசிகலாவால் 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது.

ஆனால் சிக்கிமில் ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற தமாங் தேர்தலில் போட்டியிட அனுமதித்தது தேர்தல் ஆணையம். இதனை சுட்டிக்காட்டி சசிகலா தரப்பும் தேர்தலில் போட்டியிட முயற்சித்து வருகிறது.

ஒரத்தநாட்டில் செய்தியாளர்களிடம் பேசிய டி.டி.வி தினகரனும், "சசிகலா தேர்தலில் போட்டியிடுவார். இதற்காக சட்டரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் வெற்றி பெற்றால் போட்டியிடுவார்" என கூறியிருந்தார்.

சசிகலா தேர்தலில் போட்டியிடுவதற்காக தேர்தல் ஆணைய அனுமதி பெறுவதில் ஏற்கனவே தினகரன் தரப்பு மும்முரமாக இருக்கிறது என்பதையே இது வெளிப்படுத்தி இருக்கிறது. அதேநேரத்தில் பிரதமர் மோடியை மிகவும் புகழ்ந்தும் ஒரத்தநாடு பேட்டியில் கூறியிருந்தார் தினகரன்.

இந்த நிலையில்தான் அ.ம.மு.கவின் மூத்த நிர்வாகிகள் சிலர் டெல்லி செல்ல உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. டெல்லியில் பா.ஜ.க தலைவர்களுடன் சசிகலா தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இந்த தூதுக் குழு ஆலோசனை நடத்த உள்ளது. இந்த தகவல் அ.தி.மு.க வட்டாரங்களை அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது.

## ஐ.தே.கவின் தேசிய...

தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில், பொதுமக்கள் வாக்களிப்பின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்த ஒரு ஆசனமும் கிடைக்கப்பெறவில்லை.

எனினும், கிடைக்கப்பெற்ற வாக்குகளின் அடிப்படையில் ஒரே ஒரு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமை மாத்திரம் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்தது.

அந்த தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமைக்காக, பலரின் பெயர்கள் முன்னதாக முன்மொழியப்பட்ட நிலையில், அது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்காக கட்சியின் செயற்குழு பல தடவைகள் கூடின.

எனினும், அந்த சந்தர்ப்பங்களில் தேசிய பட்டியல் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போனதுடன், கட்சியை மறுசீரமைப்பு செய்வது குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கு புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமைக்காக கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பெயரிட வேண்டுமென்றும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதன்படி, அதுகுறித்து கட்சித் தலைவரின் கருத்து கோரப்பட்டுள்ள நிலையில், அவரின் தீர்மானம் கிடைத்ததை அடுத்து, அதனை சபாநாயகருக்கு பெயரிட்டு அனுப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

## வெட்டுப்புள்ளி...

குறைப்பதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தவிர்ப்பதற்கு எடுக்க வேண்டிய தீர்வுகளையும் அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். குறித்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி செயலகத்தினால் தீர்மானம் எட்டப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். அதுவரை, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந் திருந்தாலும் தரம் 6 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள தாகப் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

## ஆளுநர் முஸம்மிலின்...

தேர்தலில் போட்டியிட வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள குறித்த தேர்தலில் கன்சர்வேடிவ் (*Conservative Party*) கட்சி சார்பில் ஷஸ்னா முஸம்மில் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் *MBA* பட்டப்படிப்புகளை நிறைவு செய்துள்ள ஷஸ்னா முஸம்மில், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் மற்றும் பெரோஸா முஸம்மில் ஆகியோரின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது

## பாரதிய ஜனதா கட்சி...

சந்திப்பொன்றின் போது இலங்கையிலும் பாரதிய ஜனதா கட்சியை அமைக்க தமது கட்சி திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலத்தில் நேபாளத்தில் கட்சியை ஆரம்பிப்பதாக தெரிவித்த அவர், இலங்கையில் கட்சியை ஆரம்பித்த பின்னர் தேர்தலில் போட்டியிடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியை உலகளாவிய கட்சியாக மாற்றும் நோக்கத்தில் இவ்வாறு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இலங்கையிலும் நேபாளத்திலும் கட்சி அமைக்க இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## மருதானையில் நேற்று தீப்பற்றி எரிந்த கார்



மருதானை டீன்ஸ் வீதியிலுள்ள சுகாதார அமைச்சின் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரொன்று நேற்று(15) முற்பகல் தீப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தீப்பரவலை கட்டுப்படுத்த தீயணைப்பு வாகனங்கள் உடனடியாக சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ரஞ்சித் ஆண்டகையின் பெயர்...

அமைதிக்கான நோபல் பரிசுக்காக பரிந்துரைத்துள்ளார்.

"நான் மெல்கம் கார்டினல் ரஞ்சித்தை முன்மொழிந்தேன். ஏனென்றால் மதத்தின் பெயரில் கொல்லும் வெறியர்களைத் தடுக்க நாங்கள் எதுவும் செய்யாவிட்டால், அது அப்பாவிகள், போர்கள், மோதல்கள் மற்றும் அகதிகளை வெகுஜன படுகொலைகளுக்கு காரணமாக இருக்கும்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அமைதிக்கான நோபல் பரிசுக்கான பரிந்துரைகள் ஜனவரி 31 நள்ளிரவுடன் நிறைவடைந்தன.

தேசிய அரசியல்வாதிகள் மற்றும் சில பல்கலைக்கழக பேராசிரியர்கள் அமைதி நோபல் பரிசுக்கு வேட்பாளர்களை பரிந்துரைக்க முடியும், இது டிசம்பரில் வழங்கப்படும்.

2020 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு 318 வேட்பாளர்கள் இருந்தனர், அவர்களில் 211 பேர் தனிநபர்கள், மீதமுள்ளவர்கள் அமைப்புகளைச் சார்ந்தவர்கள்.

## பாடசாலை சென்ற...

கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கன்டேனர் ரக வாகனம் ஒன்று மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் குறித்த மாணவனுடைய பாட்டி பலத்த காயங்களுக்கு உள்ளாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். மேயருக்கு எதிராகவும் வழக்கு...

எடுத்துக்கொள்ளப்பட்டு தவணையிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்திலேயே பேரணிக்கு தடைகோரி 'ஏ' அறிக்கையூடாக மன்னார் பொலிஸ் நிலையத்தினால் தொடரப்பட்ட வழக்கிற்கு நீதிமன்று வழங்கிய தடை உத்தரவு மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, 'பி' அறிக்கை ஊடாக பேரணியில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறித்த வழக்கில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணன் மாத்திரமே பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## லொகுபண்டார மறைவு...

நண்பராகவும் அவர் என்னுடன் பழகிய விதம் இன்றும் எனது நினைவில் நிலைத்திருக்கிறது. வி.ஜ.மு. எனும் பெயரில் இலங்கை சமுதாயத்தில் சபாநாயகராகவும், மக்கள் சார்பு அரசியல்வாதியாகவும் மற்றும் ஒரு இலக்கிய வாதியாகவும் அவர் விட்டுச் சென்ற தடங்கள் இது ஒருபோதும் இந்நாட்டு மக்களின் இதயங்களிலிருந்து மங்காது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சதொச வருமானத்தில்... 03ஆம் பக்கத் தொடர்

சதொச வருமானம் அதிகரித்துள்ள நிலையில் அமைச்சர் பந்துல குணவர்தன சதொச தலைவர் மற்றும் முக்கிய அதிகாரிகள் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ள சகல சதொச விற்பனை நிலையங்களின் ஊழியர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.(ஸ)

## திண்மக் கழிவுப்பொருட்களைப்... 03ஆம் பக்கத் தொடர்

2023 ஆம் ஆண்டாகும் போது இலங்கைக்கு தேவையான மின்சாரத்தில் 70 வீதத்தை புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அன்றாடம் சேரும் திண்மக் கழிவுப்பொருட்கள் கடந்த காலத்தில் பெரும் பிரச்சினையாகப் பார்க்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் திண்மக் கழிவுப்பொருட்களை பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்கின்றது. இந் நடவடிக்கையின் பயனாக இந்நாட்டில் திணமக் கழிவுப்பொருட்களை ஒரு பிரச்சினையாகப் பார்க்கும் நிலைமை ஏற்படாது என்று சுட்டிக் காட்டிய அவ்வதிகாரி

உயிரியல் வாயு மூலம் மின் உற்பத்தி செய்யும் இலங்கையில் முதலாவது மின்னுற்பத்தி நிலையம் மாத்தறையில், கொட்டவில பிரதேசத்தில் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதன் மூலம் தினமும் 40 தொன் திண்மக்கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி நாளாந்தம் 400 கிலோவார்ட் மின்சக்தியை தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## பொது மக்களுக்கு வழங்க...

தடுப்பூசிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது புதன் அதற்கிணங்க 18 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.அதன் முதலாவது தொகையான 5 லட்சம் தடுப்பூசிகள் அடுத்த வாரம் நாட்டுக்கு கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது டன் இலங்கைக்கு வழங்கவுள்ள 20 வீத தடுப்பூசி களுக்கு பதிலாக 27 வீதமாக அதனை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் மார்ச் மாத முதல் வாரத்தில் சாதாரண மக்களுக்கு தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

அதேவேளை தடுப்பூசி வழங்குவது தொடர்பில் ஆரம்ப சுகாதாரம், தொற்றுநோய் மற்றும் கொரோனா வைரஸ் கட்டுப்பாடு தொடர்பான ராஜாங்க அமைச்சின் செயலாளர் அமல் ஹர்ச டி சில்வா தெரிவிக்கையில்;

முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொடுத்த பின் நோயாளிகளுக்கு இரண்டாவது தடவை அதனை பெற்றுக் கொடுப்பதற்கான பரிந்துரைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனியார்துறை மருத்துவமனைகளின் டாக்டர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனவைரஸ் தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் நாளை புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## குவைத்திலிருந்து... 03ஆம் பக்கத் தொடர்

விமான நிலையத்திலிருந்து மாலை 6.45 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 2.35 மணிக்கு கொழும்பை சென்றடையும். விமானம் திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் கொழும்பிலிருந்து அதிகாலை 3.35 மணிக்கு புறப்பட்டு காலை 7.05 மணிக்கு குவைத்தில் தரையிறங்கும்.

## காணாமல் போனோர் அலுவலகம்...

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் வரையில் அந்த அலுவலகங்கள் இயங்க வேண்டியது மிகவும் அவசியமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

போரினாலும் அதற்கு முன்னரான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற இனமோதல்களாலும் பலர் சொத்துக்களை மாத்திரமன்றி தமது உறவினர்களையும் இழந்தனர். பலர் காணாமலாக்கப்பட்டார்கள். இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் காலத்தில் அனைத்து இனத்தவரும் ஒன்றிணைந்து எவ்வாறு முன்நோக்கிப் பயணிப்பது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். இது விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சர்வதேச நாடுகளும் எமது நாட்டின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன. எனவே தற்போது அரசாங்கம் ஒரு தரப்பினரைப் பற்றி மாத்திரம் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டு, அனைத்துத் தரப்பினரதும் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். காணாமல்போனோர் விவகாரம், காணாமல்போனோரின் உறவினர்களுக்கான இழப்பீட்டைப் பெற்றுக்கொடுத்தல் ஆகியவற்றுக்கு இன்னமும் முழுமையாகத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை. எனவே, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்றவை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறுவதுடன் பாதிக்கப்பட்டோருக்கான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் வரையில் அவை தொடர்ந்தும் இயங்கவேண்டியது மிகவும் அவசியமாகும் என்று குறிப்பிட்டார்.

## பதவியை விட்டுக்கொடுத்தார்... 03ஆம் பக்கத் தொடர்

கடந்த 16 வருடங்களாக இதன் இணைத் தலைவராக செயற்பாட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பார்க்கீர் மரிக்கார், தொடர்ந்தும் தாம் இதன் இணைத் தலைவராக செயற்படாது, அதனை ஒரு இளம் தலைவரிடம் ஒப்படைக்க விரும்புவதாகவும் பலஸ்தீனத்தீனத்திற்கான தமது ஆதரவு என்றும் போல முழு அர்ப்பணிப்புடன் தொடருமென குறிப்பிட்டு, தமது பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

இம்தியாஸ் எம்.பியை, இப்பதவிக்கு பிரேரித்தவர் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து புதிய நிர்வாகத் தெரிவு நடந்தது. இதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இணைத் தலைவர்களாக பிமல் ரத்னாயக்க மற்றும் அதாவுத செனவிரத்ன ஆகியோர் தெரிவானார்கள். பிரதி தலைவராக முஜீபுர் ரஹ்மான் தெரிவானார்.

## பயங்கரவாதத்தை ஆதரிக்கும்...

வழங்கும் நாடு என்ற ரீதியில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. மேலும் வடக்கு மற்றும் கிழக்கில் பயங்கரவாதத்திற்கு ஆதரவு வழங்கும் அமைப்புக்கள் மீண்டும் உருவாகியுள்ளன. இதேவேளை நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் நாட்டின் புலானாய்வு பிரிவு செயலிழந்து காணப்பட்டமையினால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. ஆகவேதான் தற்போது புலனாய்வு துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். அதாவது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் புலனாய்வு துறை பலப்படுத்துவோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனாவினால் இறந்தவரை...

மனு தாக்கல் செய்யப்பட்டது.

இவர் ஜனவரி 31 இல் இறந்துள்ளதோடு இவருக்கு கொரோனா தொற்று எதுவும் இருக்கவில்லை என மனுதாரர் சார்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இறந்தவர் மீது முதலில் நடத்தப்பட்ட சோதனையில் அவர் கோவிட் 19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உடல் தகனம் செய்யப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. .

இதனை எதிர்த்து போடப்பட்ட மனுவில் முஸ்லிம்களின் நம்பிக்கை பிரகாரம் தகனம் செய்ய அனுமதிக்க முடியாது எனவும் அதன்படி பீசீஆர் சோதனையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனையைப் பெற அனுமதி கோரப்பட்டது. இறந்தவரின் பெற்றோர்கள் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, சாந்த ஜெயவர்தன மற்றும் ருஷ்டி ஹபீப் ஆகியோர் மனுதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஆஜரானார்கள்.

மனு இம்மாதம் நாளை புதன்கிழமை, 17 ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளதோடு அன்றைய தினம் சட்ட வைத்திய அதிகாரி களுபோவில ஆஸ்பத்திரி பணிப்பாளர் ஆகியோரை ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.அன்றைய தினம் வரை சடலத்தை தகனம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் கூறினார். (பா)

## வெளிநாட்டு முகவர்களாக... 03ஆம் பக்கத் தொடர்

வெளிவரும் தமிழ் பத்திரிகைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்களே கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

அண்மையில் வெளிவந்த ஒரு பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக யாழ்ப்பாணத்தில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு விகாரைகள் கட்டப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரபாகரனை மாவீரராக சித்தரித்து அவருக்கு முதலிடத்தை கொடுக்கின்றனர். மாவீரர் தினத்தில் அதுவே நடந்தது. தொல்பொருள்இடங்கள்தொடர்பில்பேசித் தீர்மானிக்கலாம். எனினும் மக்களை வைத்து அவர்கள் அதனூடாக பிரச்சினைகளை உருவாக்குகின்றன ர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மக்களை உசுப்பி விடுவதையே தொழிலாக கொண்டுள்ளனர். அவர்கள் தெற்கு சிங்கள அரசாங்கத்தை எதிரியாகவே மக்களுக்கு சித்தரிக்கின்றனர். அவற்றை வைத்து அவர்கள் அரசியல் நடத்துகின்றனர்.அந்த மக்களுக்கு அவர்கள் எதையும் செய்யவில்லை. குறைந்தபட்சம் ஒரு பஸ் நிறுத்தும் இடத்தைக் கூட அவர்கள் மக்களுக்கு கட்டிக் கொடுக்கவில்லை.

2009க்கு முன்பு மக்களுக்கு எந்த உரிமையும் அங்கு இருக்கவில்லை.

மனித உரிமையயோ சிறுபான்மையினருக்கான உரிமையயோ எதுவுமே அங்கு காணப்படவில்லை. 80 வருடங்களுக்கு பின்னரே சிவி விக்னேஸ்வரன் மக்களுக்கு உதவுவதற்காக அங்கு வந்தார். அதுவரை அவர் எங்கிருந்தார். சிங்கள மக்களுக்குள் இருந்து கொண்டு தனக்கு தேவையான அளவு சம்பாதித்துக் கொண்டார். வடக்கு க்கு வந்ததும் பிரபாகரனே கடவுள் அவர் செய்தது சரி என்று குரல் எழுப்புகின்றார். சுமந்திரனும் அவ்வாறுதான் அவர் கொழும்பு 7 இல் வசிக்கின்றார். பொன்னம்பலம் லண்டனில் இருந்து வந்தவர். இவர்கள் அனைவருமே வேறு நிகழ்ச்சி நிரலுக்காக செயற்படுகின்ற வர்கள். சில சர்வதேச நாடுகளின் முகவர்களாக இங்கிருந்து கொண்டு செயல்படுகிறார்கள்.

இவ்வாறு செயற்படுபவர்கள் எல்லாம் மீண்டும் மோதல்கள் இடம்பெற்றால் லண்டன் சுவிஸ் அமெரிக்கா என சென்று அங்கு தங்கி விடுவார்கள். என்போன்ற இளைஞர்களே மீண்டும் மரணிக்க நேரும். நாமே சிறைக்குச் செல்ல வேண்டி வரும்.எவரும் நினைக்க வேண்டாம் தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்று. எனினும் தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் புலிகள் என்றே காட்ட முயற்சிக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## மாவீரர் நாளில் முகநூலில்...

மீறாவோடை ஏழாம் குறுக்கு வீதியானது கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்படுவதற்கான ஆரம்ப நிகழ்வில் நேற்று (திங்கட்கிழமை) கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழிற்சாலைகளை உருவாக்கும் பட்சத்தில் மாவட்டத்தில் வறுமையை இல்லாது ஒழிக்க முடியும். தமிழ் மக்களுடைய கண்ணீரையும், பிரச்சினைகளையும் வைத்துக் கொண்டு காலா காலமாக தமிழ் மக்களின் கல்லறைகளில் நின்று கொண்டு செய்கின்ற பிழைப்புவாத அரசியலை வங்குரோத்து அரசியலை நாங்கள் தொடர்ந்து செய்ய முடியாது.

ஆகவே மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுபவர் தான் அந்த மக்கள் தலைவனாக இருக்க முடியும். தேர்தல் காலங்களில் நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். முப்பது வருடம் இடம்பெற்ற யுத்தத்தின் இழப்பை நான்கு மாதத்தில் நிறைவு செய்ய முடியாது. நாங்கள் கட்டம் கட்டமாக வேலைத் திட்டங்களை செய்து முடிப்போம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கம் சார்பாக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பின் ஊடாக ஆயிரத்து இருநூறு பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பேரும் இல்லாது விட்டிருந்தால் இந்த வேலை குறைவாக கிடைத்திருக்கும். முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆளும் கட்சியோடு இருந்த படியினால் அவர்கள் பகுதிகள் வளமாக காணப்படுகின்றது. கடந்த காலத்தில் அவர்கள் அபிவிருத்திக்காக போராடி எந்த உரிமையும் இழந்ததாக நான் பார்க்கவில்லை. ஆனால் எமது சமூகத்தில் உரிமையும், அபிவிருத்தியும் இல்லை. இருக்கின்றவர்களை அழிக்கின்ற வேலைத் திட்டத்தினை எமது தமிழ் அரசியல்வாதிகள் கையில் எடுத்துள்ளார்கள்.

தமிழ் தேசியம் தடம் மாறலாம். ஆனால் தடம் புறளக்கூடாது. சாத்வீக போராட்டம், ஆயுதம் போராட்டம் இடம்பெற்றது. தற்போது அரசியல் போராட்டம் உள்ளது. இந்த போராட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். பல பிரச்சினைக்கு மத்தியில் வாழ்ந்த எமது தமிழ் சமூகத்தினை மீண்டும் பிரச்சினைக்குள் மாட்டி விடுகின்ற வேலைத் திட்டத்தினை செய்ய முடியாது.

இப்போது இருக்கும் தலைமுறையாவது நிம்மதியாக சந்தோசமாக இழப்புக்களை சந்திக்காமல் வாழ வேண்டும். 2009ஆம் ஆண்டு எந்த பாராளுமன்ற உறுப்பினரும் மக்களுக்காக போராடவுமில்லை. ஆயுத களத்தில் இறங்கவுமில்லை. அவர்கள் குடும்பத்தோடு மாறிவிட்டார்கள். இன்று உசுப்பேத்துகின்ற, உணர்ச்சிவசப்படுத்துகின்ற அரசியலை செய்ய முடியாது. அது எமது சமூகத்தினை பாதிக்கும் என்றார்.

## எம்.பிகளுக்கு...

வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலே எம்.பிகளுக்கு இன்று தடுப்பூசி வழங்கப்படுகிறது.

## ஜப்பானில் 3,60,000 பேருக்கு தொழில்...

நிபந்தனைகள் மூலமான பத்திரநகல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதற்கான செயற்றிட்டங்களும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சு,மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் எற்பாட்டில் யாழில் இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்பு அலுவலகத்தை திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஜப்பான், பொலாந்த, ரூபானியா,கொரியா துருக்கி, ஆகிய நாடுகளுக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பதிவுகளை பெற்றுக்கொண்டு தொழில் சார்ந்த தகமைகளுடாக சிறந்தொரு தொழில்வாய்ப்பு கட்டமைப்பினை பெற்றுக்கொள்ளமுடியும்.

யாழ். மாவட்டத்தில் முதல்முறையாக வடமாகாணத்திற்கான பிரதி வேலைவாய்ப்பு கிளை அலுவகத்தினை இளைஞர், யுவதிகளுக்காக திறந்து வைக்கின்றேன். இந்த நிறுவனத்தின் ஊடாக இளைஞர்,யுவதிகள் தொழில்வாய்ப்புக்காக புலம்பெயர்ந்த நாடுகளின் சென்று தமது தொழிலினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எந்தவொரு காரணத்திற்காகவோ வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளுவதற்காக கொழும்புக்கு வந்து செல்லவேண்டியது அவசியம் இல்லை.

வடமாகாணத்தில் தொழில்வாய்ப்பினை எதிர்பார்க்கும் இளைஞர், யுவதிகள் தமது விண்ணப்பங்களையும், அதற்கான ஆலோசனை வழிகாட்டலையும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய அலுவகத்தில் பெற்றுக்கொள்ளாம்.

கிராமம் மூலமாக சென்று அதற்கான இளைஞர்,யுவதிகளுக்கான தொழில்வழிகாட்டல் நடைமுறையினை செயற்படுத்த முன்வர வேண்டும். வடமாகாணத்தில் இருந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக தொழில்வாய்ப்பு உறுதி செய்யப்படும் போது மொழிப் பயிற்சியும் வழங்கப்படும்.

## எவரும் வரலாம் எவரும் போகலாம்...

மலையக சமகால வரலாற்றில், தமிழ் முற்போக்குக் கூட்டணி அதிகாரத்தில் இருந்த காலமே, அதிக காத்திரமான காரியங்கள் நிகழ்ந்த பொற்காலம். மனசாட்சியுள்ள எவரும் இதை மறுத்திட முடியாது. ஆரம்பித்து முடிவுராத பல காரியங்கள் இன்னமும் உள்ளன. அவற்றை முடித்திட நாம் மீண்டும் எழுந்து அதிகாரத்துக்கு வருவோம். அதுவரை எதிரணியில் இருந்து காத்திரமான தேசிய பணியை நாம் ஆற்றுகிறோம்.

கீழ்வரும் ஆவணம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின், 2015 முதல் 2019 வரையிலான நான்கு (4) வருட சாதனைகளை பட்டியலிடுகிறது.

எங்கள் முழு ஆட்சிக் காலம், 2018 வருட ஒக்டோபர் மாத அரசியலமைப்பு சதியின் மூலமும், பின் 2019ஆம் வருடம் முன்கூட்டியே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதனாலும், அதிகாரத்தில் இருந்த காலம் நான்கு (4) வருடங்களாக சுருங்கியது. இந்த நான்கு (4) வருட சாதனைகளை, எங்களுக்கு முன் மலையக தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்து, 1978 முதல் 2015 வரை சுமார் நாற்பது (40) வருட காலமாக, மாறி மாறி வந்த ஒவ்வொரு ஆட்சியிலும் அதிகாரத்தில் இருந்த ஏனைய "கட்சிகளின்" செயற்பாட்டுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

1. தோட்டங்களில் ஏழு பேர்ச் காணி வழங்கலுக்கான அமைச்சரவை பத்திரம் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. நீண்ட காலமாக நின்று போயிருந்த, இந்திய அரசின் பெருந்தோட்ட வீடமைப்பு உதவி திட்டம், இலங்கை – இந்திய அரசுகளின் ஒப்புதலுடன், இந்திய அரசுக்கும், புதிய மலைநாட்டு கிராமங்கள் அமைச்சுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தையடுத்து, நடைமுறைக்கு வந்தது.

# கிழக்கின் குரல்



# துப்பாக்கிகளால் செய்ய முடியாததை பேனாக்கள் சாதித்துக் காட்டியுள்ளன

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)



துப்பாக்கியால் செய்யமுடியாதவற்றை பேனையால் செய்யமுடியும் என்பதை வியாழேந்திரன் மற்றும் பிள்ளையானுக்கு வாக்களித்த மக்கள் நிருபித்துள்ளதாக

கிராமப்புற மற்றும் பிராந்திய குடிநீர் விநியோக திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் கீழ் "2025ஆம் ஆண்டு அனைவருக்கும் சுத்தமான குடிநீரை வழங்கும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ்" மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற நடமாடும் சேவையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.நேற்று திங்கட்கிழமை (15) காலை நடைபெற்ற இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்

பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நீர்வழங்கல், வடிகாலமைப்பு அதிகாரசபை, சமூக நீர்வழங்கல் திணைக்களம், நீர்வழங்கல் அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டு குடிநீர் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து அவற்றுக்கு தீர்வினை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், கிழக்கு மாகாணத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 வீதமான சுத்தமான குடிநீர் தேவை மட்டுமே பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இங்கு 51 பதிவு செய்யப்பட்ட கிராமிய நீர் வழங்கல் சங்கங்கள் இருக்கின்றன. அதில் 17சங்கங்கள் தான் இயங்குகின்றன. அனைத்து சங்கங்களையும் செயற்பாட்டு ரீதியான சங்கங்களாக மாற்றுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

விசேடமாக நீர்வழங்கல் அதிகார சபையின் ஊடாக எதிர்வரும் மூன்று வருட காலத்திற்குள் 85 வீதமான குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் இப்பகுதியில் பாரியளவிலான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் பொய்களைக் கூறி ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் இவரைப் பழிவாங்குவதிலே குறியாக இருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுநீரகப் பிரச்சினை அதிகமாகவுள்ள பகுதிகள் தொடர்பான தகவல்களை மாவட்ட செயலகம் தருமானால் இந்த ஆண்டுக்குள் அப்பகுதிகளில் சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஏனைய அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதிகளை விட அதிகமான நிதியை ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கியுள்ளார். எனவே, குடிநீர் பிரச்சினையுள்ள பகுதிகள் பற்றி தகவல்களை வழங்கினால், அப்பகுதிகளுக்கு குடிநீரை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

இங்குள்ள சில கட்சிகள் அப்பாவிகளின் மூளைகளைச் சலவை செய்து மக்களை ஏமாற்றி சுயநல அரசியல் செய்கின்றனர்.

ஆனால் வியாழேந்திரன்,சந்திரகாந்தன் போன்றவர்கள் மக்கள் பிரச்சினைகளை உண்மையாக அடையாளம் கண்டு அவற்றைத் தீர்க்கப் பாடுபடுகின்றனர்.

நாட்டில் யுத்தம் நடைபெற்ற போது, பிரபாகரன் போன்ற தலைவர்கள் தங்களது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு கல்வி கற்க அனுப்பிவிட்டு சுகபோக வாழ்க்கை வாழந்தனர்.

ஆனால் துப்பாக்கி முனையால் செய்ய முடியாதவற்றை பேனை முனையினால் செய்யமுடியும் என்பதை வியாழேந்திரன், பிள்ளையானுக்கு வாக்களித்ததன் மூலம் இப்பிரதேச மக்கள் உறுதிப்படுத்தி உள்ளதாகவும் அவர் கூறினார்.

## நடுநிலைபேணும் மனநிலையில் செயற்பட்ட மக்கள் தலைவன்

முன்னாள் சபாநாயகருக்கு அனுதாபம்

நடுநிலை பேணும் சிறந்த சபாநாயகராகத் திகழ்ந்து அரசியலில் தடம் பதித்த மக்கள் தலைவன் அமரர் வி.ஜே.மு லொகுபண்டார என, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், ரிஷாத்பதியுதீன் தெரிவித்துள்ளார். இலங்கையின் 18 ஆவது சபாநாயகரான வி,ஜே.மு லொகுபண்டாரவின் மறைவு குறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளதாவது: அரசியலில் 1977 ஆம் ஆண்டு காலடி வைத்த அமரர் லொகுபண்டார ஒரு முன்னணி அரசியல்வாதி. அமைச்சராக மட்டுமன்றி 2004 முதல் 2010 வரை சபாநாயகராகவும் இவர் பணியாற்றியவர்.சபாநாயகர் பதவி ஆளுங்கட்சிக்கே உரித்தென்ற சம்பிரதாய அரசியலில் எதிர்க்கட்சியிலிருந்தே இவர்,

சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். இந்தத் தெரிவு இவரது அரசியலைப் பெருமைப்படுத்தியது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் அரசாங்கத்தில் சபாநாயகராகப் பணியாற்றி, நடுநிலை பேணிச் செயற்பட்டவர். மேலும் 2010 முதல் 2015 வரை சப்ரகமுவ ஆளுநராகச் செயற்பட்டதால், மக்கள் பணிக்கே உரித்தான முன்னுதாரண தலைவராகவும் இவர் திகழ்கிறார்.

# ஆயித்தியமலை சதாசகாய அன்னை தேவாலய திருவிழா

(கல்லடி குறூப்நிருபர்)



மட்டக்களப்பு ஆயித்தியமலை புனித சதாசகாய அன்னையின் மாசிமாத திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது.

இத்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இறுதிநாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது. அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம் தலைமையில் நடைபெற்ற

இறுதிநாள் திருவிழாவில், ஆலய பங்குத்தந்தை இருதயநாதன் ஜெமில்டனும் கலந்து கொண்டு கூட்டாக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பங்கேற்ற அனைவரும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி திருப்பலிப் பூஜைகளில் கலந்துகொண்டனர். இதன்போது புனித சதாசகாய அன்னை திருச்சொருபத்தை தாங்கியவாறு ஆலயத்தின் உள்வீதி வலம் வந்ததையடுத்து அருட்தந்தையர்களால் இங்கு வருகைதந்த மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். பங்குத்தந்தை இருதயநாதன் ஜெமில்டன் மற்றும் பங்கு மக்களால் கொடியிறக்கம் நிகழ்வு இடம்பெற்றது.

# நிந்தவூர் அல்அதான் வித்தியாலயத்தில் தேசிய சிறுவர் மரநடுகை வேலைத் திட்டம்

(நிந்தவூர் குறூப் நிருபர்)



தேசிய சிறுவர் மரநடுகை (2021) வேலைத் திட்டத்தின் கீழ்,நிந்தவூர் அல்அதான் வித்தியாலயத்தில் நேற்று (15) மரக்கன்றுகள் நடப்பட்டன.கிழக்கு மாகாண ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி. பார்த்திபன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. வனவிலங்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க இதில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எஸ். புவனேந்திரன், நிந்தவூர் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் வை.எல். சுலைமாலெவ்வை, நிந்தவூர் கோட்டக் கல்வி அதிகாரி எம். சரிப்டீன் உட்பட கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள், வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் இதில் கலந்து கொண்டனர்.

புதிய வருடத்தில், தரம் ஒன்றில் சேரும் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்வாறு நடப்படும் மரக்கன்றுகளை மாணவர்கள் நன்கு பராமரித்து புகைப்பட மூலம் தங்கள் பாடசாலைக்கு சமர்ப்பிக்க வேண்டும். பாடசாலை மாணவர்கள், அவர்களின் பெற்றோர் மரக்கன்றுகளை பராமரிப்பதைப் பொறுத்தே அவர்களது நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்தப்படுவர்.

# சிறைக் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் கடந்த சனிக்கிழமை (13) திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

திருகோணமலை சிறைச்சாலையும், சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கமும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்தன. கற்றல் உபகரணங்களை சிறைச்சாலை ஐக்கிய ஒன்றியம் வழங்கியிருந்தது.75 சிறைக் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் இணைத் தலைவர்களான தயானந்த ஜெயவீர, சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர், சிறைச்சாலை ஐக்கிய ஒன்றியத்தின் சார்பாக எஸ்.சுகன், எஸ்.ரவிந்திரன், பிரதான ஜெயிலர் எல்.எஸ்.பி.லியனகே, புனர்வாழ்வு அதிகாரிகள், பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் பலரும் கலந்து கொண்டனர்.

# வித்தியாரம்ப விழாவில் மரக்கன்றுகள் விநியோகம்

(ஒலுவில் விசேட நிருபர்)

புது வருடத்தில் (2021) தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களைச் சேர்க்கும் வித்தியாரம்ப விழா பாலமுனை ஹிக்மா வித்தியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை (15) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.எல்.எம். பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஏடு தொடங்கி வைத்தார். மேலும் மாணவர்களுக்கு பழ மரக் கன்றுகளும் இதன்போது வழங்கப் பட்டது.

பழமரத் தோட்டம், தேசிய மர நடுகை வேலைத்திட்டம் என்பவற்றுக்கு அமைய இக்கன்றுகள் வழங்கப்பட்டன. பின்னர் பாடசாலை வளாகத்தில் இந்த மரக்கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2021ம் ஆண்டு தரம் ஒன்றிற்கு புதிய மாணவர்களைச் சேர்க்கும் தினத்தில், வீட்டுத் தோட்டத்தில் நடுவதற்காக பழ மரக்கன்றுகள் வழங்கும் திட்டத்தை, விவசாய இராஜாங்க அமைச்சர் சஸிந்தர ராஜபக்ஷ அறிமுகப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் அடிப்படையிலே, மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

பாடசாலையின் விவசாய ஆசிரியர் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகளால் புதிய மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் மர நடுகை



தொடர்பான பயிற்சியும், விளக்கங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி இந் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# பொத்துவில் அக்கரைப்பற்று வீதியில் விபத்து! ஒருவர் பலி



(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

பொத்துவிலிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி சென்ற வேன், வேளாண்மை இயந்திரம் ஏற்றி வந்த உழவு இயந்திரத்துடன் மோதியதில் வேன் சாரதி ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

இவ்விபத்து, தாண்டியடி பிரதேச வளைவில் நேற்று முன்னதினம் (14) பி.ப.3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அக்கரைப்பற்று பிரதேச சாரதி பயிற்சி நிலைய வேனே விபத்துக்குள்ளானது.

ஸ்தலத்திற்கு விரைந்த 1990 சுவசரிய அவசர சேவை, பொலிஸார் மற்றும் பொது மக்கள் இணைந்து, சடலத்தை மீட்டனர். பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு சடலம் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



சொறிக்கல்முனை 6ஆம் கிராமம் அல் தாஜுன் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்க்கும் வித்தியாரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. பாடசாலை அதிபர் ஏ.வீ எம்.ஜவாஹிர் தலைமையில் நேற்று (15) நடைபெற்ற இந்நிகழ்வில், பாலர் புரட்சி எனும் செயற்திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

(படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

# இரவில் உலாவும் கட்டாக்காலி மாடுகளால் சுகாதார சீர்கேடு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் நகர் பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, சந்தை வீதி, பஸ் தரிப்பிடம் போன்ற பல்வேறு இடங்களில் இரவில் பெருமளவிலான கட்டாக்காலி மாடுகள், படுத்துறங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.இது குறித்து கவனம் எடுக்குமாறு பொது மக்கள் அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

கால்நடை உரிமையாளர்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

கால்நடைகளின் மலம் மற்றும் சிறுநீர்கள் பெரும் துர்நாற்றத்தை ஏற்படுத்தி பயணிகளை பெரும் சிரமத்திற்குள்ளாக்கின்றது. பொது இடங்களில் திரியும் கட்டாக்காலி மிருகங்களைக் கட்டுப்படுத்த தவறும் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டுமென, மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# திருப்பாடுகளின் தவக்காலம்

## திருநீற்றுப்புதனோடு நாளை ஆரம்பம்

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளை நினைவுகூரும் தவக்காலம் திருநீற்றுப்புதனான நாளை முதல் ஆரம்பமாகிறது.

திருநீற்றுப்புதனோடு தொடங்கும் இந்த தவக்காலம் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா வான 'ஈஸ்டர்' தினத்தின் முதல்நாள் வரை 40 நாட்கள் கிறிஸ்தவர்களால் அனுச ரிக்கப்படுகிறது.

தவக்காலம் என்றாலே ஒரு வேளை மட்டும் உண்பது, இரு வேளை பட்டினி கிடப்பது, மாமிசம் உண்ணாமலும் மது அருந்தாமலும் இன்ன பிற கேளிக்கை களில் ஈடுபடாமலும் இருப்பது; பிறகு தவக்காலம் முடிந்ததும் எல்லாத் தீய செயல்களையும் ஆரம்பித்துவிடலாம் என்ற அறியாமை பலரிடம் இருக்கிறது.

தவக்காலத்தை இப்படி அணுகுவது சரியா? வேறு எப்படி அணுகுவது என்று கேட்பவர்களுக்கு அதை ஒரு வசந்த காலத்தின் வாசலாக எண்ணிப் பார்ப்ப தில் எந்தத் தவறும் இல்லை.

தவக்காலம் வசந்தத்தைக் கொண் டுவரும் புதியதொரு ஆரம்பம் என்ற பொருளில் அணுகுவதையே நம் ஆண்டவர் விரும்புகிறார். வசந்தம் வருவதற்கு முன் வலியும் இழப்புகளுக் கும் மிகக் கடினமான நாட்களை நாம் கடந்து வர வேண்டும்.

கொளுத்தும் கோடையும், அதன்பின் வாட்டும் குளிரும், குளிரைத் தொடர்ந்து வெறுமையை உணர்த்தும் இலையுதிர் காலமும் வந்தபிறகே, புத்தம் புதுத் துளிர் கள் தென்றலில் சிலுசிலுக்க வசந்தம் தன் வருகையை உறுதி செய்கிறது. வசந்தம் தன் நாட்களில் சிறந்த செழுமையையும் விளைச்ச லையும் நமக்குத் தருகிறது.

செழுமையும் நல்ல விளைச்சலும் தேவை யெனில் மரங்கள் இலைகளை உதிர்த்தது போல மனிதர்களாகிய நாமும் தீமைகளை யும் கெட்ட பழக்க வழக்கங்களையும் உதறி விட்டுப் புதிய மனிதர்களாய் மனமாற்றம் பெறத் தவக்காலம் அரிய வாய்ப்பாக மாறிவி டுகிறது.

### இயேசுவின் வழியில் பயணம்:

மனமாற்றம் என்பது ஒரு பயணம்; இருளி லிருந்து ஒளியை நோக்கி, பாவத்திலிருந்து புனிதத்தை நோக்கி, சாவிலிருந்து வாழ்வை நோக்கி, வெறுப்பிலிருந்து அன்பை நோக்கி, இயேசுவின் பாதையில் நடைபோடும் புனித பயணம்.

இயேசு தன்னுடைய பொது வாழ்வைத் தொடங்குவதற்கு முன் பாலைநிலத்தில் நாற்பது பகலும் நாற்பது இரவும் உண்ணா நோன்பிருந்தார் என்று விவிலியம் சான்று பகர்கிறது. நாற்பது நாட்களின் முடிவில் அவர் பசியுற்றிருக்கும்போது சாத்தான் அவரை அணுகி, "நீர் கடவுளின் மகனானால் இந்தக் கற்களை அப்பம் ஆகும்படி கட்டளையிடும்" என்றான்.

அதற்கு இயேசு மறுமொழியாக, ''மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று கடவுள் வாயிலி ருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையிலிருந் தும் உயிர் வாழ்கிறான் என்று எழுதியிருக்கி றதே" என்று கூறி அதைத் துரத்தியடித்தார்.

தன் தவமுயற்சியில் தீய செயல்களின் அதிபதியாகிய சாத்தானின் சோதனைகளை வென்று காட்டினார் இயேசு.



தவக்காலத்தில் நாம் எப்படி இருக்க வேண்டும்? அதை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று தெரியாதவர்கள் இருக்க லாம். முதலில் தவக்காலத்தை உங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாக எண்ணுங்கள். நான் நோன்பு இருக்கிறேன் என்று என்னைச் சுற்றியுள்ளவர் அனைவருக்கும் அறிக்கையிட வேண்டும் என்பதில்லை.

விவிலிய ஆராய்ச்சியாளர்கள் இயேசுவின் காலத்திலிருந்த எருசலேம் வாழ்க்கையிலிருந்து ஒரு சுவையான தகவலைத் தருகிறார்கள்: யூதர்களில் ஒரு பிரிவினராகிய பரிசேயர்கள் வாரத்தில் இரண்டாவது மற்றும் ஐந்தாவது நாட்களில்தான் நோன்பிருப்பார்களாம். ஏனென் றால் மோசே இறைவன் அளித்த கட்டளை களைப் பெற சீனாய் மலைமேல் வாரத்தின் ஐந்தாம் நாள் ஏறிச் சென்று அடுத்து வந்த வாரத்தின் இரண்டாம் நாள் திரும்பி வந்தார்.

அதன் நினைவாகவே தாங்கள் இவ்வாறு நோன்பிருக்கிறோம் என்பார்களாம்! ஆனால் ஆராய்ச்சியாளர்களின் முடிவின்படி எருசலே மில் வாரத்தின் இரண்டாம் மற்றும் ஐந்தாம் நாட்களில் சந்தை கூடுவது வழக்கம். அந் நாட்களில் எருசலேம் நகரைச் சுற்றியிருந்த ஊர்களிலிருந்து நகருக்குப் பெருந்திரளான மக்கள் வந்து கூடுவர்.அவர்கள் தங்களைப் பக்திமான்கள் என்று எண்ண வேண்டும் என்பதற்காகவே பரிசேயர்கள் தங்களுடைய தலைமுடியை சீர் செய்யாமல் சோர்ந்த முகத்துடன் அலைந்து தாங்கள் நோன்பிருப் பதை வெற்றுப் பெருமைக்காக எல்லோருக் கும் காட்டிக் கொள்வார்களாம்.

இன்று நம்மில் பலரும் கூட பரிசேயர்க ளைப் போன்ற வெற்றுப் பெருமை யில் தவக்காலத்தின் புனிதத்தைக் குலைத்துவிடுறோம். ஆனால் இச்செயலை இயேசு அன்று கண்டித்தார். அது பரிசேயர்க ளைக் கோபமூட்டியது. அன்று அவர்களது வெளிவேடத்தை அவர் சுட்டிக்காட்டியது இன்று நமக்கும் பொருந்துகிறது.

"நீங்கள் நோன்பு இருக் கும்போது வெளி வேடக்கார ரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். அவர்கள் நோன்பு இருப்பதை மனிதர் பார்க்கும்பொருட்டுத் தங்கள் முகத்தை விகாரப்படுத்திக் கொள்கின்றனர்.

நோன்பு இருக்கும்போது தலைக்கு எண்ணெய் தடவி; முகத்தைக் கழுவிக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாமல் மறைவாயுள்ள பரலோகத் தந்தைக்கு மட்டும் தெரியும். அவரும் உங்களுக்குப் பிரதிபலன் அளிப்பார்" (மத்தேயு:6:16) என்றார்.

நோன்பு மூலம் நம்மை நாமே வருத்திக் கொள்ளுதல் என்பது நம் உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் தூய்மைப்படுத்துவதாக அமைய வேண்டும்.

இவற்றோடு இயேசுவின் கல்வாரிப் பாடுகளை தியானம் செய்வதும் அதற்குத் திருப்பலியிலும் தவக்கால ஜெபக்கூட்டங்க ளில் பங்கேற்பதும் முக்கியமான பக்தி முயற் சிகள் என்பதை மறக்கக் கூடாது.

தீய பழக்க வழங்களை முற்றாகத் துறத் தல், அவற்றுக்குச் செலவு செய்துவந்த தொகையை ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல், துன்ப, துயரத்தில் இருப்போரைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதலும் நம்பிக் கையும் அளித்தல்,நோயாளிகளைச் சந்தித்து ஆறுதல் சொல்லுதல், இயலாதவர்களுக்கு உதவி செய்தல், ஆணவத்தைத் துறந்து தாழ்ச்சியோடு இருத்தல் போன்றவை எம்மை இயேசுவின் உண்மை சீடராக்கும்.

அருட்தந்தை அருண் ரெக்ஸ்...




# ஆயித்தியமலை புனித சதாசகாய அன்னை ஆலய திருவிழா







மட்டக்களப்பு ஆயித்தியமலை புனித சதாசகாய அன்னையின் மாசிமாத திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலியுடன் நிறைவுபெற்றது. அருட்தந்தை ஏ. ஏ. நவரெட்ணம் அடிகளாரின் தலைமையில் ஆலய பங்குத்தந்தை இருதயநாதன் ஜெமில்டன் அடிகளாரும் இணைந்து திருவிழா கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

படங்கள்; கல்லடி குறூப் நிருபர்

# உண்மை அன்பின் பொருளைப் புரிந்துகொள்ள

## இறைவனிடம் மன்றாடுவோம்

கடந்த ஞாயிறன்று மீண்டும் ஒருமுறை தொழுநோயாள ரைப் பற்றி சிந்திக்க நாம் அழைக் கப்பட்டுள்ளோம்.

நோயுறுதல், நலமடை தல் என்ற அனுபவங்களிலி ருந்து நமக்குத் தேவையான தெளிவான பாடங்களைப் பயில தொடர்ந்து மூன்றாவது வாரமாக, நோயுற்றோரை இயேசு குணமாக்கும் மற் றுமொரு நிகழ்வு கடந்த ஞாயிறன்றும் நற்செய்தி யாக நம்மை வந்தடைந் துள்ளது.

நலம் பெறுவதற்கு, மருத்துவ உதவிகள் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், ஒருவர் நலமடைவதற்குத் தேவையான முதல் படி தான் நலமடைவோம் என்று அவர் உள்மன தில் எழும் நம்பிக்கை. இந்தக் கருத்தை ஏற்க னவே நாம் சிந்தித்தோம். நமது நம்பிக்கையின் அடித்தளமாக இறைவனைக் கொண்டிருந்தால் குணமடை வது எளிதாகும் என்பதை ஒரு மருத்துவரே தெளிவாகக் கூறி யுள்ளார்.

ஹென்றி மிச்செல் என்ற பேராசிரியரின் மனைவி, கடுமையான ஒரு நோயி லிருந்து குணமடைந்தார். குணமளித்த மருத்துவருக்கு அவர் நன்றி சொன்னபோது, அந்த மருத்துவர் தந்த பதில் பேராசிரியரை வியப்புறச் செய்தது.:

"முதலில் கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள். அடுத்து, உங்கள் மனைவிக் காகச் செபித்தவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். உங்கள் மனைவி குணம டைந்ததில் என் பங்கு மிகக் குறைவே" என்று மருத்துவர் சொன்னதும், அவர், அதிக அளவு தாழ்ச்சியுடன் பேசுவ தாக, பேராசிரியர் மிச்செல், அவரி டம் சொன்னார்.

மருத்துவரோ, மறுமொழியாக, "நான் சொல்வதை நீங்கள் நம் பலாம் நம்பாமலும் போகலாம். ஆனால், இதுதான் உண்மை. மருத் துவர்களாகிய நாங்கள் யாரையும் குணப்படுத்துவது கிடையாது. குணமடைவதற்குத் தடையாக உங் களுக்குள் இருக்கும் கிருமிகளை நீக்குவது ஒன்றையே, நாங்கள் திறம்படச் செய்கிறோம். நீங்கள் குணமடைவது, எங்கள் கட்டுப்பாட் டில் இல்லை" என்று கூறினார்.



ஒருவர் நலம் அடைவதற்கு முதலில் இறைவனின் அருள் இரண் டாவது நோயாளியிடமும் அவரைச் சுற்றியிருப்போரிடமும் உருவாகும் நம்பிக்கை மூன்றாவது மருத்துவ ரின் திறன் என்ற இந்த வரிசையில் நம் சிந்தனைகள் அமையவேண் டும்.

இவ்வாண்டு ஜனவரி 31ஆம் திகதி ஞாயிறன்று நாம் தொழுநோ யாளரின் உலக நாளை 68வது முறையாக கடைபிடித்தோம். நோயுற்றோரைப் பற்றி, சிறப்பாக தொழுநோயுற்றோரைப் பற்றி சிந் திக்க ஞாயிறு வாசகங்கள் மீண்டும் ஒருமுறை நமக்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளன.

"ஒரு நாள் தொழுநோ யாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து, "நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்று முழந்தாள்ப டியிட்டு வேண்டினார். இயேசு அவர்மீது பரிவுகொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!" என்றார். உடனே தொழுநோய் அவரைவிட்டு நீங்க, அவர் நலமடைந்தார். "(மாற்கு நற்செய்தி 1: 40 42)

தொழுநோயுற்ற ஒருவர் நலமடைகிறார் என்ற நிகழ்வு நல்ல செய்திதான். முப்பது ஆண்டுகளுக்கு முன் நாம் பயன்படுத்திய விவிலியத் தில் தொழுநோயாளருக்குச் சரியான மரியாதை வழங்கப்ப டவில்லை.

தொழுநோய் என்ற முத்திரை குத்தப்பட்டவர்கள் அடைந்த கொடுமைகளை, கடந்த வார ஞாயிறு முதல் வாசகம் நம் கவனத்திற்கு கொணர்கிறது. லேவியர் நூல் 13: 12, 4446. இஸ்ரயேல் மக்கள் தொழுநோயாளி களை நடத்திய விதம் மிகக் கொடு மையானது. அந்த நோய் உடையவர் ஊருக்கு வெளியே தங்க வேண்டும், ஊருக்குள் வரவேண்டிய அவசி யம் இருந்தால், ஒரு மணியை அடித்தவாறு வரவேண்டும். இந்த மணிசப்தம் கேட்டதும், எல்லாரும் விலகிவிடுவார்கள். தொழுநோ யாளி யாரையாவது தீண்டிவிட்டால், அவர்களும் தீட்டுப்பட்டவர் ஆகிவி டுவார்கள். ஒரு சில சமயங்களில், இப்படி நேர்ந்த தவறுகளுக்கு, அந்த நோயாளிகல்லால் எறியப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம்.

இஸ்ரயேல் சமுதாயத்திலும் இன்னும் உலகின் பல நாடுக ளிலும் தொழுநோயாளருக்கு நிகழ்ந்த அல்லது இன்றும் நிகழ்ந் துவரும் இதே கொடுமைகள்கொ விட்19 தொற்றினால் பாதிக்கப்பட் டவர்களுக்கும் ஏற்பட்டது என்பதை நாம் அறிவோம்.

இந்த நோயுற்றவர்கள் உடலள வில் துன்புற்றதைவிட அவர்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு தனிமையில் மரணத்தைச் சந்தித் தது இறந்த அவர்களது உடல்கள் தகுந்த மரியாதையின்றி நடத்தப் பட்டது அனைத்து நிலைகளிலும் இந்நோயாளிகளும், அவர்களது குடும்பத்தினரும் சித்திரவதைகளை அனுபவித்தனர்.

இந்த பின்னணியில் நாம் நற் செய்தி நிகழ்வைக் கற்பனை செய்து பார்க்கவேண்டும். இயேசுவைச் சுற்றி எப்போதும் கூட்டம் இருந்தது. அந்நேரத்தில், அங்கு வந்த தொழு நோயாளியின் மனதில், பெரும் போராட்டம் நிகழ்ந்திருக்கும். அந்தக் கூட்டத்தின் நடுவே சென்றால், அவர்கள் கோபத்திற்கு உள்ளாக நேரிடும். அந்தக் கோபம், வெறியாக மாறினால், கல்லால் எறியப்பட்டு, கொல்லப்படலாம். இதெல்லாம் தெரிந்திருந்தும், அந்தத் தொழுநோ யாளி, இயேசுவை அணுகிச்சென் றார். அந்த நம்பிக்கையே, அவர் குணமடைந்ததற்கு முதல் படியாக அமைந்தது.

ஜெரோம் லூயிஸ்...

# ஜோசப் வாஸ் மன்றத்தின் பெரிய சிலுவைப்பாதை



கொழும்பு ஜோசப் வாஸ் மன்றம் நடத்தும் பெரிய சிலுவைப்பாதை நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை 3.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக இம்முறை மேற்படி பெரியசிலுவைப்பாதை நிகழ்வு கள் தொடர்பு சாதன தொழில்நுட் பம் ஊடாக நடைபெறும் என அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளார்கள்.

கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை பெரிய சிலு வைப்பாதை நிகழ்வுக்கு தலைமை வகிப்பதுடன் திருகோணமலை மறைமாவட்ட அருட்தந்தை ரஜீவன் அடிகளார் தியான வழிபா டுகளை மேற்கொள்ள உள்ளார்.

ஜோசப் வாஸ் மன்றம் 25 ஆவது தடவையாக இந்த பெரிய சிலுவைப் பாதை நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளதுடன் ஹோலி மேரி தொலைக்காட்சி சேவை உட்பட பல்வேறு தொலைக் காட்சி ஊடாகவும் இணையத்த ளங்கள் ஊடாகவும் இந்த பெரிய சிலுவைப் பாதையில் விசுவாசிகள் பங்கேற்க முடியும் என ஏற்பாட்டா ளர்கள் தெரிவித்துள்ளனர்.(ஸ)

# மாணவர்கள் மீது ஆசிரியர்கள் பாலியல் வன்புணர்வு இம்சை

## கல்வி அமைச்சிடம் விளக்கம் கோருகிறது மனிதவுரிமை ஆணைக்குழு

*யாழ்ப்பாணம் குறூப் நிருபர்*

வலிகாமம் பாடசாலையில் மாணவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ள விடயம் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சிடம் யாழ்.மனிதவுரிமை ஆணைக்குழு விளக்கம் கோரியுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வலிகாம் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் மீது அதே பாடசாலையில் கல்வி கற்ப்பிக்கும் ஆண் ஆசிரியர்கள் சிலரால் பாலியல் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். தரம் 11 சேர்ந்த ஆண் மாணவர்களை மாணவர்களின் சம்மதம் இன்றி வலுக்கட்டாயமாக உடலில் பச்சை குத்தியதை பார்வையிட வேண்டும் என கூறி 70 க்கு மேற்பட்ட மாணவர்களை பாடசாலையின் தனியான ஓர் இடத்திற்கு ஆசிரியர்களால் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களின் மேல் மற்றும் கீழ் ஆடைகள் களையப்பட்டு பார்வையிடப்பட்டுள்ளன. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பல மாணவர்கள் பாடசாலை செல்லாத நிலையில் அங்கு கல்வி கற்பிக்கும் பெண் ஆசிரியர்களை குறித்த மாணவர்களது வீடுகளுக்கு அனுப்பி மீண்டும் பாடசாலையில் இணைத்துள்ளனர். இச் சம்பவத்தால் தாம் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விடயம் தொடர்பில் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவின் அமைப்பாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது, விடயம் தொடர்பில் முறைப்பாடு கிடைத்ததாகவும் இது தொடர்பில் மாகாண கல்வி அமைச்சை விளக்கமளிக்குமாறு எழுத்துமூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

# ரவிகரனிடம் முல்லைத்தீவு பொலிசார் வாக்குமூலம் பதிவு

*விஜயரத்தினம் சரவணன்*

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பாக முல்லைத்தீவு பொலிசார் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அழைப்பாணையுடன் ரவிகரனின் வீட்டிற்கு பொலிசார் சென்றனர். எனினும் அச் சமயம் ரவிகரன் வீட்டில் இருக்கவில்லை. இதனையடுத்து நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

# பளையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

*பரந்தன் குறூப் நிருபர்*

கிளிநொச்சி பளை பகுதியில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் அதிகாலை இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர். பொலிசாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைய 5 கிலோ கஞ்சாவினை மருதங்கேனியிலிருந்து கிளிநொச்சிக்கு கொண்டு செல்லும் வழியில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.



இரணைதீவில் கடலட்டை ஏற்றுமதி கிராம அங்குரார்ப்பண நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் கலந்துகொண்டிருப்பதையும், அங்கு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.
படங்கள் கிளிநொச்சி குறூப் நிருபர்

# வவுனியா பிரதேச செயலக பிரிவில் 4,771 குடும்பங்கள் வறுமை கோட்டில்

*வவுனியா விசேட நிருபர்*

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் பதிவில் உள்ள 35,875 குடும்பங்களில் 4,771 வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களாக காணப்படுவதாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தெரிவித்தார்.

இவர்களில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், விசேட தேவையுடையோர், விதவைகள் என 4,771 குடும்பத்தினர் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பத்தினர் பட்டியலில் உள்ளனர். அதி கூடிய குடும்பங்கள் வசிக்கும் கிராம சேவையாளர் பிரிவுகளாக தோணிக்கல் கிராம சேவையாளர் பிரிவு 2478 , மகாறம்பைக்குளம் கிராம சேவையாளர் பிரிவு 2347 , ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவு 2125, பண்டாரிக்குளம் கிராம சேவையாளர் பிரிவு 1693 , ஈச்சங்குளம் கிராம சேவையாளர் பிரிவு 1460, பட்டானிச்புளியங்குளம் கிராம சேவையாளர் பிரிவு 1458 , காத்தார் சின்னகுளம் கிராம சேவையாளர் பிரிவு 1422 , நெளுக்குளம் கிராம சேவையாளர் பிரிவு 1427 என்ற அடிப்படையில் பதிவில் காணப்படுகின்றனர்.

அதி கூடிய பெண் தலைத்துவ குடும்பம், விசேட தேவையுடையோர், விதவைகள் பட்டியலில் அதிகூடியளவில் காணப்படும் கிராம சேவையாளர் பிரிவுகளாக தோணிக்கல் கிராம சேவையாளர் பிரிவு 430, மகாறம்பைக்குளம் கிராம சேவையாளர் பிரிவு 386 , நெளுக்குளம் கிராம சேவையாளர் பிரிவு 325 , பண்டாரிக்குளம் கிராம சேவையாளர் பிரிவு 301 , கூமாங்குளம் கிராம சேவையாளர் பிரிவு 205 , ஆசிக்குளம் கிராம சேவையாளர் பிரிவு 199 என்ற அடிப்படையில் செல்கின்றது. குறித்த கணக்கெடுப்புக்கள் 2019.12.31ம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் இதுவரையிலான புதிய கணக்கெடுப்புக்கள் பதிவில் இல்லை என்றார்.

# இயற்கையை பாதுகாப்பதன் ஊடாக சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கலாம்

## வட மாகாண ஆளுநர் சாள்ஸ்



*கிளிநொச்சி குறூப் நிருபர்*

நாட்டின் இயற்கையை பாதுகாப்பதன் மூலம் ஒரு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க முடியும் எனும் எண்ணக்கருவை சிறுவர்கள் மத்தியில் விதைக்க வேண்டும் என்பதற்காகத்தான் குழந்தைகளுக்கான பழ மரத்தோட்ட நிகழ்ச்சி திட்டம் கமத்தொழில் இராஜாங்க அமைச்சரால் நடத்தப்படுகின்றது என வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

நேற்று கிளி/வட்டக்கச்சி ஆரம்ப பாடசாலையில் நடைபெற்ற குழந்தைகளுக்கான பழ மரத்தோட்ட நிகழ்ச்சி திட்டம் மற்றும் தரம் 1 இற்கான கால்கோள் விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் உரையாற்றுகையில்,

இராஜாங்க அமைச்சரின் இத் திட்டத்துக்கு எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறேன்.கொவிட் 19 இனால் உலகத்தில் பாரிய அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அதனால் ஏற்பட்ட ஒரு சிறு நன்மையாக சூழல் மாசடையும் வீதம் குறைவடைந்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மரக்கன்றுகளை நாட்டி சூழல் மாசடைவதை மேலும் குறைக்க வேண்டும். மரக்கன்றுகளின் எண்ணிக்கைக்கு சம அளவில் மரங்களை நட வேண்டும். அத்துடன் இச் சிறுவர்களை இயற்கையை பேணுபவர்களாக அதன் முக்கியத்துவத்தை உணர்த்துபவர்களாக உருவாக்க வேண்டும் என்றார்.

# இரணைதீவு கடலுணவுகளின் கேந்திர நிலையமாக மாற்றப்படும்

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்



*பரந்தன் குறூப் நிருபர்*

இரணைதீவு கடலுணவு உற்பத்திக்கான கேந்திர மையமாக உருவாக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

இரணைதீவில் நேற்று முன்தினம் கடலட்டை ஏற்றுமதிக் கிராமத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

இரணைதீவு மக்களின் வாழ்க்கை செழிப்படைய வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு. கடலட்டை பண்ணையின் இரண்டாம் கட்டத்திற்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்கு பொருத்தமான பிரதேசங்களை அடையாளப்படுத்தி வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கொடுவா மீன் உற்பத்திப் பண்ணைகளையும் உருவாக்கி, எண்ணெய் வளத்தின் கேந்திர நிலையமாக மத்திய கிழக்கு நாடுகள் விளங்குவது போன்று, இலங்கையின் கடலுணவுகளுக்கான கேந்திர நிலையமாக இரணைதீவு பிரதேசம் மாற்றப்படும் என்றார்.

# நெல் காயும் தளம் போதாமையால் வீதிகளில் காய வைக்கப்படும் நெல்



*புதுக்குடியிருப்பு விசேட நிருபர்*

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற் செய்கையினை மேற்கொண்ட விவசாயிகள் போதியளவு நெல்காய்தளம் இல்லாததால் அறுவடை செய்த நெல்லினை வீதிகளில் காய வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

கடந்த ஆண்டு 45ஆயிரம் வரையான ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் இயற்கையின் அனர்த்தம், கடும் மழை, வெள்ளப் பெருக்கு,நோய் தாக்கத்தினால் நெல்லின் விளைச்சல் போதியளவு கிடைக்காத நிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் அறுடை செய்த நெல்லினை பச்சை நெல்லாக குறைந்த விலையில் தனியார் கொள்வனவு செய்வதாலும் நெல்லினை காயவைத்து அதனை சரியான விலைக்கு கொடுக்கவேண்டிய கட்டாயத்திற்குள் தாம் தள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

# அறுவடைக்கு வந்தவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு


*பரந்தன் குறூாப் நிருபர்*

கிளிநொச்சி புளியம்பொக்கனை நாகேந்திரபுரம் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நாகேந்திரம் பகுதியில் நெல் அறுவடைக்கு வந்த 37 வயதான சிங்காரவேல் மனோகரவேல் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந் நபர் நெல் அறுவடைக்காக இப் பகுதியில் வந்து இருந்ததாகவும் அதை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு குளிக்கச் சென்ற இவரை காணவில்லை என தேடிய போதே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் கொண்டு சென்ற சாரம் மற்றும் சவற்காரம் கிணற்றருகில் இருந்ததை அவதானித்த அவர்கள் உடனடியாகவே பொலிசார் மற்றும் அயலவர்களுக்கு தகவல்களை வழங்கி மீட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சர்வதேச செய்திகள்

## மிகப் பழைமையான மதுபான தொழிற்சாலை கண்டுபிடிப்பு



எகிப்தில் 5000 ஆண்டுகளுக்கு முந்தைய மதுபான தொழிற்சாலை ஒன்றை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.


எகிப்தின் தென் பகுதியில் உள்ள நோர்த் அபிடோஸ் பகுதியில் அகழ்வாராய்ச்சி நடத்தும் போது தொல்பொருள் ஆய்வாளர்கள் புதைந்து கிடந்த இந்தத் தளத்தை கண்டுபிடித்தனர். அங்கு சுமார் 40 பானைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த மதுபான தொழிற்சாலையில் 2 வரிசைகளில் 40 மண்பாண்டங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது எனவும், இந்த இடமானது கல்லறை ஒன்றிற்கு அருகில் இருப்பதாகவும் எகிப்து சுற்றுலாத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

கல்லறையில் அரச சடங்குகள் நடைபெறும் போது அங்குள்ளவர்களுக்கு மதுபானம் இங்கிருந்து விநியோகிக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிடைத்த பொருட்கள் மன்னர் நர்மர் ஆண்ட காலத்தைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

மன்னர் நர்மர் 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர், அவர் எகிப்து சாம்ராஜ்யம் உருவாக முக்கிய காரணமானவரும் கூட. ஒரே நேரத்தில் சுமார் 22,400 லிற்றர் மதுவை உற்பத்தி செய்யும் வசதி அந்தக் கூடத்தில் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறினர்.

## சிரிய தலைநகரில் இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல்



சிரியாவின் வான் பாதுகாப்பு முறை மூலம் தலைநகர் டமஸ்கஸில் இஸ்ரேலின் தாக்குதலை முறியடித்ததாக சிரிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

சிரியாவில் ஈரானின் இலக்குகள் மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலின் தொடர்ச்சியாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் வெளிநாட்டுச் செய்திகளுக்கு பதலளிக்க முடியாது என்று இஸ்ரேல் இராணுவம் இது பற்றி குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்கிய இடங்கள் குறித்த விபரத்தை சிரிய அரச ஊடகம் வெளியிடவில்லை. இஸ்ரேலிய இராணுவ விமானங்கள் கோலன் குன்றுக்கு மேலால் பறந்து தலைநகர முனையில் தாக்குதல் நடத்தியது என்று சிரிய இராணுவத்தின் அறிவிப்பு ஒன்றில் கூறப்பட்டுள்ளது. "தலைநகர வானுக்கு மேலால் இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதல்களை எமது வான் பாதுகாப்பு முறை தொடர்ந்து முறியடிக்கும்" என்று சிரிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் ஈரானிய ஆதரவு போராளிகள் ஆதிக்கம் செலுத்தும் தலைநகரின் தெற்கில் உள்ள பிரதான இராணுவ தளம் ஒன்றின் மீதே தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக சிரிய இராணுவத்தில் இருந்து வெளியேறிய தரப்பு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

## செவ்வாயின் படத்தை வெளியிட்டது 'ஹோப்'



ஐக்கிய அரபு இராச்சியத்தின் 'ஹோப்' என்னும் ஆய்வுக்கலம், செவ்வாய் கிரகத்தின் முதல் படத்தை அனுப்பியுள்ளதாக அந்நாட்டின் தேசிய விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த ஆய்வுக்கலம் செவ்வாய் கிரகத்தின் மண்டலத்தினுள் வெற்றிகரமாக நுழைந்து சில நாட்களே ஆகியுள்ளன.

சூரிய மண்டலத்தின் மிகப் பெரிய எரிமலையான ஒலிம்பஸ் மொன்ஸ், அதிகாலை சூரிய ஒளியில் படம் எடுக்கப்பட்டதாக நிறுவனம் கூறியது.

கடந்த புதன்கிழமை (பெப்ரவரி 10), செவ்வாய் கிரகத்தில் இருந்து 24,700 கிலோமீற்றர் தூரத்தில் அந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் படத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரதமர் ஷேக் முகமது பின் ரஷீட் அல் மக்தூம் தமது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அந்த ஆய்வுக்கலம் சுமார் 687 நாட்களுக்கு செவ்வாய் கிரகத்தின் மண்டலத்தில் இருக்கும்.

சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் செவ்வாய் கிரகத்திற்கு விண்கலனை அனுப்பியுள்ளன. ஆனால் ஹோப் விண்கலமே அதை முதலில் சென்றடைந்துள்ளது.

## மியன்மாரில் தொடரும் ஆர்ப்பாட்டங்களுக்கு இடையே வீதிகளில் இராணுவத்தினர் குவிப்பு




மியன்மாரின் பல நகர வீதிகளில் இராணுவ வாகனங்கள் அதிகரிக்கப்பட்டு மேலும் துருப்புகள் குவிக்கப்பட்ட நிலையிலும் இராணுவ சதிப்புரட்சிக்கு எதிராக நேற்று திங்கட்கிழமையும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

கடந்த பெப்ரவரி 1ஆம் திகதி இராணுவம் மேற்கொண்ட ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்ப்போரை ஒடுக்குவதற்கான சாத்தியங்கள் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தக் கோரி கடந்த 10 நாட்களாக மியன்மாரில் நூற்றுக் கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஜனநாயக முறையில் தேர்வான தலைவர்களை விடுதலை செய்யும்படியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி வருகின்றனர்.

எனினும் ஆளும் கட்சித் தலைவி ஆங் சான் சூச்சி மேலும் இரண்டு நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கிப்பட்டிருப்பதாக அவரது வழக்கறிஞர் நேற்று தெரிவித்துள்ளார்.

இராணுவம் ஆட்சிக்கவிழ்ப்பில் ஈடுபட்ட தினத்தன்று அதிகாலையிலேயே சூச்சி மற்றும் அரச தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். சூச்சியின் ஆளும் கட்சி கடந்த நவம்பர் மாதம் நடந்த தேர்தலில் அமோக வெற்றியீட்டியது. எனினும் அந்த தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக இராணுவம் ஆதாரம் இன்றி குற்றம்சாட்டியது.

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 1 மணி தொடக்கம் காலை 9 மணி வரை இணைதள சேவை துண்டிக்கப்பட்ட நிலையில் அது மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

மியன்மாரில் இந்த இணையத் தடைக்குப் பின்னர், வழக்கமாக இணைய சேவையைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையில் வெறும் 14 வீதம் தான் இருப்பதாக, நெட்பிளாக் என்கிற கண்காணிப்புக் குழு ஒன்று கூறுகிறது.

"இரவு நேரங்களில் சோதனை செய்வது, மக்களின் உரிமைகளைப் பறிப்பது, மீண்டும் இணையத்தை முடக்கியது போன்றவைகள் அடக்குமுறையின் அறிகுறிகளே. இது மியன்மார் மக்கள் மீது இராணுவம் போர் தொடுப்பது போன்றுள்ளது. இராணுவ ஜெனரல்கள் இதற்கு பொறுப்பாக்கப்படுவார்கள்" என ஐ.நா சபைக்கு மியன்மார் விவகாரம் தொடர்பாக அறிக்கைகளை சமர்ப்பிக்கும் டொம் ஆண்ட்ரூவ்ஸ் தன் ட்விட்டரில் கூறியுள்ளார்.

"மியன்மாரில் இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதற்கு எதிராகப் போராடுபவர்களுக்கு எதிராக, அந்த நாட்டு இராணுவம் வன்முறையில் இறங்கக் கூடாது" என ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் கையெழுத்திட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளன.

இதேவேளை இராணுவ சதிப்புரட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் படையினருக்கு இடையூறு செய்தால் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனைக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் என்று இராணுவம் எச்சரித்துள்ளது. இராணுவத் தலைவர்கள் மீது "வெறுப்பு அல்லது அவதிப்பில்" ஈடுபட்டால் நீண்ட சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்று இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

## கொங்கோ கிராமத்தில் தாக்குதல்: 16 பேர் பலி



கொங்கோவின் வடகிழக்கு மாகாணமான இட்டுரியில் கிராமம் ஒன்றின் மீது இஸ்லாமியவாதிகள் என சந்தேகிக்கப்படும் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் மற்றும் 13 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதோடு கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று தீமூட்டப்பட்டுள்ளது.

புனியா நகருக்கு தெற்காக சுமார் 100 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இந்த கிராமத்திற்குள் நுழைந்த தாக்குதல்தாரிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி இருப்பதாக கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பது உறுதியாகாதபோதும் 1990கள் தொடக்கம் கிழக்குக் கொங்கொவில் செயற்பட்டு வரும் உகண்டா ஆயுதக் குழுவான கூட்டணி ஜனநாயகப் படை மீது சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் இந்தக் குழு சுமார் 850 பேரை கொன்றிருப்பதாக ஐ.நா தரவுகள் குறிப்பிட்டுள்ளன.

உகண்டா, ருவாண்டா மற்றும் புருண்டி நாடுகளுடனான கொங்கோவின்கிழக்குஎல்லைப்பகுதியில் 100க்கும் அதிகமான போராட்டக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

## பிரிட்டனில் கால்பங்கினருக்கு தடுப்பு மருந்து போடப்பட்டது



பிரிட்டனில் கால் பங்கினருக்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான முதல் தடுப்பூசி போடப்பட்டுவிட்டதாக அந்நாட்டு பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, பிரிட்டனில் உள்ள 67 மில்லியன் பேரில் சுமார் 15 மில்லியன் பேருக்கு முதல் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

எளிதில் பாதிக்கப்படும் அபாயமுள்ள 75 வயதுக்கு மேற்பட்டவர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள், மூத்தோர் இல்லங்களில் வசிப்போர், வேலை செய்வோர் ஆகியோருக்குத் தடுப்பூசி போடுவதில் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

பிரிட்டனில் நோய்த்தொற்றால் உயிரிழந்தவர்களில் 90 வீதத்தினர் முன்னுரிமை அளிக்கப்பட்ட அந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்று சுகாதார அதிகாரிகள் கூறினர்.

ஐரோப்பாவிலேயே வைரஸ் தொற்றால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக பிரிட்டன் உள்ளது. அங்கு நாலு மில்லியனுக்கும் அதிகமானோர் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 117 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

## ஸ்பெயினின் கட்டலோனியாவில் பிரிவினைவாதிகள் பெரு வெற்றி



ஸ்பெயினில் பகுதி சுயாட்சி கொண்ட கட்டலோனிய பிராந்தியத்தில் நடைபெற்ற உள்ளூர் சட்டமன்றத் தேர்தலில் பிரிவினைவாதக் கட்சிகள் தமது பெரும்பான்மையை அதிகரித்துக் கொண்டுள்ளன.


90 வீதமான வாக்குகள் எண்ணப்பட்டிருக்கும் நிலையில் 135 ஆசனங்கள் கொண்ட சட்டமன்றத்தில் 74 இடங்களை மூன்று பிரிவினைவாதக் கட்சிகள் கைப்பற்றியுள்ளன. முந்தைய சட்டமன்றத்தில் இந்தக் கட்சிகள் 70 ஆசனங்களையே பெற்றிருந்தன.

பிரதான விவகாரங்கள் குறித்து இந்த கட்சிகளிடையே பிளவு இருந்தபோதும் அவர்கள் ஆட்சியை கைப்பற்ற இது வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

பார்சிலோனா நகரைக் கொண்ட கட்டலோனியா பிராந்தியம், 7.5 மில்லியன் மக்கள் வாழும் ஸ்பெயினின் செல்வாக்கு மிக்க பிராந்தியமாகும்.

இந்தப் பிராந்தியம் ஸ்பெயினில் இருந்து சுதந்திரம் பெறும் முயற்சியில் ஈடுபட்டது கடந்த 2017 இல் பெரும் அரசியல் பதற்றத்தை ஏற்படுத்தியது. அந்த முயற்சி தோல்வி அடைந்த நிலையில் மத்திய அரசினால் பிராந்தியத்தில் சுயாட்சி அந்தஸ்து சுமார் ஏழு மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

## இந்தோனேசிய நிலச்சரிவில் நால்வர் பலி: 14 பேர் மாயம்



இந்தோனேசியாவில் கடும் மழையை அடுத்து ஏற்பட்ட நிலச்சரிவில் பல வீடுகளும் புதையுண்ட நிலையில் நால்வர் உயிரிழந்திருப்பதோடு மேலும் 14 பேர் காணாமல் போயுள்ளனர்.

கிழக்கு ஜாவாவின் தொலைதூரப் பகுதி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் ஆரம்பத்தில் இருபத்தி ஒருவர் காணாமல்போன நிலையில் மூவர் பின்னர் மீட்கப்பட்டனர்.

மண்ணில் புதையுண்ட நான்கு உடல்களை தாம் கண்டுபிடித்ததாகவும் தொடர்ந்து 14 பேர் காணாமல் போயிருப்பதாகவும் இந்தோனேசிய தேடுதல் மற்றும் மீட்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

"நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிக்கு தற்போது கனரக உபகரணங்களை கொண்டுவர முடியாது. என்றாலும், எமது பாணியில் இதனை மேற்கொள்ளதற்போதுநாம்முயன்றுவருகிறோம்" என்று கிழக்கு ஜாவா தேடுதல் மற்றும் மீட்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மீட்புப் பணியில் நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள், காவல் துறை அதிகாரிகள், மீட்புப்பணி ஊழியர்கள், தொண்டூழியர்கள் போன்றவர்கள் பங்காற்றி வருகின்றனர். அவர்கள் தங்கள் கைகள், விவசாயத்தில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி மண்ணைத் தோண்டி வருவதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.



## கினியாவில் எபோலா நெருக்கடி

கினியா நாட்டின் தென் பகுதியில் எபோலா தொற்றினால் மூவர் உயிரிழந்து மேலும் நால்வர் சுகவீனமுற்றிருப்பதால் அந்நாட்டில் இந்த நோய்த் தொற்று நெருக்கடி பற்றிய பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டின் லைபீரிய எல்லைக்கு அருகில் இறுதிச் சடங்கு ஒன்றில் கலந்து கொண்ட ஏழு பேரிடம் வயிற்றுப்போக்கு, வாந்தி மற்றும் இரத்தப்போக்கு போன்ற நோய் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளது. நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் சிகிச்சை நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

"முகம்கொடுத்திருக்கும் தற்போதைய நிலையை கருத்தில் கொண்டும் சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைக்கு அமையவும் கினிய அரசு எபோலா தொற்று பற்றிய பிரகடனத்தை வெளியிடுகிறது" என்று அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு பின்னரே கினியாவில் மீண்டும் எபோலா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முன்னதாக 2013 தொடக்கம் 2016 வரை இந்தத் தொற்றினால் கினியா, லைபீரியா மற்றும் சியாரலியோன் முதற்கொண்டு பிராந்தியத்தில் 11,300 பேர் வரை உயிரிழந்தனர்.

## ஹரி – மேகனுக்கு 2ஆவது குழந்தை



பிரிட்டன் இளவரசர் ஹரி மற்றும் மேகன் தம்பதிக்கு 2ஆவது குழந்தை பிறக்கவுள்ளது. அமெரிக்காவில் வசித்து வரும் பிரிட்டன் இளவரசர் ஹரி–மேகன் தம்பதிக்கு கடந்த 2019இல் முதலில் ஆண் குழந்தை பிறந்தது. இந்த நிலையில், காதலர் தினத்தை ஒட்டி ஹரி மடியில் மேகன் படுத்திருக்கும் புகைப்படத்தை அவர்கள் வெளியிட்டிருந்தனர்.

அந்தப் புகைப்படம் மூலம் மேகன் 2ஆவதாக கருவுற்றிருப்பது உறுதியாகியுள்ளது. இந்த செய்தியை அறிந்து இங்கிலாந்து ராணி உட்பட அரச குடும்பம் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது. 'ஹரி தம்பதிக்கு வாழ்த்துகள்' என்று லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனை செய்தி தொடர்பாளர் தெரிவித்தார். ஹரி கடந்த வருடம் மார்ச் மாதம் அரச வாழ்க்கையை விட்டு விலகுவதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து தனது மனைவியுடன் இங்கிலாந்து அரண்மனையை விட்டு வெளியேறினார். தற்போது அவர் தனது மனைவி மேகன் மெர்கலுடன் கலிபோர்னியாவில் வசித்து வருகிறார்.

# வன ஜீவராசிகள் உத்தியோகத்தர்கள் தாக்குதல்; விசாரணைகள் முன்னெடுப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

வன பரிபாலன வன ஜீவராசிகள் உத்தியோகத்தர்களை இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம் எலயாப்பத்துவ குடா மானிங்கம பிரதேசத்தில் கடந்த 14 வன பரிபாலன வன ஜீவி உத்தியோகத்தர்களுக்கு பிரதேச வாசிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பந்தமாகவே இவ் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மானிங்கம பிரதேசத்தில் காட்டு யானை தாக்குதலில் நபர் ஒருவர் உயிரிழந்ததை தொடர்ந்து குறிப்பிட்ட காட்டு யானைகளை விரட்டும் நோக்கில் பிரதேச வாசிகளால் உரிய உத்தியோகத்தர்களுக்கு தகவல் வழங்கியும் அவர்கள் தாமதமாகி வந்ததாலேயே ஆத்திரம் கொண்ட பிரதேச மக்கள் தாக்குதலை மேற்கொண்டதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இவர்களில் பெண் அதிகாரி ஒருவர், உதவியாளர் இருவர், வாகன சாரதி ஆகியோரே தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட நபர்களாவர். வேறு பிரதேசமொன்றில் காட்டு யானைகளை விரட்டும் பணிக்கு சென்றதாலேயே இவர்கள் தாமதமாகி வந்தமைக்கு காரணம் என தெரிய வந்துள்ளது. தாக்குதலுக்கு உள்ளான நபர்கள் தற்போது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ் விடயம் சம்பந்தமாக மேலதிக விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.



2021ஆம் ஆண்டு தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை சேர்க்கும் நிகழ்வு கெகிராவ கல்வி வலயத்தின் அல் அமீன் முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபர் எஸ்.எம்.கவுஸ் தலைமையில் நேற்று (15) இடம்பெற்றது. இதன்போது அதிபர், ஆசிரியர்களினால் புதிய மாணவர்களுக்கு சின்னம் அணிவித்து வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

(படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)




இலங்கை பொதுஜன பொறியியலாளர்கள் முன்னணியின் 14 வது மாநாடு அண்மையில் அநுராதபுரம் மென்கோ மென்கோ ஹோட்டலில் இடம்பெற்ற போது இலங்கை பொது ஜன பொறியியலாளர் முன்னணி அநுராதபுர மாவட்ட தலைவரும், தேசிய அமைப்பாளருமான பொறியியலாளர் ரணில் பிரியதர்சன, செயலாளர் பொறியியலாளர் சமித் மதுபாசன உட்பட அதிகமான பொறியியலாளர்கள் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பித்ததோடு நிகழ்வை விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

(படம்: திறப்பனை தினகரன்,அ.புரம் மேற்கு தினகரன் நிருபர்கள்)

### மல்வத்து ஓயா நீர்ப்பாசன திட்டத்தால்

# வடக்கு வரை நீர்ப்பாசன வசதியை வழங்க முடியும்

**திறப்பனை தினகரன் நிருபர்**

மல்வத்து ஓயா நீர்ப்பாசன திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் வடக்கு வரையில் நீர்ப்பாசன வசதியை வழங்க முடியும் என காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

மல்வத்து ஓயா நீர்ப்பாசன திட்டத்தின் ஊடாக தந்திரிமலை,விலச்சிய உட்பட்ட வலயங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.இதன் கீழ் குறிப்பிட்ட வலயத்திலுள்ள பொது மக்கள் எதிர்நோக்கிய நீர்ப்பாசன பிரச்சினைகளிலிருந்து நீங்கிக் கொள்ள முடியும் எனவும்,பலர் இதன் மூலம் தொழில் வாய்ப்பை பெறும் வாய்ப்பையும் பெற்றுக் கொள்வர் என தெரிவிக்கப்படுகின்றது.

உரிய மல்வத்து ஓயா நீர்ப்பாசன திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இது வரையில் ஜனாதிபதியின் ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அடுத்து வரும் ஓரிரு வாரங்களுக்குள் இவ்வேளை திட்டத்தை ஆரம்பிப்பதற்கு உரிய வேலை திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக காணி அமைச்சர் இது சம்பந்தமாக தெரிவித்தார்.



சுபீட்சத்தின் கடன் திட்டத்தின் கீழ் 2020/2021 வருடத்திற்கான பெரும்போக நெல்லினை கொள்வனவு செய்யும் முகமாக வடமத்திய மாகாண கூட்டுறவு சங்கங்களுக்கு அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் பந்துல குணவர்தன காசோலை வழங்கி வைத்தார். இதன் போது அமைச்சர்கள் உட்பட கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# அநுராதபுரம் கல்கிரியாகம சிவில் பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரியில் 35 பேருக்கு கொரோனா தொற்று

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் கல்கிரியாகம சிவில் பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்களில் 35 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட தொற்று நோய் பிரிவு அலுவலகத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற 73 வது சுதந்திர தின நிகழ்வுக்கு சென்று வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த 140 பேர்களில் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனையின் போதே 35 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதியாகியுள்ளது.இவர்கள் தற்சமயம் பூனானி கொரோனா தொற்று நோய் சிகிச்சை மத்திய நிலையம் மற்றும் மாத்தளை லக்கல சிகிச்சை மத்திய நிலையம் கண்டி தெல்தெனிய சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளனர். கல்கிரியாகம சிவில் பாதுகாப்பு பயிற்சி கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை பலாகல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கண்காணித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக கிளை அலுவலகம் திறப்பு



**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு தனியார் முகவர் நிலையத்தின் வடக்கு மாகாண கிளை நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையத்தினை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன கலந்துகொண்டு திறந்து வைத்துள்ளார். திறப்பு விழாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சின் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்த, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதி உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.

# கழிவு தேயிலை தூளுடன் கொட்டகலையில் இருவர் கைது

**அட்டன் சுழற்சி நிருபர்**

கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் சுமார் 2500 கிலோ கிராம் கழிவு தேயிலை தூளுடன் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று மதியம் 12 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கழிவுத் தேயிலை தூளானது அனுமதிப் பத்திரம் இன்றி கொட்டகலை பகுதியிலிருந்து கம்பளை பகுதிக்கு கொண்டு செல்லும் போது விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன்பின் கைப்பற்றப்பட்ட கழிவுத் தேயிலை தூளுடன் சந்தேக நபர்களையும், போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும், திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரையும் அட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

14.02.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 588,709
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 24,146,440.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 24
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

BE BETTER INFORMED!
Dinamina
Daily News
Thinakaran
News you can trust now free on your mobile phone.
VISIT
apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2693 சீட்டிழுப்பு திகதி 14/02/2021
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 12 54 55 65

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 05 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 153 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 340 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 8281 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 5312 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 134197 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 24420 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 172,708
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 5,358,920.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,403,692.40
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் 4398 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 14-02-2021
வெற்றி எழுத்து P வெற்றி இலக்கங்கள் 7 3 8 7 9 6
பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 7 3 8 7 9 6 | ரூபா 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 3 8 7 9 6 | ரூபா 100,000/- | 09 |
| 3ஆம் பரிசு | 8 7 9 6 | ரூபா 10,000/- | 110 |
| 4ஆம் பரிசு | 7 9 6 | ரூபா 1,000/- | 1094 |
| 5ஆம் பரிசு | 9 6 | ரூபா 100/- | 10795 |
| 6ஆம் பரிசு | 6 | ரூபா 20/- | 106974 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 7 3 8 7 9 | ரூபா 10,000/- | 11 |
| 8ஆம் பரிசு | 7 3 8 7 | ரூபா 1,000/- | 107 |
| 9ஆம் பரிசு | 7 3 8 | ரூபா 100/- | 1102 |
| 10ஆம் பரிசு | 7 3 | ரூபா 50/- | 10674 |
| 11ஆம் பரிசு | P | ரூபா 20/- | 42897 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை - ரூ. 10,031,820.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,229,705.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை www.nlb.lk

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 14/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் - 435
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 27 32 35 46

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 06 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 65 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 190 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4543 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2960 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 74872 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 14260 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,399,540.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 96,896
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 82,073,272.00
NATIONAL LOTTERIES BOARD

Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 765 உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 14.02.2021
ஆங்கில எழுத்து E சுப்பர் இலக்கம் 20 வெற்றி இலக்கங்கள் 18 31 69 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 81 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 169 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4038 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2655 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 65600 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12173 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 116,138,216.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 32,869,777.60
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,430,960.00
தேசிய லொத்தர் சபை

கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

NAQDA

## இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

### ஆலோசனைகளுக்கான அழைப்பு (REP)

முருத்தவெல நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையம், தம்புள்ள மீன் மரபணு அலகு, கலாவெவ தேசிய நன்னீர் கடற்றொழில் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு பயிற்சி நிறுவனம், குசலபங்கதெனிய வேக்கெயா வளர்ப்பு கட்டிடத்தொகுதி, பங்கதெனிய கடல்வாழ் அலங்கார மீன் இன வளர்ப்பு நிலையம், செவனபிட்டிய அலங்கார மீன் இன வளர்ப்பு மற்றும் உருவாக்குதல் நிலையத்தின் மிகுதி வேலைகளின் மேற்பார்வை ஆலோசனை சேவைகள்.

**ஒப்பந்த இல : NAQDA/CONSL/FB/SP/of/02**

**(QCBS முறை)**

முருத்தவெல நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையம், தம்புள்ள மீன் மரபணு அலகு, கலாவெவ தேசிய நன்னீர் கடற்றொழில் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு பயிற்சி நிறுவனம் குசலபங்கதெனிய வேக்கெயா வளர்ப்பு கட்டிடத் தொகுதி பங்கதெனிய கடல்வாழ் அலங்கார மீன் இன வளர்ப்பு நிலையம் செவனபிட்டிய அலங்கார மீன் இன வளர்ப்பு மற்றும் உருவாக்குதல் நிலையத்தின் மேற்பார்வை ஆலோசனை சேவையை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வீட்டு நிர்மாண மற்றும் பொறியியல் நிறுவனங்களில் 2021 மார்ச் 17 வரை ஆலோசனைகளுக்கான வேண்டுதல்கள் ஏற்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து www.naqda.gov.lk இற்கு பிரவேசியுங்கள்

**தலைவர்,**
**திணைக்கள ஆலோசனை பெறுகைக்குழு (பிரதான)**
**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை.**
**இல-41/1, புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

**2021.02.11**

## பெறுகை அறிவித்தல்

**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் - ஊவா மாகாணம்**

**ஊவா மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு தேவையான கால்நடை மருந்து வகைகளை முழு ஆண்டிற்கும் திணைக்களத்திற்கு போக்குவரத்து செய்து வழங்குவதற்கு தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.**

திணைக்களத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில், இவ் வருடம் முழுவதும் மேற்படி பொருட்களை வழங்கிப் போக்குவரத்து செய்தல் சார்பாக உங்களது விலைமனுக்களை 2021.03.08 பி.ப.2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு, தலைவர், பெறுகைக்குழு, விலங்கு, உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், தயா குணசேக்கர மாவத்த, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு வழங்கலாம்.

கேள்விகளை சமர்ப்பிக்கும் போது உங்களது நிறுவனத்தில் பதிவு செய்துள்ள சான்றிதழின் பிரதியையும் VAT பதிவு சான்றிதழின் பிரதியையும் மற்றும் கேள்வி சமர்ப்பிக்கும் கால்நடை மருந்துகள் சம்பந்தமாக தரத்தை உறுதி செய்வதற்காக VDCA இல் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்தல் வேண்டும். மேலும் சகல கால்நடை மருந்திற்கும் காலாவதியாகும் காலம் கொள்வனவு செய்யும் தினத்திலிருந்து குறைந்தபட்சம் இரு வருடங்களாவது இருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கின்ற நிறுவனங்கள் அல்லது தனி நபர்களால் கீழ்க்காணும் முகவரிக்கு எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்து மற்றும் காசாக ரூ. 3,000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை மற்றும் ரூபா.10,000.00 மீளளிக்கப்படும் கேள்விப் பிணையொன்றை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு செலுத்திய பின்னர் 2021.02.16 முதல் 2021.03.08 வரையான நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப.9.30 இற்கும் பி.ப.3.00 இற்கும் இடையிலான காலத்தில் குறித்த கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்குத் தேவையான கால்நடை மருந்து வகைகள் சார்பாக விலைமனுக்களை சமர்ப்பித்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2021.03.08 பி.ப.2.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேற்படி வழங்குதல் சம்பந்தமாக வழங்குநர்களால் இத்திணைக்களத்துடன் ஒப்பந்தமொன்றிற்கு வரல் வேண்டும். அத்துடன் தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்களால் ஒப்பந்த பெறுமதியில் 10% வங்கிப் பிணைமுறியொன்று (On demand bank guarantee) குறித்த மாதிரியின் பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக ஏதாவது விசாரணைகள் மேற்கொள்வதற்கு தேவையெனில் கீழ்க்காணும் அதிகாரங்களை தொடர்பு கொள்ளலாம். பெயர்:- எம்.டீ.என். நெதுன்கொட, பதவி - அபிவிருத்தி அதிகாரி, தொலைபேசி இலக்கம் - 0552222698/0552228646 -பெக்ஸ் இல - 0552231243. மின்னஞ்சல் முகவரி - bids.daphura@gmail.com.

**மருத்துவர் - எஸ்.கே.வீரசுந்தர**
**மாகாண பணிப்பாளர் (ஊவா)**
**தலைவர் - பெறுகைக்குழு,**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்**

**தொ.பே - 055-2222698**

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

## மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2020 நவம்பர் 30ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2021 பெப்ரவரி 25ம் திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ மற்றும் மாலபே. | 2020 நவம்பர் 30ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல. 36, நீர்கொழும்பு வீதி, குருணாகலை |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல. 46/12, சயுறு செவன,
நவம் மாவத்தை, கொழும்பு-02.

பதிவு இலக்கம்: PB 917PQ

இலங்கை சோசலிசக் குடியரசு

சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்

## விலைமனுக் கோரல்

**இலங்கை சுற்றுலா துறையின் 2021 - 2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கான டிஜிட்டல் சந்தப்படுத்தல் நிறுவனத்தை தெரிவு செய்தல்**

**விமைமனு இலக்கம் : SLTPB/GCC/2021/003**

1. சுற்றுலாத்துறை அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல்கள் தொடர்பான சபையின் தலைவர் அங்கீகாரம் பெற்ற மற்றும் முன் அனுபவம் மிக்க முகவர் நிறுவனங்களிடமிருந்து, இலங்கை சுற்றுலா துறையின் 2021 - 2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கான டிஜிட்டல் சந்தப்படுத்தல் நிறுவனத்தை தெரிவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. சுற்றுலாத் துறையின் தேசிய இலக்கை அடைய இலங்கையை சுற்றுலா தலமாக ஊக்குவிப்பதே உத்தேச ஒருங்கிணைந்த உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்.
3. ஐந்து ஆண்டுகளில் அதிகபட்ச மொத்த ஒப்பந்த மதிப்பு ரூபா.250 மில்லியனாக இருப்பதுடன், தேவையான நிதி இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தால் ஒதுக்கப்படும்.
4. தெரிவு செய்யப்படும் மனுதாரர் அரசாங்க கொள்முதல் நடைமுறை - 2006 இன் விதிகளின் அடிப்படையில் மனுதாரர்கள் தடுப்புப்பட்டியலில் பெயரிடப்பட்டவராக இருத்தல் கூடாது.
5. மனுதாரர்கள் பின்வரும் தகுதிகள் மற்றும் அனுபவங்களை கொண்டிருத்தல் வேண்டும்.
   i. நிறுவனம் இலங்கையில் ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாக முறையாக பதிவு செய்யப்பட்டு இலங்கையில் ஒரு செயல்பாட்டு அலுவலகத்தை கொண்டு செயற்பட வேண்டும்.
   ii. சமூக ஊடகத் துறை மற்றும் பிற ஆன்லைன் (Online) மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தது 5 வருட அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும்.
   iii. கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் ஒரு உள்ளூர் அல்லது சர்வதேச வாடிக்கையாளருக்கு சமூக ஊடகம் அல்லது வேறுபட்ட வழிகளில் அல்லது டிஜிட்டல் சந்தைப்படுத்தல் துறையில் ரூபா.50 மில்லியனுக்கும் அதிகமான மூன்று திட்டத்தையாவது மேற்கொண்டமைக்கான உறுதி வழங்கப்பட வேண்டும்.
   iv. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் வருவாய் குறைந்தபட்சம் ரூபா.50 மில்லியனாக இருக்க வேண்டும்.
6. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் முறைக்கமைய இடம் பெறுவதுடன், இரட்டை உறை (Two Envelope) மூலம் செய்யப்படுகிறது.
7. இதற்காக ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தில் முகாமைத்துவப் பணிப்பாளர் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள கூடியதுடன், gcc2021@srilanka.travel இற்கு கோரிக்கை ஒன்றை விடுப்பதன் மூலம் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.
8. 2021 மார்ச் 08 ஆம் திகதி மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணி வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் (சனி,ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர) அல்லது gcc2021@srilanka.travel இற்கு கோரிக்கை ஒன்றை விடுப்பதன் மூலம் மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

   நிதிப் பிரிவு
   (கீழ் தளம்)
   இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்,
   இல 80, காலி வீதி கொழும்பு 03
9. இதற்காக ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பத்தை வழங்குவதன் மூலம் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் (நிதி) க்கு ரூபா. 7,500/- (ஏழாயிரத்திஐந்நூறு) ஐ பணமாக செலுத்தி ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான விண்ணப்படிவத் தொகுப்பை பெற்றுக்கொள்ளலாம்.
10. மனுதொடர்பான கூட்டம் 24 பெப்ரவரி 2021 ஆம் திகதி பி.ப 03.30 மணிக்கு இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (ஹோட்டல் பாடசலை) இல. 80, காலி வீதி கொழும்பு 03 இல் இடம்பெறும். ஆர்வமுள்ள மனுதாரர்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
11. 2021 மார்ச் 12 பி.ப 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன் நிதிப் பிரிவு (கீழ்த்தளம்), இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி கொழும்பு 03 எனும் முகவரிக்கு மனுக்கள் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கவும். அல்லது அங்கு வைக்கப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியில் இடவேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த உடனேயே நிதிப் பிரிவு (கீழ்த்தளம்), இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி கொழும்பு 03 இல் மனுதார்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.
12. நேரம் தாழததி கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் தொடர்பான குழு**
**இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்**
**இல.80, காலி வீதி, கொழும்பு 03**

இலங்கை சோசலிசக் குடியரசு

சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்

## விலைமனுக் கோரல்

**இலங்கை சுற்றுலா துறையின் 2021 - 2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கு பிரச்சார மேம்பாடு மற்றும் முகாமைத்துவப்பிரிவொன்றை தெரிவு செய்தல்**

**விமைமனு இலக்கம் : SLTPB/GCC/2021/002**

1. சுற்றுலாத்துறை அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல்கள் தொடர்பான சபையின் தலைவர் அங்கீகாரம் பெற்ற மற்றும் முன் அனுபவம் மிக்க முகவர் நிறுவனங்களிடமிருந்து, 2021-2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கு பிரச்சார மேம்பாட்டை அதிகரித்து செயற்படுத்தவும் வியாபார முகாமைத்துவப் பிரிவொன்றாக செயற்படவும், பிரச்சார மேம்பாடு மற்றும் முகாமைத்துவப்பிரிவொன்றை தெரிவு செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. சுற்றுலாத் துறையின் தேசிய இலக்கை அடைய இலங்கையை சுற்றுலா தலமாக ஊக்குவிக்க உத்தேச ஒருங்கிணைந்த உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்.
3. ஐந்து ஆண்டுகளில் அதிகபட்ச மொத்த ஒப்பந்த மதிப்பு ரூபா.500 மில்லியனாக இருப்பதுடன், தேவையான நிதி இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தால் ஒதுக்கப்படும்.
4. தெரிவு செய்யப்படும் மனுதாரர் அரசாங்க கொள்முதல் நடைமுறை - 2006 இன் விதிகளின் அடிப்படையில் மனுதாரர்கள் தடுப்புப்பட்டியலில் பெயரிடப்பட்டவராக இருத்தல் கூடாது.
5. மனுதாரர்கள் பின்வரும் தகுதிகள் மற்றும் அனுபவங்களை கொண்டிருத்தல் வேண்டும்.
   i. நிறுவனம் இலங்கையில் ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாக முறையாக பதிவுசெய்யப்பட்டு இலங்கையில் ஒரு செயல்பாட்டு அலுவலகத்தை கொண்டு செயற்பட வேண்டும். அல்லது இலங்கையில் முறைப்படி பதிவு செய்யப்பட்டு செயற்பாடு காரியாலயம் ஒன்று இலங்கையில் உள்ள அல்லது விருப்பம் தெரிவிக்கும் கடிதத்தின் மூலம் அவ்வாறான வியாபாரம் ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ள கூட்டு வியாபாரம் (Jvs)
   ii. திட்ட முகாமைத்துவம், ஆய்வு, செயல்படுத்தல் மற்றும் செயல்திறன் மதிப்பீட்டில் நிபுணத்துவம், திட்ட முகாமைத்துவத்தில் குறைந்தது 10 வருட அனுபவம் , கூட்டு வியாபாரத்தில் பிரதான பங்குதாரராக திட்ட முகாமைத்துவம், ஆய்வு, செயல்படுத்தல் மற்றும் செயல்திறன் மதிப்பீட்டில் நிபுணத்துவம், திட்ட முகாமைத்துவம் முகாமைத்துவத்தில் குறைந்தது 10 வருட அனுபவத்தை கொண்டிருக்க வேண்டியதுடன், மற்றைய பங்குதாரர் (கள்) குறைந்தது 07 வருட முன் அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும்.
   iii. கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் ஒரு உள்ளூர் அல்லது சர்வதேச வாடிக்கையாளருக்கு ரூபா.100 மில்லியனுக்கும் அதிகமான (ஒரு திட்டத்திற்கு) சுற்றுலா தொடர்பான திட்டங்களில் மூலோபாய வளர்ச்சி, சந்தைப்படுத்தல் ஈடுபட்டிருத்தல். கூட்டு முயற்சிகள் ஆயின் குறிப்பிட்ட அனுபவம் உறுதி செய்யப்படவேண்டும்.
   iv. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் வருவாய் குறைந்தபட்சம் ரூபா.100 மில்லியனாக இருக்க வேண்டியதுடன், கூட்டு நிறுவனங்கள் ரூபா.100 மில்லியனும், மற்ற பங்குதாரர்களுக்கு ஆண்டு வருவாய் ரூபா.50 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும்.
6. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் முறைக்கமைய இடம் பெறுவதுடன், இரட்டை உறை வடிவத்தின் மூலம் செய்யப்படுகிறது.
7. இதற்காக ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தில் முகாமைத்துவப் பணிப்பாளர் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள கூடியதுடன், gcc2021@srilanka.travel இற்கு கோரிக்கை ஒன்றை விடுப்பதன் மூலம் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.
8. 2021 மார்ச் 15 ஆம் திகதி மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணி வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் (சனி,ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர) அல்லது gcc2021@srilanka.travel இற்கு கோரிக்கை ஒன்றை விடுப்பதன் மூலம் மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

   நிதிப் பிரிவு
   (கீழ் தளம்)
   இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்,
   இல 80, காலி வீதி கொழும்பு 03
9. இதற்காக ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பத்தை வழங்குவதன் மூலம் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் (நிதி) க்கு ரூபா. 7,500/- (ஏழாயிரத்திஐந்நூறு) ஐ பணமாக செலுத்தி ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான விண்ணப்படிவத் தொகுப்பை பெற்றுக்கொள்ளலாம்.
10. மனுதொடர்பான கூட்டம் 24 பெப்ரவரி 2021 ஆம் திகதி பி.ப 01.00 மணிக்கு இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (ஹோட்டல் பாடசலை) இல. 80, காலி வீதி, கொழும்பு - 03 இல் இடம்பெறும். ஆர்வமுள்ள மனுதாரர்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
11. 2021 மார்ச் 19 பி.ப 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன் நிதிப் பிரிவு (கீழ்த்தளம்), இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம், இல: 80, காலி வீதி, கொழும்பு - 03 எனும் முகவரிக்கு மனுக்கள் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கவும். அல்லது அங்கு வைக்கப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியில் இடவேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த உடனேயே நிதிப் பிரிவு (கீழ்த்தளம்), இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம், இல: 80, காலி வீதி, கொழும்பு - 03 இல் மனுதார்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.
12. நேரம் தாழ்த்தி கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் தொடர்பான குழு**
**இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்**
**இல. 80, காலி வீதி,**
**கொழும்பு 03**

# அடைய முடியாத இலக்குகளைப் பேசி தமிழர்களை ஏமாற்றுவது கவலைக்குரியது

**(மண்டூர் குறூப் நிருபர்)**

கூட்டமைப்பின் கடந்த கால முடிவுகளால் அடிபட்டு, இரத்தம் சிந்தி இயலாத நிலையிலே, மக்களுக்கு ஏதாவது செய்துகொடுக்கும் நோக்கில் அரசியல் கட்சியை ஆரம்பித்ததாக

பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மண்டூர் முருகன் ஆலயத்தை தரிசித்துவிட்டு, வாக்களித்த மண்டூர் மற்றும் கணேசபுரம் மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.நேற்று முன்தினம் (14) நடந்த இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில்,யாரோ எடுத்த முடிவுகளுக்காக, துப்பாக்கிகள் சுமந்து

தமிழ் சமூகம் அழிந்துபோய் கிடந்தது. இம் மக்களை மீட்டெடுத்து,ஜனநாயக ரீதியில் சகலதையும் சாதிக்கப் புறப்பட்டுள்ள அரசியல் கட்சிதான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி.கடந்த காலங்களில் இழக்கப்பட்ட எமது உயிர்கள்,சொத்துக்களால் எதையும் தமிழ் சமூகம் சாதிக்கவில்லை.இதைச் சாதிப்பதற்கான எமது ஜனநாயக வழியில் 2008 இல் காலடி வைத்தோம்.மாகாண சபையில் பொறுப்புடன் செயற்பட்டு மக்கள் மனங்களை வெல்ல முடிந்தது.

அந்தப் பின்னணியிலேதான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தீர்மானத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வந்தது.

2012, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் போட்டியிட்டது. எனினும் தமிழர் முதலமைச்சராக வர முடியும். வீதிகள், பாடசாலைகள்,ஆசிரியர் நியமனங்கள், மருத்துவர் நியமனங்கள், சுகாதார சேவைகள் போன்றவற்றைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையையும் நாமே ஏற்படுத்தினோம்.

கிழக்கு மண்ணின் பெருமையறிந்து தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை பலப்படுத்தி வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளது.

கிழக்குத் தமிழர்களை கட்டியெழுப்பும் தீர்மானத்திற்கு தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவற்றையெல்லாம்ஒ சிந்திக்காமல் பொத்துவில் இருந்து பொலிகண்டி வரை பேரணி நடத்துவதால், எவ்வித பிரயோசனமும் இல்லை.

அடைய முடியாத இலக்குகளைப் பேசிக் கொண்டிருப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை.தலைவர்களாக வருவதற்கும், தங்கள் உறுப்பினர்கள் வெல்வதற்குமான விடயங்களையே தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சொல்கின்றனர்.

ஒரு இலட்சம் கி.மீற்றர் வீதிகளை புனரமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கணிசமான வீதிகள் புனரமைகப் படவுள்ளன.

இம்மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் மண்டூர் பாலம் சகலராலும் அடையாளப் படுத்தப்பட்டதாக இருக்கிறது. இதைச் நிச்சயமாக செய்துகொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எனக்கு இருக்கிறது. காலம் வருகின்றபோது நிச்சயமாக மண்டூர் பாலத்தை செய்துகொடுப்போம்.பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகளைக் கட்டமைத்து எல்லைப்புற கிராம மக்களை வாழ வைக்க வேண்டிய பொறுப்பும் எமக்கு இருக்கிறது. எதிர்காலத்தில் மட்டக்களப்பில் இருந்து தமிழர் ஒருவர் கிழக்கின் முதலமைச்சராக வருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மட்டக்களப்பு மக்களின் பெரும்பன்மை தீர்மானமே திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைக் காப்பாற்றும் என்றார்.



## மக்கள் கோரிக்கை

**தோப்பூர் குறூப் நிருபர்**

பாலத்தோப்பூர் மற்றும் தோப்பூர் பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் ஆறு மாதம் கடந்தும் பயன்பாட்டிற்காக வழங்காமையால் பாதசாரிகள், வாகன சாரதிகள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் விசனம் தெரிவித்துள்ள பொது மக்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

உரிய அதிகாரிகள் இவ்வீதியினை பொதுமக்கள்சிரமமின்றி பயன்படுத்த ஆவன செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பிரதேச மக்களின் முக்கியமான பாதையாக இதுவுள்ளமையால் அதிகாரிகள் அவசரமாக இது குறித்து கவனமெடுத்து செயற்படுவர் என எதிர்பார்க்கின்றனர்.



பெரியபோரதீவு பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில், கலந்து கொண்ட, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன், புதிய ஜனநாயக மக்கள் முன்னணி எஸ். ரவி குமார் ஆகியோர் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

## காத்தான்குடி வீதிகளில் பொருத்தப்பட்ட மின்விளக்குகளை ஒளிரவிடும் நிகழ்வு

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

காத்தான்குடி ஊர் வீதியில் புதிதாக பொருத்தப்பட்ட மின் விளக்குகளை கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் (12) ஒளிர வைத்தார். ஹிஸ்புல்லாவின் சுமார் பத்துக் கோடி ரூபா செலவில் இந்த மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

முன்னாள் ஆளுநரும் முன்னாள் பெருந்தெருக்கள் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கலாநிதி எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் பத்துக்கோடி ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டில் மஞ்சந்தொடுவாய் ஆரையம்பதி உட்பட்ட காத்தான்குடி வீதிகளில்,இந்த நவீன மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை இவற்றைப் பொருத்தியுள்ளதாக காத்தான்குடி நகர சபை தெரிவித்துள்ளது.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்;.அஸ்பரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தினமும் மாலை 6மணிமுதல் காலை 6மணிவரை தானியங்கி முறையில் இந்த மின்விளக்குகள் ஒளிரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரசாந்தனுக்கு மேலும் 14 நாட்கள் விளக்கமறியல் நீடிப்பு

**(கல்லடி குறூப்நிருபர்)**

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனை மேலும் 14 நாட்களுக்கு தடுப்புக் காவலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி ரிஸ்வான் உத்தரவிட்டுள்ளார்.

கொரோணா அச்சம் காரணமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பூ.பிரசாந்தன் மீதான வழக்கு விசாரனை நேற்றைய தினம் இணையவழி மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்விசாரணையிலே, அவரை மேலும் 14 நாட்களுக்கு எதிர்வரும் 01.03.2021 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் குறித்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய பிரசாந்தன் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## தரம் ஒன்றுக்கு மாணவர்கள் சேர்க்கும் நிகழ்வில் மரக்கன்றுகள் விநியோகம்

**(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)**

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்க்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் தரம் இரண்டு மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்களால் மாலை அணிவிக்கப்பட்டு இனிப்புக்கள் வழங்கி வரவேற்கப்பட்டனர். வீடுகளில் நடுவதற்காக பழக்கன்றுகளை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர் பெற்றோர்களுக்கு வழங்கி வைத்ததுடன் பாடசாலையிலும் மரக்கன்றுகள் நடப்பட்டன. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகேயின் ஒருங்கிணைப்பில் கல்வியமைச்சின் அனுசரணையுடன் இது செயற்படுத்தப்படுகிறது.


**மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி விற்பனைச் சந்தை**

**கொட்டாவ**

| வாகன இல. | தயாரிப்பு | வகை |
|---|---|---|
| NW BFV - 82XX | DIO | BIKE |
| WP BBY-65XX | TWISTER | BIKE |
| WP BAJ-47XX | | BIKE |
| WP BCG-37XX | PLEASURE 150 | BIKE |
| SG BCM-55XX | PULSAR 150 | BIKE |
| SP BET-66XX | PULSAR 151 | BIKE |
| WP BBJ-91XX | PULSAR 135 LS | BIKE |
| WP BAU-05XX | FZ | BIKE |
| EP BCF-96XX | FZ | BIKE |
| EP BDS-46XX | PULSAR 150 | BIKE |
| SG BCU - 33XX | DIO | BIKE |
| WP BGD-10XX | RAY ZR | BIKE |
| WP BCE - 19XX | WEGO | BIKE |
| EP BCG-85XX | PULSAR 150 | BIKE |
| WP BGM-72XX | DIO | BIKE |
| WP BEE - 51XX | ACTIVA I | BIKE |
| WP BDX 95XX | METRO | BIKE |
| WP BCI-83XX | DIO | BIKE |
| WP BGV-71XX | FZ25 | BIKE |
| WP BES-30XX | FZ | BIKE |
| WP BIH-50XX | FZ VERTION03 | BIKE |
| WP BIH - 50XX | FZ VERTION03 | BIKE |
| WP BCK-83XX | SCOOTY PEP | BIKE |
| WP BIN-09XX | FZ 16 VER 2.0 | BIKE |
| CP BIN-39XX | FZ VER 0.3 | BIKE |
| WP BHW-03XX | DIO | BIKE |
| CP BCZ-38XX | DISCOVER 100 | BIKE |
| NW BII - 99XX | MT-15 | BIKE |
| NW BHV - 34XX | CT 100 | BIKE |
| WP BGR - 15XX | DIO | BIKE |
| WP BHC-24XX | RAY ZR | BIKE |
| WP BAM-98XX | PULSAR 135 LS | BIKE |
| CP AAH-41XX | RE | THREE WHEELER |
| NP BCQ-98XX | FZ16 | BIKE |
| SP BIB - 41XX | RAY-ZR | BIKE |
| SP BEO-83XX | XL SUPER | BIKE |
| SP BHC-45XX | XL SUPER | BIKE |
| SP BHD - 11XX | DIO | BIKE |
| WP BCA-52XX | PULSAR 135 LS | BIKE |
| SP BGZ-17XX | APACHE 150 | BIKE |
| SP BIL - 53XX | RAY-ZR | BIKE |
| SP BIM 71XX | RAY-ZR | BIKE |
| WP BED-77XX | PULSAR 150 UG 4.5 | BIKE |
| WP BEE - 63XX | WEGO | BIKE |
| SG BDB -36XX | PULSAR 150 | BIKE |
| UP BFU - 98XX | ROCKSTAR | BIKE |

இல. 17/1, ... கொட்டாவ ... 2021 பெப்ரவரி 17ம் & 18ம் திகதியில் (காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை) பார்வையிடலாம்.

**0719 919 986 / 0712 591 067**

ஏலத் திகதி : 19.02.2021

நேரம்: காலை 10.00 மணி



இலங்கை சோசலிசக் குடியரசு

SRI LANKA

**சுற்றுலாத்துறை அமைச்சு**

**இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்**

**விலைமனுக்கோரல்**

**இலங்கை சுற்றுலா துறையின் 2021-2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கு பிரச்சார மேம்பாடு மற்றும் முகாமைத்துவப்பிரிவொன்றை தெரிவு செய்தல்**

**விலைமனு இலக்கம் : SLTPB/GCC/2021/001**

01. சுற்றுலாத்துறை அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல்கள் தொடர்பான சபையின் தலைவர் அங்கீகாரம் பெற்ற மற்றும் முன் அனுபவம் மிக்க முகவர் நிறுவனங்களிடமிருந்து, 2021-2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கு பிரச்சார மேம்பாட்டை அதிகரித்து செயற்படுத்தவும் வியாபார முகாமைத்துவப்பிரிவொன்றாக செயற்படவும் பிரச்சார மேம்பாடு மற்றும் முகாமைத்துவப்பிரிவொன்றை தெரிவு செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. சுற்றுலாத் துறையின் தேசிய இலக்கை அடைய இலங்கையை சுற்றுலா தலமாக ஊக்குவிக்க உத்தேச ஒருங்கிணைந்த உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

03. ஐந்து ஆண்டுகளில் அதிகபட்ச மொத்த ஒப்பந்த மதிப்பு ரூபா.500 மில்லியனாக இருப்பதுடன், தேவையான நிதி இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தால் ஒதுக்கப்படும்.

04. தெரிவு செய்யப்படும் மனுதாரர் அரசாங்க கொள்முதல் நடைமுறை - 2006 இன் விதிகளின் அடிப்படையில் மனுதாரர்கள் தடுப்புப்பட்டியலில் பெயரிடப்பட்டவராக இருத்தல் கூடாது.

05. மனுதாரர்கள் பின்வரும் தகுதிகள் மற்றும் அனுபவங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

    i. நிறுவனம் இலங்கையில் ஒரு சட்டபூர்வ நிறுவனமாக முறையாக பதிவுசெய்யப்பட்டு இலங்கையில் ஒரு செயல்பாட்டு அலுவலகத்தை கொண்டு செயற்பட வேண்டும். அல்லது

    இலங்கையில் முறைப்படி பதிவு செய்யப்பட்டு செயற்பாடு காரியாலயம் ஒன்று இலங்கையில் உள்ள அல்லது விருப்பம் தெரிவிக்கும் கடிதத்தின் மூலம் அவ்வாறான வியாபாரம் ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ள கூட்டு வியாபாரம் (JVs)

    ii. திட்ட முகாமைத்துவம், ஆய்வு, செயல்படுத்தல் மற்றும் செயல்திறன் மதிப்பீட்டில் நிபுணத்துவம், திட்ட முகாமைத்துவத்தில் குறைந்தது 10 வருட அனுபவம், கூட்டு வியாபாரத்தில் பிரதான பங்குதாரராக திட்ட முகாமைத்துவம், ஆய்வு, செயல்படுத்தல் மற்றும் செயல்திறன் மதிப்பீட்டில் நிபுணத்துவம், திட்ட முகாமைத்துவம் முகாமைத்துவத்தில் குறைந்தது 10 வருட அனுபவத்தை கொண்டிருக்க வேண்டியதுடன், மற்றைய பங்குதாரர்(கள்) குறைந்தது 07 வருட முன் அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும்.

    iii. கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் ஒரு உள்ளூர் அல்லது சர்வதேச வாடிக்கையாளருக்கு ரூபா.100 மில்லியனுக்கும் அதிகமான (ஒரு திட்டத்திற்கு) சுற்றுலா தொடர்பான திட்டங்களில் மூலோபாய வளர்ச்சி, சந்தைப்படுத்தல் ஈடுபட்டிருத்தல், கூட்டு முயற்சிகள் ஆயின் குறிப்பிட்ட அனுபவம் உறுதி செய்யப்படவேண்டும்.

    iv. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் வருவாய் குறைந்தபட்சம் ரூபா.100 மில்லியனாக இருக்க வேண்டியதுடன், கூட்டு நிறுவனங்கள் ரூபா.100 மில்லியனும், மற்ற பங்குதாரர்களுக்கு ஆண்டு வருவாய் ரூபா.50 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும்.

06. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் முறைங்கமைய இடம் பெறுவதுடன், இரட்டை உறை (Two Envelope) மூலம் செய்யப்படுகிறது.

07. இதற்காக ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தில் முகாமைத்துவப் பணிப்பாளர் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள கூடியதுடன், **gcc2021@srilanka.travel** இற்கு கோரிக்கை ஒன்றை விடுப்பதன் மூலம் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

08. **2021 மார்ச் 16** ஆம் திகதி **மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 04.00** மணி வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் (சனி,ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர) அல்லது **gcc2021@srilanka.travel** இற்கு கோரிக்கை ஒன்றை விடுப்பதன் மூலம் மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

    நிதிப் பிரிவு
    (கீழ் தளம்)
    இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்,
    இல 80, காலி வீதி கொழும்பு 03

09. இதற்காக ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பத்தை வழங்குவதன் மூலம் மற்றும் இலங்கை சம்மேளன பணியகத்தின் பணிப்பாளர் (நிதி) க்கு ரூபா. 15,000/- (பதினைந்தாயிரம்) ஐ பணமாக செலுத்தி ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான விண்ணப்படிவத் தொகுப்பை பெற்றுக்கொள்ளலாம்.


10. மனுதொடர்பான கூட்டம் **24 பெப்ரவரி 2021** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (ஹோட்டல் பாடசாலை) இல.80, காலி வீதி கொழும்பு 03 இல் இடம்பெறும். ஆர்வமுள்ள மனுதாரர்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

11. **2021 மார்ச் 22 பி.ப 02.00** மணிக்கு அல்லது அதற்கு முன் நிதிப் பிரிவு (கீழ்த்தளம்), **இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி கொழும்பு 03** எனும் முகவரிக்கு மனுக்கள் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கவும். அல்லது அங்கு வைக்கப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியில் இடவேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த உடனேயே நிதிப் பிரிவு (கீழ்த்தளம்), **இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி கொழும்பு 03** இல் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.

12. நேரம் தாழ்த்தி கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் தொடர்பான குழு**
**இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகம்**
**இல.80, காலி வீதி**
**கொழும்பு 03**


# சிறு விளம்பரம்













## கார்கள்
### விற்பனைக்கு

SP HN-9559 Hyundai sonata, 2000, car கூடிய விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 071 4 5 4 2958


011047




## வேன்கள்
### விற்பனைக்கு

SPJJ-5491 Toyota LH109, van, 1997, கூடிய விலை க்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே . 0714542958

011046




## வெற்றிடங்கள்
### டிரைவர்கள்

முன்னனி போக்குவரத்து நிறுவனமொன்றிற்கு 10 wheel fully body சாரதிமார் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு வார நாட்களில் அழைத்து சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வாருங்கள். டச்மார்க் லொஜிஸ்டிக், இல. 20, அவிஸ்ஸாவளை வீதி, கடுவலை. தொலைபேசி 0777771074

012014

---

# தெஹிஓவிட்ட பிரதேச சபை

## தெஹிஓவிட்ட புதிய வர்த்தகத் தொகுதியின் கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான விலைமனுக் கோரல்

தெஹிஓவிட்ட நகரின் மத்தியில் அவிசாவளை ஹட்டன் வீதிக்கு முகப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய நான்குமாடி பலநோக்கு வர்த்தகத் தொகுதியின் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடைகளை முற்பணம் செலுத்தும் குத்தகை (Key money) முறைமையின் கீழ் ஒதுக்கிக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2021.03.18 அன்று மு.ப. 10.00 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விலைமனுப்படிவங்கள் வழங்கப்படல் : 2021.02.16 முதல் 2021.03.17 அன்று பி.ப. 3.00 வரை

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் : 2021.03.18 அன்று மு.ப. 10.00 வரை

விலைமனுத்திறத்தல் : 2021.03.18 அன்று மு.ப. 10.30 இற்கு

தமது தேசிய அடையாள அட்டை அல்லது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணமொன்றைச் சமர்ப்பித்து மீளளிக்கப்படும் ரூபா 5,000.00 இற்கான விலைமனுப் பிணையம் மற்றும் மீளளிக்கப்படாத ரூபா 5,000.00 இற்கான படிவக்கட்டணத்தை தெஹிஓவிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் விலைமனுப்படிவங்களின் மூலம் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காககட்டணங்கள் அனைத்தும் ரொக்கப்பணமாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**அட்டவணை**

| மாடி | கடை அறை இலக்கம் | பரப்பளவு | ஆகக் குறைந்த கேள்வி (ரூபா) | மாதாந்த வாடகை ரூபா |
|---|---|---|---|---|
| தரை மாடி | 10 | 175 ச.அடி | 2,349,000.00 | 4,000.00 |
| | 12 | 175 ச. அடி | 2,505,000.00 | 5,000.00 |
| முதலாம் மாடி | 24 | 170 ச.அடி | 663,000.00 | 2,250.00 |

**ஏ.ஜீ. தமிந்து சியாமிந்த,**
**தலைவர்,**
**தெஹிஓவிட்ட பிரதேச சபை**
**2021.02.15ஆம் திகதி**
**தெஹிஓவிட்ட பிரதேச சபையில்**
**036-2222575**

---

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2021

## காச நோய்த்தடுப்பு மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய செயற்றிட்டம்

இந்நிறுவனம் மற்றும் இந் நிறுவனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பொரளை மத்திய சிகிச்சையகம், கம்பஹா மார்பு நோய் சிகிச்சையகம், வெலிசர தேசிய காசநோய் ஆய்வுகூடத்திற்காக கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு 2021.02.16 முதல் 2021.03.09 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவுசெய்தல் 2021" என்று தெளிவாகக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.
02. பதிவு செய்தற் கட்டணம் ஒரு உருப்படிக்காக ரூபா 500.00 (மீளளிக்கப்படாத) ஆவதுடன் வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00வரை இந் நிறுவனத்தின் கணக்காளரிடம் செலுத்தலாம். இந் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட உங்களது விண்ணப்பத்தை, காசு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் 2021.03.10 பிற்பகல் 3.00 இற்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது. கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது .
03. குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**பொருட்களை வழங்குதல்**

01. அலுவலக காகிதாதிகள் (கணனி காகிதாதிகள் உட்பட)
02. தளபாடங்கள் (மரம், உருக்கு, பைபர்)
03. சகல வகையான சவர்க்காரம், சலவைத்தூள், வாகனங்களை கழுவுவதற்கு பயன்படும் திரவங்கள்
04. பிளாஸ்டிக் பொருட்கள் (யோகட் கோப்பை)
05. மின் உபகரணங்கள் - குளிரூட்டி, காற்றுச் சீராக்கி, மின்விசிறி, டியூப்லைட் மற்றும் உதிரிப்பாகங்கள்
06. ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
07. வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் பெற்றரி
08. சகல அச்சு விடயங்கள் (துண்டுப் பிரசுரம், பெனர், போஸ்டர், பெயர்ப்பலகை)
09. கணனி, போட்டோப்பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம், பிரிண்டர், கூட்டல் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள்

**சேவை வழங்குதல்**

01. காற்றுச்சீராக்கி, குளிர்சாதனம் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு விடயங்கள்
02. வாகன பழுதுபார்த்தல்கள்
03. கணனி, பிரிண்டர் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு விடயங்கள்
04. ஆய்வுகூட உபகரணங்கள், மருத்துவ உபகரணங்கள், பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு விடயங்கள்
05. மின்சார பழுது பார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு விடயங்கள்
06. மரம் மற்றும் உருக்கு தளபாடங்கள் பழுது பார்த்தல்கள் (குசன் வேலைகள் உட்பட)
07. கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் (சீ06, சீ07, சீ08, சீ09)
08. மின்பிறப்பாக்கி பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் (Cummins Diesel 150 KVA)
09. சிற்றுண்டிகள், குளிர்பானம் மற்றும் சமைத்த உணவு பார்சல்

**நிபந்தனைகள்**

01. பதிவு செய்துள்ள வழங்குநர்களுக்கு வெளியிலும் கேள்வி கோரும் உரிமை இந் நிறுவனத்திற்கு உண்டு.
02. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் தமது தகைமையை உறுதி செய்வதற்கான எழுத்துமூல சான்று (பதிவு செய்தற் சான்றிதழ் உட்பட) சமர்ப்பித்தல் அவசியமாகும்.
03. ஒரு வருட காலத்திற்கு வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவதுடன் அது 2021.03.12 முதல் ஆரம்பமாகும்.

**பணிப்பாளர்,**
**காச நோய் தடுப்பு மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய செயற்றிட்டம்**
**மக்கள் சுகாதார கட்டிடத்தொகுதி (4ஆம் மாடி)**
**இல. 555/5, எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி.**
**தொ.பே இல:0112368274.**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலை மனுக்கோரல்

**100,000 கி.மீ திட்டத்தின் கீழ் மதுருஓயா- அரலகன்வில வீதிக்கு (கி.மீ 21+000 தொடக்கம் -33 + 000 வரை) Aggregate Base Course வழங்கல்**

01. வீதி அபிவிருத்தி அதிகார சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சக வழங்கல் குழு தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன்) | மனு காப்புறுதிப்பிணைத் தொகை (ரூபா.) | மீள் செலுத்தப்படாத கட்டணம் (ரூபா.) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 01 | 100,000 கி.மீ திட்டத்தின் கீழ் மதுருஓயா- அரலகன்வில வீதிக்கு (கி.மீ 21+000 தொடக்கம் - கி.மீ 33 + 000 வரை) Aggregate Base Course வழங்கல் | 12.0 | 200,000.00 | 3,500.00 | 30 |

02. இவ் வேலைத்திட்டத்தில் பொறியியலாளர்களின் அறிவுருத்தலின் படி மதுருஓயா - அரலகன்வில வீதிக்கு (கி.மீ 21+000 தொடக்கம் -கி.மீ 33 + 000 வரை) Aggregate Base Course வழங்கல் என்பன உள்ளடங்கும்.
03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் மற்றும் மனு ஆவணங்களை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி காரியாலய நேரங்களில் பரீட்சித்துக் கொள்ள முடியும்.

    திட்ட பணிப்பாளர் (கட்டுமானம்)
    உள்ளூர் வங்கி நிதி மற்றும் கிராம சாலை திட்டம்
    இல.24, A, அசோகா சுற்றுவட்டம்,
    சுபுதிபுர, பத்தரமுல்லை.

    தொலைபேசி : 011-2187172 பெக்ஸ் : 011-2187173
    lbfprural@gmail.com

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு மீளச்செலுத்தப்படாத ரூபா.3,500 (வட் வரிகளுக்கு உட்பட்ட) 90 நாட்கள் செல்லுபடியாகும் காசுக்கட்டளையுடன் மனு ஆவணத்தை சமர்பித்தல் வேண்டும். காசுக்கட்டளைகள் அற்ற மனு ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.
06. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **15.02.2021** ஆம் திகதியிலிருந்து **26.02.2021** ஆம் திகதி வரை **மு.ப 09.00** மணியிலிருந்து lbfprural@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
07. அனைத்து மனுக்களும் **28 கலண்டர் நாட்கள்** செல்லுபடியாகும் மனுக்காப்புறுதியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
08. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **01.03.2021** ஆம் திகதி **மு.ப 11.00** மணித்தியாலங்களுக்கு முன் தலைவர், வீதி நெடுஞ்சாலைகள் அமைச்சின் வழங்கல் குழு, 8 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" ,டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் ஸ்கைப் தொழிநுட்ப உதவியுடன் திறக்கப்படும். ஸ்கைப் தொடர்பாடல் தொடர்பான தகவல்கள் மனுக்களை திறக்கும் நாளுக்கு முன் வழங்கப்படும்.
09. மனுக்கள் கோரப்படும் இறுதித்திகதியிலிருந்து 119 நாட்கள் வரை அனைத்து மனுக்களும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சின் வழங்கல் சபை,**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**08 ஆம் மாடி, 'மகநெகும மஹமெதுர',**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.**

---

**Repeat Your Ad For Better Offers**

---

it's what you want
www.adz.lk
Hotline: 0112 429 369 | Email: adzsws@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலை மனுக்கோரல்

**"நாட்டை கட்டியெழுப்பும் சௌபாக்கியத்தின் பார்வை" என்ற அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையின் கீழ் 100,000 கி.மீ மாற்று சாலை முறையை அமல்படுத்துவதன் கீழ் சாலைகள் புனரமைத்தல் / மேம்படுத்துவதற்கு தேவையான மொத்த Aggregate Base Course வழங்கல்.**

01. வீதி அபிவிருத்தி அதிகார சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சக வழங்கல் குழு தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீள் செலுத்தப்படாத கட்டணம் (ரூபா.) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|
| 01 | "நாட்டை கட்டியெழுப்பும் சௌபாக்கியத்தின் பார்வை" என்ற அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையின் கீழ் 100,000 கி.மீ மாற்று சாலை முறையை அமல்படுத்துவதன் கீழ் சாலைகள் புனரமைத்தல் / மேம்படுத்துவதற்கு தேவையான மொத்த Aggregate Base Course வழங்கல். | 3,500.00 | 12 |

02. இவ் வேலைத்திட்டத்தில் பொறியியலாளர்களின் அறிவுருத்தலின் படி மதுருஓயா - அரலகன்வில வீதிக்கு அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையின் கீழ் 100,000 கி.மீ மாற்று சாலை முறையை அமல்படுத்துவதன் கீழ் சாலைகள் புனரமைத்தல் / மேம்படுத்துவதற்கு தேவையான மொத்த Aggregate Base Course வழங்கல் உள்ளடங்கும்.
03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

    திட்ட பணிப்பாளர்
    உள்ளூர் வங்கி நிதி மற்றும் கிராம சாலை திட்டம்
    இல.24. A, அசோகா சுற்றுவட்டம்,
    சுபுதிபுர, பத்தரமுல்லை.
    தொலைபேசி : 011-2187172 பெக்ஸ் : 011-2187173
    lbfprural@gmail.com

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு மீளச்செலுத்தப்படாத ரூபா.3,500 (வட் வரிகளுக்கு உட்பட்ட) 90 நாட்கள் செல்லுபடியாகும் காசுக்கட்டளையுடன் மனு ஆவணத்தை குறித்த நிர்வாகப் பகுதிக்கு சமர்பித்தல் வேண்டும். காசுக்கட்டளைகள் அற்ற மனு ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.
06. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 15.02.2021 ஆம் திகதியிலிருந்து 26.02.2021 ஆம் திகதி வரை 09.00 மணியிலிருந்து lbfprural@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
07. அனைத்து மனுக்களும் 28 கலண்டர் நாட்கள் செல்லுபடியாகும் மனுக்காப்புறுதியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
08. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் 01.03.2021 ஆம் திகதி 11.00 மணித்தியாலங்களுக்கு முன் தலைவர், வீதி நெடுஞ்சாலைகள் அமைச்சின் வழங்கல் குழு, 8 ஆம் மாடி,"மகநெகும மஹமெதுர" ,டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் ஸ்கைப் தொழிநுட்ப உதவியுடன் திறக்கப்படும். ஸ்கைப் தொடர்பாடல் தொடர்பான தகவல்கள் மனுக்களை திறக்கும் நாளுக்கு முன் வழங்கப்படும்.
09. மனுக்கள் கோரப்படும் இறுதித்திகதியிலிருந்து 119 நாட்கள் வரை அனைத்து மனுக்களும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சின் வழங்கல் சபை,**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**08ஆம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.**




கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில்

# பாடசாலைகளில் முதலாம் தர மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு









ஹற்றன் விசேட , ஹற்றன் சுழற்சி, காவத்தை தினகரன், லுணுகல நிருபர்கள்

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் முதலாம் தரத்திற்கு மாணவர்கள் உள்வாங்கும் நிகழ்வு நேற்று மலையகத்தில் (15.02.2021) சிறப்பாக நடைபெற்றன.

ஒவ்வொரு வருடமும் முதலாம் தரத்திற்கு மாணவர்கள் உள்வாங்கும் நடவடிக்கைகள் ஜனவரி மாதம் இடம்பெறுகின்ற போதிலும் கொரோனா தொற்று பரவல் காரணமாக இந்நடவடிக்கைகள் பிற்போடப்பட்டன.

இந்நிலையில் சகல பாடசாலைகளிலும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டதுடன் முதலாம் தரத்திற்கு உள்வாங்கும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பாலர் புரட்சி எனும் செயற்திட்டத்தின் கீழ் முதன் முறையாக மரக்கன்று ஒன்றும் வழங்கப்பட்டன.

வீடுகளில் மரக்கன்றுகள் நாட்ட இடமில்லாத மாணவர்களுக்கு பாடசாலை வளவில் மரக்கன்றுகள் நாட்டுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன. இதற்கமைய பாடசாலை வளவிலும் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

தேசிய நிகழ்வுக்கு அமைவாக ஹற்றன் கல்வி வலயத்தின் பிரதான நிகழ்வு கல்வி வலயத்தின் தோட்ட பாடசாலையான ஸ்ரீ வாணி ஆரம்ப வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் எஸ்.ராஜரத்னம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் காப்பாளரும் ஹற்றன் வலயக்கல்விப்பணிப்பாளருமான பி.ஸ்ரீதரன் கலந்து கொண்டதுடன் முதலாம் தரத்திற்கு மாணவர்களை வரவேற்றதுடன் வகுப்பறைகளையும் திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து மாணவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

ஹற்றன் கல்வி வலயத்தில் இவ் வருடம் 133 பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றதுடன், மாணவர் ஒவ்வொருக்குமாக சுமார் 3500 மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

மரக்கன்றுகளை ஐந்து வருடம் பேணிப்பாதுகாப்பதற்கான அறிவுறுத்தல்கள் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த மரக்கன்று தொடர்பாக தரவுகள் அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பாடசாலை ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களுக்கு சிறிய வயது முதல் இயற்கை சூழலை பாதுகாப்பதற்கு மரம் ஒன்று நாட்டப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு ஆரம்ப நாளிலேயே வளர்க்கப்படுகின்றது. அத்தோடு பாலர் பராயத்திலேயே இயற்கையை பாதுகாக்கப்பட வேண்டும் என்பது இதன் ஊடாக உணர்த்தப் படுவதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு கல்வி வலயத்தின் ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகர் எஸ்.புவனேஸ்வரி, சுற்றாடல் பிரிவு ஆசிரிய ஆலோசகர் மைக்கல் செபஸ்த்தியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

2021 ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்கு மாணவர்களைப் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளும் பசறை கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் அதிபர் சுப்ரமணியம் ரமேஷ் தலைமையில் இடம்பெற்றது.

காவத்தை ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயத்தில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு சுகாதார விதிமுறைகளுக்கமைய பாடசாலை அதிபர் எம்.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

## ஜனாதிபதி, பிரதமரின் இலக்கு நாட்டை சௌபாக்கிய நிலைக்கு உயர்த்துவது

மத்திய மாகாண ஆளுநர்

எம்.ஏ.அமீனுல்லா, அக்குறணை குறூப் நிருபர்

மத்திய மாகாணத்திலுள்ள சிறந்த முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வருடந் தோறும் நடை பெறும் நட்சத்திர விருது விழா இம்முறை கண்டி, கிறேண்ட் கெண்டியன் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. உற்பத்தித்துறை மற்றும் சேவைத்துறை என்ற இரண்டு பிரதான பிரிவுகளில் மிகச்சிறிய, சிறிய, மத்தியதர, பாரிய தொழில் முயற்சிகளுக்காக பரிசுகள் வழங்கப்பட்டன. ஒரு மாவட்டத்திற்கு 24 என்ற அடிப்படையிலும் மாகாண மட்டத்திலுமாக மொத்தம் 79 பரிசுகள் வழங்கப்பட்டன.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பிரதம அதிதியாகக் கலந்து பரிசுகளை வழங்கினார். அதன் போது அவர் தெரிவித்தாவது,

எமது நாட்டின் கடந்த காலங்களில் ஏற்றுமதித் துறையில் வளர்ச்சி காணப்பட்ட போதும் அண்மித்த காலங்களில் அது பின்தள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் இலக்கு நாட்டை சௌபாக்கிய நிலைக்கு உயர்த்துவதாகும். எனவே சகல தொழில் முயற்சியாளர்களதும் பங்களிப்பு இதற்கு பெரிதும் தேவைப்படுகிறது. அதன் அடிப்படையிலே மத்திய மாகாண கைத்தொழில் திணைக்களம் மேற்படி விருது விழாலை நடத்தி வருகிறது என அவர் தெரிவித்தார்.

## மலையகத்தில் அதிகரிக்கும் சிறுத்தைப்புலி நடமாட்டம்

ஹற்றன் விசேட நிருபர், நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

### வலையில் சிக்கிய சிறுத்தைப்புலி தப்பியோட்டம்



பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பொகவந்தலாவை மேல் பிரிவு தோட்டத்தில் செப்பல்டன் எல்லை பகுதியில் சுமார் 5 அடி நீளமான வலையில் சிக்குண்ட சிறுத்தைப்புலி தப்பியோடியுள்ளது.

குறித்த எல்லை பகுதியில் மிருகங்களை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்ட பொறி ஒன்றில் சிறுத்தைப்புலி சிக்குண்டிருந்தது.

நேற்று காலை செப்பல்டன் தோட்டத்திற்கு வேலைக்குச் சென்ற தொழிலாளர்கள் சிறுத்தைப்புலியினை கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலினையடுத்து நல்லதண்ணீர் வன ஜீவராசி திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்த போது வலையிலிருந்து அது மீண்டும் தப்பியோடியுள்ளது. அந்த வனப்பகுதியில் இரண்டு சட்டவிரோதமான வலைகள் விரிக்கப்பட்டுள்ளதோடு அதில் நாய் ஒன்று சிக்குண்டு இருந்ததோடு மற்றைய வலையில் புலி சிக்குண்டு இருந்த நிலையிலேயே புலி நாயினை கடித்து தின்றுவிட்டு சென்றுள்ளது. புலியின் கழுத்து பகுதியில் சிக்குண்டு இருந்த வலையினை அறுத்துக்கொண்டு தப்பி சென்றுள்ளதாக நல்லதன்னி வனவிலங்கு அதிகாரிகளின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. வனப்பகுதியில் மிருகங்களை வேட்டையாடுவதற்கு சட்ட விரோதமாக வலைவிரிக்கபடுவோர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நல்லதன்னி வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். இதே வேளை மற்றுமொரு சிறுத்தைப்புலி பொகவந்தலாவை திரேசியா பகுதியில் பாலத்திற்கு அடியில் இருப்பதனை பொது மக்கள் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.



தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான முதல் கூட்டம் கொழும்பிலுள்ள தலைமை காரியாலயத்தில் அண்மையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான குழு தலைவர் குஷால் டி அல்பிஷ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் உட்பட புதிய குழு உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர்.

## வலஹன்தூவ தோட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் வீடமைப்பு திட்டம்





இந்திய அரசாங்கத்தின் வீடமைப்பு கருத் திட்டத்தின் கீழ் தனி வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் காலி வலகான்தூவ பகுதியில் நேற்று இடம்பெற்றது.

அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் காலி வலஹன்தூவ தோட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் வீடமைப்பு கருத்திட்டத்தின் கீழ் தனி வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று (15) திங்கட்கிழமை இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஸ் பத்திரண, இந்திய தூதரக அதிகாரிகள், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பத் அத்துக்கொரால, இசுரு தொடாங்கொட மற்றும் அமைச்சின் செயலாளர் டி.பி.ஜி. குமாரசிரி ஆகியோருடன் மத்திய மாகாண சபை உறுப்பினர் சத்திவேல் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

மத்திய மாகாணத்தில்

## கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5000 ஐ தாண்டியது

எம்.ஏ.அமீனுல்லா

மத்திய மாகாணத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5760 ஆக உயர்ந்துள்ளதாக மத்திய மாகாண சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா வைரஸ் நோயாளர்கள் கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் அதன்படி இதுவரை 3779 பேர் பதிவாகியுள்ளனர். அதுபோன்று நுவரெலியா மாவட்டத்தில் 1131 தொற்றாளர்களும் , மாத்தளை மாவட்டத்தில் 850 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளன.

நேற்று (15) காலை 6.00 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாகாணத்திற்குள் மொத்தம் 107 புதிய தொற்றாளர்கள் பதிவாகியுள்ளன. அதன்படி கண்டியிலிருந்து 107, பேரும் நுவரெலியாவிலிருந்து 05, மாத்தளைலிருந்து 08 பேரும் புதிய தொற்றாளர்களாக பதிவாகியுள்ளனர்.

மேலும் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திலேயே கொரோனா தொற்று காரணமாக அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அதன்படி கண்டிமாவட்டத்தில் இதுவரை 38 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 08 பேரும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் ஐவருமாக மொத்தம் 51 பேர் உயிரந்துள்ளனர்.

மேலும் கொரோனா வைரஸ் நோய் காரணமாக கண்டி மாவட்டத்தில் எட்டு இடங்களில் கொவிட் தொற்றாளர்களுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது. இந்தவகையில் குறிப்பாக பேராதனை நிலையத்தில் 366 பேரும் கண்டி பொல்கொல்லை மத்திய நிலையத்தில் 254 பேரும், தெல்தெனிய நிலையத்தில் 115 பேரும் லக்கல நிலையத்தில் 104 பேரும் தற்பொழுது சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும் ஏனைய சிகிச்சை நிலையங்களில் நூற்றுக்கும் குறைவானவர்களே சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றன. இதில் நேற்று காலை 6.00 மணி வரையுள்ள காலத்தினுள் புதிதாக 80 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் 96 பேர் பூரண சுகத்துடன் சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியாகியுள்ளனர்.

## தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில்

### 10 பேருக்கு கொவிட்19 தொற்று

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் நடத்தப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனைகளின்போது கொரோனா வைரஸால் பாதிக்கப் பட்டவர்கள் இனம் காணப்பட்டுள்ளதால் அப்பகுதியிலுள்ள ஆறு கடைகளை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட 10 பேர் கண்டுபிடிக்கப்பட்டதாக தம்புள்ள நகர சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பாதிப்பிற்கு, பொருளாதார மத்திய நிலையத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பொருளாதார மத்திய நிலையத்திற்கு வெளியே இருந்து வந்தவர்கள் மற்றும் அதிர்ஷ்ட இலாப சீட்டு விற்கும் நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் கலேவெல, புலனவெவ, தம்புள்ள, மொராகொல், தேவஹுவ உட்பட பல பகுதிகளில் வசிப்பவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

## இறக்குவானை மக்கள் வங்கி ஊழியருக்கு கொரோனா

### வங்கி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

இறக்குவானை தினகரன் நிருபர்

இறக்குவானை மக்கள் வங்கி ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து வங்கி தற்காலிகமாக நேற்று தொடக்கம் மூடப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி மக்கள் வங்கி ஊழியர்கள் அனைவருக்கும் பி சி ஆர் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

சில ஊழியர்களுக்கு தொற்று அறிகுறிகள் காணப்படுவதாகவும் தெரியவருகின்றது. அவர்களை பி.சி. ஆர் பரிசோதனைக்குட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வீதி அபிவிருத்தி பணியாளர்கள் இருவருக்கு கொரோனா

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நோர்வூட் தொடக்கம் பொகவந்தலாவ பெற்றோசோ வரை வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட்டு வந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மேலும் கிளங்கன் வைத்தியசாலை தாதியர் ஒருவரின் கணவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட்ட இருவரும் சுகயீனம் காரணமாக டிக்கோயா, கிளங்கன் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு மருந்து எடுக்க சென்றபோது அங்கு அவர்களுக்கு மேற் கொண்ட என்டிஜன் பரிசோதனையிலேயே இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டதாக பொது சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை தொற்றுக்குள்ளான மற்றுமொரு நபர் கிளங்கன் வைத்தியசாலையில் தாதியாக கடமைபுரிபவரின் கணவர் எனவும் தெரியவருகிறது. தொற்றுக்குள்ளான மூவரையும் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

## மான் இறைச்சியுடன் நால்வர் கைது

இறக்குவானை தினகரன் நிருபர்

றக்குவானை பொலிஸாரால் மான் இறைச்சியுடன் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.இவர்களை நேற்று பெல்மதுளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 119 மற்றும் இறக்குவானை பொலிஸாருக்கும் கிடைத்த தகவலின் படி நேற்று நால்வரை கைது செய்துள்ளனர்.

இறக்குவானை மாணிக்கத்தை பிரதேசத்தில் ஜீப் வண்டியில் மான் இறைச்சி, 12 ரக துப்பாக்கி, 11 துப்பாக்கி ரவைகள், யானை வெடி 2 ஆகியவற்றுடன் இவர்கள் கைது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜீப் வண்டியின் உரிமையாளர் இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்தவர் இவருடன் இரத்தினபுரி பிரதேசத்தை சேர்ந்த கடமையிலிருந்து நீக்கப்பட்ட பொலிஸார் ஒருவர் மற்றும் இறக்குவானை மாணிக்கவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

கடந்த பல காலங்களாக இவர்கள் இப்பிரதேசத்தில் வந்து போவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.






# ஆசிய கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டி இலங்கை அணி பஹ்ரெய்ன் பயணம்

பஹ்ரெய்னில் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலக கிண்ண கூடைப் பந்தாட்ட தகுதிகாண் சுற்றான ஆசிய கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டியில் கிளின்டன் ஸ்டலோன் தலைமையிலான இலங்கை கூடைப்பந்தாட்ட அணி பங்குபற்றவுள்ளது.

சுசில் உடுகும்புரவைத் தலைமைப் பயிற்றுநராகக் கொண்ட இலங்கை கூடைப்பந்தாட்ட அணி பஹ்ரெய்னுக்கு பயணமானது.

நாங்கள் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றோம். கொள்ளுப்பிட்டியில்கூடைப் பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியன உட்பட இன்னும் மூன்று வகையான விளையாட்டுகளுக்கென உள்ளக அரங்கு ஒன்றை நிருமாணிக்க திட்டமிட்டுள்ளோம். பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கூடைப்பந்தாட்டத்தையும் ஏனைய உள்ளக விளையாட்டுக்களையும் ஊக்குவிக்க, அபிவிருத்தி செய்ய எம்முடன் ஒத்துழைக்க முன்வந்துள்ளனர்.

இதன் காரணமாகவே தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு முதற்கட்டமாக அனுசரணை வழங்க முன்வந்தோம். அத்துடன் கூடைப் பந்தாட்டத்தை அடிமட்டத்திலிருந்து அபிவிருத்தி செய்வதே எமது பிரதான நோக்கம்' என காஜா ஹோல்டிங் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் இலங்கையின் முன்னாள் வீரரும் மாஸ்டர்ஸ் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் சமகாலத் தலைவருமான காயத் ஜயசிங்க தெரிவித்தார். பஹ்ரெய்னில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றான ஆசிய கிண்ணப் போட்டியில் ஒரு குழுவில் கஸகஸ்தான், ஜோர்தான், பலஸ்தீனம் ஆகிய நாடுகளை இலங்கை எதிர்த்தாடவுள்ளது. பலஸ்தீனம் (100 – 45), ஜோர்தான் (102 – 60) ஆகிய நாடுகளுடன் ஏற்கனவே அந்நிய மண் போட்டிகளில் விளையாடிய இலங்கை தோல்வி அடைந்தது.

இந்த அணிகளுடனான சொந்த மண் போட்டிகளை ஜோர்தானில் சந்திக்கவுள்ள இலங்கை, அங்கு இரண்டு சுற்றுகளுக்கான போட்டிகளில் கஸகஸ்தானையும் எதிர்த்தாடவுள்ளது. கஸகஸ்தானுடன் கடந்த நவம்பர் மாதம் நடைபெறவிருந்த போட்டி கொரோனா காராணமாக பிற்போடப்பட்டது. கஸகஸ்தானை 18, 22ஆம் திகதிகளிலும் ஜோர்தானை 19ஆம் திகதியும் பலஸ்தீனத்தை 21ஆம் திகதியும் இலங்கை எதிர்த்தாடும். இதில் ஒரு போட்டியில் வெற்றிபெற்றாலும் இலங்கை அணி அடுத்த சுற்றில் விளையாட தகுதிபெறும். இந்த சுற்றுப் போட்டியை முன்னிட்டு உயிரியல் பாதுகாப்பு குமிழிக்குள் ஒரு மாதத்துக்கு மேல் கடுமையான பயிற்சிகளில் வீரர்கள் ஈடுபட்டனர். அதிசிறந்த அணியே இந்த சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

23 வயதை சராசரியாகக் கொண்ட வீரர்களே இலங்கை அணியில் இடம்பெறுகின்றனர்.

எமது இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடுவார்கள் என நம்புகின்றேன்' என தலைமைப் பயிற்றுநர் சுசில் உடுகும்புர தெரிவித்தார். 'மிக நீண்ட காலத்துக்கு பின்னர் வீரர்கள் ஒன்றுகூடியதால் நாங்கள் அனைவரும் எமது உடற்தகுதியையும் மனோபலத்தையும் அதிகரித்துக்கொள்ள கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டோம். நாங்கள் ஒவ்வொரு நாளும் 600 இலிருந்து 700 தடைவகைள் இலக்கை நோக்கி (பாஸ்கட்ஸ்) பந்தை எறிந்து பயிற்சி செய்தோம். இந்த சுற்றுப் போட்டியில் சாதிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் விளையாடவுள்ளோம்' என அணித் தலைவரும் புனித பெனடிக்ட் கல்லூரியின் முன்னாள் வீரருமான கிளின்டன் ஸ்டெலோன் தெரிவித்தார்.

### இலங்கை கூடைப்பந்தாட்ட அணி

கிளின்டன் ஸ்டெலோன் (தலைவர்), தசுன் நிலன்த, பவன் கமகே, ப்ரென்ட் ஆர்னல்ட் ஸ்டெலோன், நிமேஷ் பெர்னாண்டோ, நிப்புன் கிரியெல்ல, டில்ஷான் பெர்னாண்டோ, அசன்க மஹேஷ், சய்ந்து கஜநாயக்க, ரஷான் பெரேரா, சானுக்க பெர்னாண்டோ, ருக்ஷான் அத்தப்பத்து. தலைமைப் பயிற்றுநர் சுசில் உடுகும்புர, உதவிப் பயிற்றுநர் ரனுர நாணயக்கார, ஆலோசகர் துமிந்த டி சில்வா, முகாமையாளர் கிளிபர்ட் சுரேந்திரன்.

# மார்க்ஸ்மேன் விளையாட்டுக் கழக தலைவராக றிசாத் ஏ காதர்




**ஒலுவில் மத்திய விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை மார்க்ஸ் மேன் விளையாட்டுக் கழகத்தின் தலைவராக ஊடகவியலாளர் றிசாத் ஏ காதர் தெரிவுசெய்யப்பட்டார்.

அட்டாளைச்சேனை மார்க்ஸ் மேன் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிருவாக சபைத் தெரிவு கடந்த 2021.01.29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பீச் ஹவுஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம். எச்.எம். அஜ்வத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கழகத்தின் உறுப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கூட்டத்தில் கடந்த நிருவாக சபையினால் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் கழகத்தின் கடந்த நிருவாக சபைத் தலைவர், செயலாளர் உட்பட பொருளாளர் ஆகியோர் தெளிவுபடுத்தியதுடன் கடந்த வருட பொதுக்கூட்டறிக்கை, கணக்கறிக்கை என்பவற்றினையும் சபைக்கு சமர்ப்பித்திருந்தனர்.

பின்னர், 2021/2022 ஆண்டுக்கான புதிய நிருவாக சபைத் தெரிவு இடம்பெற்றது இதில் செயலாளராக ஆர். நௌசாத் (உடற்கல்வி ஆசிரியர்) தெரிவு செய்யப்பட்டார், தலைவராக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் இணைப்பாளரும், ஊடகவியலாளருமான றிசாத் ஏ காதர் தெரிவு செய்யப்பட்டார், பொருளாளராக எஸ்.முகம்மட் கியாத்( அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோருடன் உப செயலாளராக ஐ.முகம்மட் வாஜித், உப தலைவராக கே.எம். றஹீம் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிருவாக சபை உறுப்பினர்களாக என்.எம்.நஜாத், ஏ.ஜே.றொஷான், கே.றிஸ்வி, எஸ்.எல்.றிஸ்கான், கே.றிகாஸ், ஜே.எம்.றிப்னாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் கிரிக்கெட், கால்பந்து மற்றும் கரப்பந்து மற்றும் கபடி, மெய்வல்லுனர், எல்லே, வலைப் பந்து ஆகியவிளையாட்டுக்களுக்கான அணித் தலைவர்களாக அஹமட் சாரீஸ், றுஆஸ் மற்றும் எச்.ஹம்சான் ஆகியோருடன் எப். சஹி அஹமட், ஆசிரியர் அஸ்பாக், நஷாத், அஸ்கி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கழகத்தின் ஆலோசகர்களாக எம். சமீல், எம்.அஸ்லம் சஜா ஆகியோருடன் சட்டத்தரணி எஸ்.எம். எம்.பைறூஸ், கே.அப்துல் ஹமீட் மற்றும் ஏ.சீ.ஏ.முகம்மட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மேற்கிந்திய சுற்றுப்பயணம் திட்டமிட்டபடி நடைபெறும்

## இலங்கை கிரிக்கெட்

மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தை முன்னிட்டு இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளில் எவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகவில்லை என உறுதி செய்யப்ப்பட்டதையடுத்து இரு அணிகளுக்குமிடையிலான கிரிக்கெட் தொடர் திட்டமிட்டபடி நடைபெறும் என இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி இலங்கை அணி வீரர் லஹிரு திரிமான்ன, பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இம்மாதம் 18ஆம் திகதி முதல் ஆரம்பமாகவிருந்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் மேற்கிந்திய சுற்றுப்பயணத்தை ஒத்திவைக்க இலங்கை கிரிக்கெட் கடந்த வாரம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மற்றும் அணியின் பயிற்சியாளர்களுக்கு கடந்த 10ஆம் திகதி பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் மேற்கிந்திய தீவுகள் தொடருக்காக அறிவிக்கப்பட்ட இலங்கை வீரர்கள் 35 பேருக்கும், அணியின் பயிற்சியாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்துக்கான பயிற்சி முகாமை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கில், இலங்கை கிரிக்கெட் அணியிலுள்ள வீரர்களுக்கான உடற்தகுதி பரிசோதனை கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் முன்னெடுக்கப்பட்டது.

2 கிலோ மீற்றர் தூரத்தை ஓடி கடப்பதற்கான இப்பரிசோதனையில் மேற்கிந்திய தீவுகள் அணியுடனான தொடரில் விளையாடுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட இலங்கை அணியின் 36 வீரர்களில் 32 பேர் பங்கேற்றிருந்தனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியுடனான சுற்றுப்பயணம் நடைபெறுமா? என்பது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வா அளித்த பேட்டியில்,

மேற்கிந்திய சுற்றுப்பயணத்தில் இடம்பிடித்த வீரர்களுக்கான உடற்தகுதி பரிசோதனை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன் இறுதி முடிவுகள் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. பெரும்பாலும் விரைவில் அதன் முடிவுகள் எமக்கு கிடைக்கும். அதேபோல, பிசிஆர் பரிசாதனைகளின் முடிவும் திருப்தியளிக்கின்றன. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் வீரர்களின் பயிற்சி முகாம் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான அனுமதி கிரிக்கெட் குழுவிடம் இருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம் என தெரிவித்தார்.

இலங்கை அணியின் மேற்கிந்திய சுற்றுப்பயணம் பெப்ரவரி 18ஆம் திகதி ஆரம்பமாகவிருந்ததுடன், இதன் முதலாவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 3 ஒருநாள் சர்வதேச போட்டிகள் மற்றும் 3 இருபதுக்கு 20 போட்டிகளில் இலங்கை அணி விளையாடவிருந்தன. பங்களாதேஷ் அணியின் இலங்கை சுற்றுப்பயணம் எப்போது? நாங்கள் போட்டி அட்டவணையில் ஒருசில போட்டிகளை குறைப்பதற்கு அவதானம் செலுத்தியிருந்தோம்.

ஆனால், தற்போதுள்ள நிலையில் திட்டமிட்டபடி அனைத்து போட்டிகளையும் ஒருசில மாற்றங்களுடன் நடத்துவது குறித்து மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.


நாங்கள் ஆரம்பத்தில் 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் மற்றும் 3 போட்டிகளைக் கொண்ட ரி 20 தொடர்களில் விளையாடி இறுதியாகத் தான் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது ரி 20 தொடரை ஆரம்பத்தில் விளையாடி ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் விளையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

# பங்களாதேஷுடனான தொடரை அள்ளிச் சுருட்டியது மேற்கிந்திய தீவுகள் அணி

டாக்காவில் நடைபெற்ற இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் 10 விக்கெட்களையும் சுழல்பந்துவீச்சாளர்கள் கைப்பற்ற, மேற்கிந்தியத் தீவுகள் 17 ஓட்டங்களால் வெற்றியீட்டி தொடரை 2 – 0 என முழுமையாக கைப்பற்றியது

ரக்கீம் கோர்ன்வோல் 4 விக்கெட்களையும் க்ரெய்க் ப்றத்வெய்ட், ஜோமெல் வொரிக்கன் ஆகிய இருவரும் தலா 3 விக்கெட்களையும் கைப்பற்றி மேற்கிந்தியத் திவுகளின் வெற்றியை உறுதிசெய்தனர்.

231 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் போட்டியில் மேலும் ஒருநாள் இருந்ததால் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி வெற்றிபெற்றுவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மேற்கிந்தியத் தீவுகளின் சுழல்பந்துவீச்சாளர்களை சரியாக எதிர்கொள்ளத் தவறிய பங்களாதேஷ், சீரான இடைவெளிகளில் விக்கெட்களை இழந்து 213 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.




பங்களாதேஷின் 9ஆவது வீக்கெட் வீழ்ந்த பின்னர் மெஹ்தி ஹசன் அதிரடியில் இறங்கி 2 சிக்கர்களையும் 3 பவுண்டரிகளையும் விளாசி அடித்து ஆட்டத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்தினார். எனினும், மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் நிதானத்தைக் கடைப்பிடித்து பங்களாதேஷை ஏமாற்றம் அடையச் செய்தனர்.

பங்களாதேஷ் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியபோது ஆரம்ப வீரர் தமிம் இக்பால் அதிரடியாக 50 ஓட்டங்களைப் பெற்று சௌமியா சர்க்காருடன் முதலாவது விக்கெட்டில் 59 ஓட்டங்களைப் பகிர்ந்தார். இவர்கள் இருவரது விக்கெட்களையும் ப்றத்வெய்ட் வீழ்த்தியதும் கோர்ன்வோலும் வொரிக்கனும் துல்லியமாக பந்துவீசி பங்களாதேஷை தடுமாறச் செய்தனர்.

போட்டியின் நான்காம் நாளில் தனது இரண்டாவது இன்னிங்ஸை 3 விக்கெட் இழப்புக்கு 41 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்த மெற்கிந்தியத் தீவுகள், மேலதிகமாக 76 ஓட்டங்களுக்கு எஞ்சிய 7 விக்கெட்களையும் தாரைவார்த்து 117 ஓட்டங்களுக்கு சுருண்டது மேற்கிந்திய தீவுகள்.

எவ்வாறாயினும் பங்களாதேஷும் இரண்டாவது இன்னிங்ஸில் பிரகாசிக்கத் தவறி தோல்வி அடைந்தது. இரண்டு அணிகளுக்கும் இடையில் சிட்டகொங்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 3 விக்கெட்களால் அபார வெற்றிபெற்றிருந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் 1வது இன்: 409 (ஜொஷுவா டா சில்வா 92, நிக்ருமா பொன்னர் 90, அல்ஸாரி ஜோசப் 82, அபு ஜாயெத் 98 – 4 விக்., தய்ஜுல் இஸ்லாம் 108 – 4 விக்.)'2வது இன்: 117 (நிக்ருமா பொன்னர் 38, ஜொஷுவா டா சில்வா 20, தய்ஜுல் இஸ்லாம் 36 – 4 விக்., நயீம ஹசன் 34 – 3 விக்.) பங்களாதேஷ் 1வது இன்: 296 (லிட்டன் தாஸ் 71, மெஹிதி ஹசன் மிராஸ் 57, முஷ்பிக்குர் ரஹிம் 54, ராக்கீம் கோர்ன்வோல் 74 – 5 விக்., ஷெனன் கேப்றியல் 70 – 3 விக்.)' 2வது இன்: (வெற்றி இலக்கு 231) (தமிம் இக்பால் 50, மெஹிதி ஹசன் மிராஸ் 31, ரக்கீம் கோர்ன்வோல் 105 – 4 விக்., க்ரெய்க் ப்றத்வெய்ட் 25 – 3 விக்., ஜோமெல் வொரிக்கன் 47 – 3 விக்.)

ஆட்டநாயகன் ராக்கீம் கோர்ன்வோல், தொடர்நாயகன் நிக்ருமா பொன்னர் ஆகியோர் தெரிவானர்.



# வட மாரட்சி வேங்கைகள்அணி 78 ஓட்டங்களால் வெற்றி

**யாழ். விளையாட்டு நிருபர்**

ஞானம் பெயின்ரஸ் சம்பியன் கிண்ணத் துக்கான துடுப்பாட்டத் தொடரில் வட மாரட்சி வேங்கைகள் அணி, 78 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சனிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி புற் தரை அடுகளத்தில் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் வட மாரட்சி வேங்கைகள் அணியை எதிர்த்து அரியாலை கில்லாடிகள் – 100 அணிகள் மோதிக் கொண்டன. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அரியாலை கில்லாடிகள் – 100 அணி களத்தடுப்பை தெரிவுசெய்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய வட மாரட்சி வேங்கைகள் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் மதுஷன் 59 ஓட்டங்களையும், றுக்ஸ்மன் 38 ஓட்டங்களையும்,பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் அரியாலை கில்லாடிகள் 100 அணி சார்பில் , பிரபவன் 3 விக்கெட்டுக்களையும், சுயன்2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

139ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென பதிலுக்கு துடுப்பெடுத்து விளையாடிய அரியாலை கில்லாடிகள்100 அணியினர் 12.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழத்து 60ஓட்டங்களைமட்டும் பெற்றது. இதில் சுரேந்திரன் 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வட மாரட்சி வேங்கைகள் அணி சார்பில் சுஜிபன்.மோகன்ராஜ், 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.ஆட்டநாயகனாக வடமாரட்சி வேங்கைகள் அணி வீரர் மதுஷன்தெரிவானார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 பெப்ரவரி மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஏலம் அழைப்பு

## அம்பகமுவ பிரதேச சபை – கினிகத்தேனை

2021 ஆண்டுக்கு அம்பகமுவ பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் அதற்கமைவான சேவைகளை மேற்கொள்ளல் குறித்த ஏலம் அழைக்கப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | ஏலம் வழங்கப்படும் சேவை | ஆகக் குறைந்த ஏலம் | திரும்பப் பெறக்கூடிய வைப்பு | திருப்பிச் செலுத்த முடியாத வைப்பு | விண்ணப்பப் படிவ கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கினிகத்தேனை புதிய பேருந்து நிறுத்துமிட உள்ளக மலசலகூட தொகுதிகள் | 334,585.00 | 6,695.00 | 2,000.00 | 500.00 |

- ❖ **ஏல விண்ணப்பங்களை வழங்குதல்**
  16.02.2021 அன்று மு.ப.9.00 மணி முதல் 01.03.2021 அன்று பி.ப. 3.00 மணி வரை அம்பகமுவ பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணங்களை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.
- ❖ **ஏல விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது**
  02.03.2021 அன்று மு.ப.10.00 மணி வரை அம்பகமுவ பிரதேச சபை அலுவலகத்தில்.
- ❖ **ஏலங்களைத் திறத்தல்**
  02.03.2021 அன்று மு.ப. 10.00 மணிக்கு அம்பகமுவ பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில்.
- ❖ ஏலத்திற்கான காலம் 02.03.2021 அன்று முதல் 31.12.2021 திகதி வரை.
- ❖ அம்பகமுவ பிரதேச சபைக்கு நிலுவை கட்டணங்களை செலுத்தவிருக்கும் நபர்களுக்கு நிலுவை கட்டணங்களை செலுத்திய பின்னர் தான் விண்ணப்பங்கள் வழங்கப்படும்.
- ❖ விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கு கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் முன்வைக்க வேண்டும்.
- ❖ அம்பகமுவ பிரதேச சபையின் கேள்வி ஆவணத்தில் குற்றப் பெயர் இருக்கும் ஏலதாரர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படாது.
- ❖ மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் – 051-2242224 / 051-4924824 ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.
- ❖ ஏலங்களை ஏற்றுக்கொள்ளல் வழங்குதல் முடிவடைந்த பின்னர் 14 நாட்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட ஏலதாரர்களை தவிர நிராகரிக்கப்பட்ட ஏலதாரர்கள் முன்வைக்கும் ஏல பத்திரங்கள் (மீள் செலுத்தப்படும் வைப்பு) அவர்களிடம் திரும்பிச் செலுத்தப்படுவதுடன் அதற்காக எவ்விதமான வட்டியும் செலுத்தப்படாது.
- ❖ அம்பகமுவ பிரதேச சபையால் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் மூலமாக மட்டுமே ஏலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- ❖ ஏல மதிப்பில் 50% மற்றும் 1% முத்திரை கட்டணத்தை ஏலத்தை திறந்த தினத்தில் செலுத்த வேண்டும்.
- ❖ ஏலம் முன்வைத்தல், திறப்பு மற்றும் ஏற்றுக்கொள்வது மற்றும் வழங்குதல் குறித்த அதிகாரம் கொள்முதல் குழுவுக்கு உண்டு.
- ❖ மாதாந்த நீர் கட்டணத்தை ஏலதாரர் செலுத்த வேண்டும்.
- ❖ கலி கழிவுகளை அகற்றுவதற்கு அமைவான கட்டணங்களை ஏலதாரர் சபைக்கு செலுத்த வேண்டும்.

**ஜயசங்க பெரேரா,**
**தலைவர் (கொள்முதல் குழு),**
**அம்பகமுவ பிரதேச சபை,**
**கினிகத்தேனை.**
**12.02.2021**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

**பிரசித்த அறிவித்தல்**

கம்பனியின் பெயர்: **வரையறுக்கப்பட்ட குளோபல் ஈ எம் எஸ் ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவனம்**
கம்பனி பதிவு இலக்கம்: பீவி 00232154
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 22 டிசெம்பர் 2020
பதிவு செய்யப்பட்ட அலுவலக விலாசம்:
இல. 142ஏ/4, பஹலகறகஹமுன வீதி, கடவத்த
**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**பிரசித்த அறிவித்தல்**

கம்பனியின் பெயர்: **வரையறுக்கப்பட்ட சைபர்ஜென் (தனியார்) நிறுவனம்**
கம்பனி பதிவு இலக்கம்: பீவி 00225393
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 03 ஆகஸ்ட் 2020
பதிவு செய்யப்பட்ட அலுவலக விலாசம்:
இல. 1/1ஏ, பஹல இம்புள்கொட
**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

# அறிவித்தல்

**இறப்பர் பயிர்செய்கை மற்றும் மூல இறப்பர் தயாரிப்பு கைத்தொழில்**

சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம் (விதிகள் 136) பிரிவு 09 இன் கீழ் கௌரவ தொழில் அமைச்சரால், திருமதி வஜிர மாபலகம என்பவருக்குப் பதிலாக இறப்பர் பயிர்செய்கை மற்றும் மூல இறப்பர் தயாரிப்பு கைத்தொழிலின் சம்பளச் சபைகளின் ஊழியர்களின் பிரதிநிதியாக திரு.I.W.சந்ரசிரி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பதை 1971 சம்பளச் சபைகள் சட்டத்தின் 30ஆம் விதியின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**M.P.D.U.K மாபா பத்திரன**
**செயலாளர்**
**தொழில் திணைக்களம்**

**15 பெப்ரவரி 2021**
**மெஹெவர பியச,**
**கொழும்பு - 05**

## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

(துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு)

# வெற்றிடங்கள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரஜைகளிடமிருந்து, பின்வரும் தகைமைகளை மற்றும் முன் அனுபவங்களைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. தொழில்நுட்ப கண்காணிப்பாளர் பதவி - ஒப்பந்த அடிப்படை: வெற்றிடம் 01**

**தகுதிகள்** : இலங்கை, ஐக்கிய இராச்சியம், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா அல்லது அயர்லாந்து அல்லது சம்பந்தப்பட்ட சான்றிதழை ஏற்றுக்கொள்வது தொடர்பாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மற்றொரு நாட்டின் கப்பல் நிர்வாக நிறுவனத்திடமிருந்து தலைமை பொறியாளர் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

3,000 கிலோவாட் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பலுக்குச் சொந்தமான வணிகக் கப்பலில் தலைமை பொறியாளராக குறைந்தபட்சம் 02 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

கப்பல்துறை அல்லது கப்பல் நிறுவனத்தின் பழுதுபார்க்கும் நிர்வாகத்தில் குறைந்தது ஒரு வருடம் பிந்தைய தகுதி அனுபவம்

**சம்பளம்** : ரூபா. 437,500 மாதாந்த கொடுப்பனவு மேலும் அரசினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள்

**வயதெல்லை** : 60 வயது

**ஆட்சேர்ப்பு முறை** : நியமனம் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட வாரியத்தால் கட்டமைக்கப்பட்ட நேர்காணலை நடத்துவதன் மூலம்

**தொழில் தொடர்பான விபரங்கள்**

- நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் தர கையேடுகளில் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வழிமுறைகளை செயல்படுத்தல்.
- நியமிக்கப்பட்ட கப்பல்களுக்கான சட்டரீதியான மற்றும் வர்க்கத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல் மற்றும் கண்காணித்தல்
- தரமான தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்ய கடற்படை முகாமைத்துவ குழுவுடன் இணைந்து நியமிக்கப்பட்ட கப்பல்களின் செயல்திறன் மற்றும் தரத்தை முகாமைத்துவம் செய்தல்
- அரையாண்டு கப்பல் ஆய்வுகளை நடத்துதல் மற்றும் தேவைப்பட்டால், ஆய்வு அறிக்கைகளின் குறைபாடுகள், உள் அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய துறை அறிக்கைகளில் உள்ள குறைபாடுகளை கண்காணித்தல் மூலம் சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கப்பல்களின் பொதுவான பராமரிப்பைக் கண்காணித்தல் மற்றும் திட்டமிடப்பட்ட பராமரிப்பு முறை மூலம் பணிகள் மற்றும் பதிவுகள் புதுப்பித்த நிலையில் இருப்பதை உறுதி செய்தல்.
- மேம்பாடுகள் மற்றும் மாற்றங்களுக்கான பகுதிகளை அடையாளம் கண்டு, கப்பல்களின் திறமையான செயல்பாட்டிற்கான பரிந்துரைகளை வழங்கல்
- சட்டரீதியான தேவைகள் மற்றும் நிறுவனத்தின் தரங்களுக்கு ஏற்ப அனைத்து உதிரி பாகங்கள் மற்றும் சேவைகளை சரிசெய்ய ஏற்பாடு செய்தல்.
- ஒதுக்கப்பட்ட கப்பல்களுக்கு பழுதுபார்ப்பு மற்றும் நவீன மாற்றங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் நீர்நிலைகளில் வடிவமைத்தல் மற்றும் அது தொடர்பில் தலையிடுதல்.
- கப்பல் பழுதுபார்த்தலில் ஈடுபட்டுள்ள அனைத்து மூன்றாம் தரப்பினரும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான நிறுவனத்தின் கொள்கைக்கு இணங்குவதை உறுதி செய்ய கப்பல் முகாமைத்துவ குழுவுடன் இணைந்து பணியாற்றுதல்.
- அவதானமாக கண்காணிக்கப்பட்ட பகுதிகளை பழுதுபார்த்து இறுதியாக உறுதிசெய்தல்.
- இயங்கும் வரவு செலவுத் திட்டங்களின் வளர்ச்சியைக் கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்
- தர முகாமைத்துவ அமைப்பின் வளர்ச்சியில் பங்கேற்று, துறைசார் நடைமுறைகளை தொடர்ந்து மேம்படுத்துவதற்கான செயல்பாட்டில் இணைதல்.
- விசாரணைக் குழுவின் ஒரு பகுதியாக விசாரணைகளுக்கு உதவுதல்.

**மேலதிக பிரதிலாபங்கள்**

1. ஊ.சே.நி / ஊ.ந.பொ.நி
2. வெளி மற்றும் உள் சிகிச்சைகளுக்கான அறுவை சிகிச்சைகளுக்கான மருத்துவமனை காப்பீட்டு பாதுகாப்பு
3. முழுமையான தனிநபர் விபத்து காப்பீட்டு

**பொதுவான வழிமுறைகள்**

- அனைத்து விண்ணப்பங்கள் / விண்ணப்பதாரர்களினால் உண்மையான பிரதியாக உறுதி செய்யப்பட்ட கல்வி/ தொழில் சார் சான்றிதழ் பிரதிகளுடன் பிறப்பு சான்றிதழ், வேறு பொருத்தமான சான்றிதழ்கள் மற்றும் தம்மைப் பற்றி விபரங்கள் அறியக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் பதிவுத்தபால் அல்லது பின்வரும் இணைய முகவரி **hr@cscl.lk** **2021 பெப்ரவரி 23 ஆம் திகதிக்கு** முன் தலைவர் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- தயவு செய்து விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடவும்.
